NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
WE OFFER SERVICES IN:
Real Estate
Corporate Law
Litigation
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law

July 2018
# உகுருவி
ekuruvi.com
$1 WOW!


Bring your parents & Grandparents worry free!
SuperVisa.
Today
416 321 6000
support@supervisa.today

## ஈழத்தில் அதிகரிக்கும் குற்றசெயல்கள்




## நகரசபைத் தேர்தலும் தமிழர்களும்...



**பத்திரிகை சிவப்பு உண்டியல் ஒரு டொலர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org















































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ekuruvi.com
www.ekuruvi.com
Tel: 416-272-8543
Email: ekuruvi@gmail.com

# பத்திரிகை விற்பனை

வாசிப்பதால் மனிதன் பூரணம் அடைகிறான். நேசிப்பதால் மனிதன் பரிபூரணம் அடைகிறான். ஒரு டொலர் உண்டியலிடுவதால் போரோடிய மக்கள் புது வெளிச்சம் பெறுவார்கள்.

கனேடியத் தமிழர்களே! வாசிப்பின் நேசிப்பாளர்களே! உங்கள் வாசிப்பின் ஆரோக்கியமே இகுருவி பத்திரிகையை உங்கள் உள்ளங் கைகளுக்கும் உள்ளங்களுக்கும் மாதா மாதம் எடுத்துவரும் ஊட்டச்சத்தை எங்களுக்கு வழங்குகிறது.

எங்களுக்கும் இகுருவி இன்னும் உயரப் பறக்க வேண்டும் என்ற கனவுகள் நிறையவே உண்டு அது சாத்தியமாவதற்கு "இலவசம்" என்னும் தரிப்பிடத்தில் இருந்து நகர முடிவு செய்தோம். விழைவு, கடந்த மாதம் முதல் இகுருவிப் பத்திரிகையானது ஒரு டொலர் என்னும் பெறுமதி தாங்கி வெளிவருகிறது.

வர்த்தக நிறுவனங்கள் தோறும் எமது சிவப்பு உண்டியல்கள் இகுருவிப் பத்திரிகை அருகில் கரம் கூப்பி உங்களின் ஒவ்வொரு டொலர்களையும் அன்போடு பெற்றுக் கொள்கிறது. சென்ற மாதத்து கன்னி முயற்சியிலும் உங்கள் அன்பினாலும், ஆதரவினாலும் சிவப்பு உண்டியல்களை மகிழ்வித்தீர்கள்.

தொடர்ந்தும் உங்களின் ஒவ்வொரு டொலரையும், உங்களோடு இணைந்தே பயன்பாடு தரும் இகுருவியில் விதையாய் விட்டுச் செல்வோம். இவ்விதையானது எங்களை சுகதேசங்களுக்கு அனுப்பி வைத்து விட்டு போர்கண்ட மக்களின் இன்றைய வாழ்வாதாரத்தை வலுச்சேர்க்க வசதி புரியும்.

அதற்காக நன்கொடையாகவோ, மேலதிகமாகவோ உங்களிடம் இந்த ஒரு டொலரை கேற்கவில்லை. பத்திரிக்கைக்குரிய பெறுமதியை மட்டும் போடுங்கள். உங்களிடம் இதற்கு கொடுக்கும் விருப்பம் இல்லாவிட்டால் தயைகூர்ந்து இதை இலவசமாக எடுப்பதை தவிர்த்து விடுங்கள். இந்த பத்திரிகையை எடுப்பதற்காக பலகாத தூரத்திலிருந்து ஒருவர் வருவார். வீண் விரயங்களை தடுக்கலாம். நாம் பத்திரிகையை விற்பனை செய்ய விரும்புகின்றோம், அதற்கு உங்கள் ஆதரவை வேண்டிநிற்கிறோம்.

ஒவ்வொருநாளும் நாம் அளவுக்கதிகமான உணவுகள், உடைகள், குடிநீர் என எத்தனை விடயங்களை கழிவுத்தொட்டி நோக்கி கையாட்டி விடுகிறோம். பாவிக்க ஆள் இன்றி எத்தனையோ கையடக்க சாதனங்கள் என்பன பணம் விரையமாக்கப்பட்டு வீண்போகின்றது. இதே வேளை உங்களின் உறவுகள் அவர்களின் அடிப்படை வாழ்க்கைக்காக உலகமெல்லாம் மடிப்பிச்சை கேட்கிறார்கள். அவர்களை மனதில் கொண்டு ஓர் புதிய வெளிச்சம் உருவானது. அவர்களின் புதிய வெளிச்சத்துக்காய் ஓர் சிவப்பு உண்டியல் உருவாகி உள்ளது. இகுருவி என்னும் நல்லதோர் படைப்புச் செய்து நலன் தரும் பணி விடை தாயகத்தில் விதைத்திடுவோம்.

போர் விடைபெற்று ஒன்பது ஆண்டுகள் உருண்டோடி விட்டன. வடுக்களும், வலிகளும் மட்டுமே அத்தேசத்தில் மிஞ்சிக் கிடக்கிறது. தமிழர் அரசியல் தரப்பினர் அரசியலை மட்டுமே நம்பி தமது தனிப்பட்ட வாழ்க்கையில் கவனம் செலுத்தி வாழ்க்கை நடாத்துகிறார்கள். ஒவ்வொரு தேர்தல் காலத்திலும் ஒருவர் விடிவெள்ளி முகமூடியுடன் வந்து தமிழர் வாக்குகளால் வெற்றியீட்டிச் சென்று விடுகிறார். பின்னர் விடிவெள்ளி தேய்ந்து தமிழர்களுக்கு விட்டுச் செல்வது வரலாறாகி விட்டது.

அல்லது வரப்போகும் தேர்தலை தனக்குச் சாதகமாக்க வேண்டுமென்பதற்காக திருமதி.விஜயகலா மகேஸ்வரன் போன்றவர்கள் விடுதலை புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் துணைக்கு அழைப்பதும் இன்றைய இலங்கை அரசியலில் முக்கிய துன்பியல் சம்பவங்களில் ஒன்றாகி விட்டது. இவர்களை எல்லாம் கடந்தே நல்ல உள்ளம் கொண்ட புலம் பெயர் மக்கள் பாதிக்கப்பட்ட எமது உறவுகளுக்கு உதவி புரிய வேண்டியுள்ளது. இதில் புதிய வெளிச்சம் விதிவிலக்கானதல்ல. எங்கள் பயணங்களும் சவால்களை எதிர்கொண்டே பயணிக்கின்றது.

ஆகவே ஒரு டொலரும் சிவப்பு உண்டியலும் ஒரு சமூகத்தின் வாசகர் சாலையை உருவாக்கட்டும். அதுவே தாயகத்தில் புதிய வெளிச்சத்தையும் உருவாக்கட்டும். தனித்து நின்றாலும் சில எழுத்துகளுக்கு பொருள் உண்டு, தனிமரமாக நின்றாலும் ஊருக்கே நிழல் கொடுக்கும் செயல் திறன் உண்டு, ஒரு டொலராக இருந்தாலும் துயர் துடைக்கும் திறன் உண்டு.

## இந்த இதழில்....

வரவிருக்கும் நகரசபைத் தேர்தலும், தமிழர்களின் ஈடுபாடும்! -குயின்ரஸ் துரைசிங்கம்

ஈழத்தில் அதிகரித்து செல்லும் குற்றச்செயல்கள் கூறிய வழியுண்டா ? - தர்ஷினி உதயராஜா

சாமத்திய வீட்டு நேரடி ஒளிபரப்பு - சரவணன்

தேர்தல் அரசியலுக்கான ஒற்றுமையும் கொள்கை அரசியலுக்கான ஒற்றுமையும் - யதீந்திரா

மக்கள் நலம் - சரவணன்

நாவற்குழியில் திருவாசக அரண்மனை - லலீசன்

கோலங்களின் திருவிழா - மோகன்

சிங்கிள் மாம் - பாமா

மனித உரிமை பேரவை விலகலும் கொண்டுவரப்பட்ட தீர்மானமும் - நளினி ரட்ணராஜா

சீனர்கள் அமெரிக்காவில் முதலாளிகளாக ஆப்பு - சந்திரன்

நானும் சுனாமியும் - Roshita Spaulding

நரம்பு சுருட்ல் - எழில்மதி பாலசந்திரன்

கனடா தமிழர்களின் தற்போதிய நிலைப்பாடு - குரு அரவிந்தன்

மனுசங்கடா - ரதன்

கனேடிய தொலைபேசிகளுக்கு தொல்லைதரக் காத்திருக்கும் அமெரிக்க எல்லை - சிவமணி

இயல் விருது விழா- 2018 - நான் சின்னச் சின்ன விசயங்களால் ஆன மனிதன்: வண்ணதாசன்!

ஒரு டொலரும் சிவத்த உண்டியலும்

இகுருவி பத்திரிகை ஒரு டொலர் அறிமுகம்

கருத்துக்களும் புகைப்படங்களும்

500 ஆவது நாளைப் பூர்த்தி செய்யும் காணாமலாக்கப்பட்ட குடும்பங்களின் போராட்டம்! டொரோண்டோ கவனயீர்ப்பும்

பத்து ஆண்டுகள் காட்டாச்சி நடாத்திய இராசபக்சா குடும்பத்தைச் சேர்ந்த கோத்தபாயா அடுத்த சனாதிபதியா? - நக்கீரன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 500 ஆவது நாளைப் பூர்த்தி செய்யும் காணாமலாக்கப்பட்ட குடும்பங்களின் போராட்டம்! டொரோண்டோ கவனயீர்ப்பும்

கடந்த யூலை மாதம் 30ம் திகதி டொரோண்டோவில் தொடர்ச்சியாகப் போராடி வரும் காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்கள் போராட்டத்தின் 500 வ தொடக்கம் 3 மணிவரை நடைபெற்றது.

மாசி 19, 2017, போர் நிறைவுற்று 9 வருடங்களின் பின்பு, காணாமற் போனோர் தொடர்பான எந்தவொரு நடவடிக்கையும் இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப் படாத சூழ்நிலையில், விரக்தியடைந்த காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்கள் தொடர்போராட்டத்தை முன்னெடுக்கத் தொடங்கினர்.

இப்போது, இக்குடும்பங்களின் போராட்டங்கள் இரவு பகலாக பெரும் பருவமழைக் காலங்களிலும், எரிக்கும் வெய்யிலிலும், நுளம்புக்கடி மற்றும் தூசி அனைத்தையும் எதிர்கொண்டு சாலையோரத்தில் 500 நாட்களை எட்டவுள்ளபோதும், இன்னும் இவர்கள் விடைகளின்றித் தவிப்பதுடன், இலங்கை அரசாங்கத்தால் உதாசீனம் செய்யப்படுவதுடன், ஜனாதிபதி சிறிசேன ஆரம்பத்தில் இக்குடும்பங்களுக்குக் கொடுத்த வாக்கையும் நிறைவேற்றத் தவறியுள்ளார்.



தமது அன்புக்குரியவர்கள் எங்கே என்று பல வருடங்களாகக் கேட்டுக் கொண்டிருக்கும் இத்தாய்மார்களும் தந்தைமார்களும், மனைவியரும், கணவர்களும், பிள்ளைகளும் விடை கிடைக்க வேண்டியவர்கள். அவர்களது கோரிக்கைளை விரைவில் நிறைவேற்ற வலியுறுத்தியும் துணிச்சலும் ஓர்மமும் மிக்க இக்குடும்பங்களுக்குத் தோள் கொடுக்கவும் இந்நிகழ்வு டொரோண்டோ உற்பட லண்டன், நியூயோர்க், சூரிச், பெர்லின் ஆகிய நகரங்களிலும் நடைபெற்றது. டொரோண்டோவில் தர்ஷா ஜெகதீஸ்வரனால் ஒழுங்கு செய்யப்பட்ட்து. இவர் சட்டத்துறையில் பட்டம்பெற்று தாயகத்துக்கு சென்று சுமார் ஒருவருடம் அடையாளம் எனும் மனித உரிமை தொடர்பான வேலைதிட்டங்களை தொடர்ச்சியாக செய்துவருபவர்

டொரோண்டோவில் நடைபெற்ற இந்நிகழவில் சுமார் 100 க்கு உற்பட்ட பல்லினமக்களும் கலந்துகொண்டு தமது ஆதரவை தெரிவித்தார்கள். அனைத்து அமைப்புக்களும் இந்நிகழவுக்கு ஆதரவு கொடுத்தும் பெருமளவு மக்கள் இந்நிகழ்வில் பங்குகொள்ளாமை காலத்தின் துரதிஸ்ட்டம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவிருக்கும் நகரசபைத் தேர்தலும் தமிழர்களின் ஈடுபாடும்!




**2014 நகரசபை தேர்தல் மற்றும் கல்விச் சபை தேர்தலில் போட்டியிட்ட தமிழர்களும், அன்றைய இகுருவி பத்திரிகையின் அட்டைபடமும்..**

ஜனநாயகம் என்று நாம் மிக அதிகமாகப் புகழ்ந்துகொண்டாலும், இதற்குப்பின்னே நடப்பதெல்லாம், சுயநல அரசியல் நாடகங்கள் தான் என்பதை, அரசியல் ஆய்வாளர்கள் கூட ஒத்துக்கொள்ளவே செய்கிறார்கள்.

யாழ் மண்ணில் வாழும் தமிழறிஞர் அருட்கலாநிதி அ.பி.ஜெயசேகரம் அவர்கள் எழுதிய ஜனநாயக விழுமியங்கள் பற்றிய ஆய்வுக் கட்டுரையொன்றில், ஜனநாயகம் பற்றி இவ்வாறு எழுதுகிறார்:

"ஜனநாயகம், தன்னிறைவு கொண்ட அறநெறி முறைமையல்ல, (not self sufficient moral system) அதாவது ஜனநாயக முறைமைகளைப் பயன்படுத்துகையில், தீர்வுகள் தானாக வந்துவிடும், புரையோடிய பிரச்சினைகள் மறைந்துவிடும் என்று நம்புவதற்கில்லை.

ஜனநாயகம் ஒரு ஊடகம். அறநெறிக்கும் மனித உரிமைக்கும் எதிராக பெரும்பான்மையினரது பராக்கிரமத்தினால்; சிறுபான்மையினர் உரிமைகளை இழக்கவைக்கக்கூடிய ஓட்டைகளைத் தன்னகத்ழி;த கொண்டது அது. மக்களின் வாக்;குரிமைகளைப் பெற்று முகிழும் அரசியல் சார் ஜனநாயகத்தின் ; (Political democracy)உயிரோட்ட வளர்ச்சிக்கு மூலவிசை சமூகநீதி சார் ஜனநாயகம் (Social democracy)" என்று எழுதுகிறார்.

ஆக, ஜனநாயகம் என்பது ஒரு தீர்வு அல்ல, அது ஒரு முறைமை மட்டுமே என்கிறார் ஆசிரியர்.

**வரவிருக்கும் நகரசபைத் தேர்தலில் ஈழத் தமிழர்களின் நிலை:**

எதிர்வரும் ஒக்ரோபர் 22ம் திகதி, ரொறன்ரோ பெரும்பாகத்தின் பல நகரசபைகளிலும் தேர்தல் நடைபெறவிருக்கிறது. நகரபிதாவையும், நகரசபை உறுப்பினர்களையும் தெரிவுசெய்யும் இந்தத் தேர்தலில், கல்விச்சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படுவார்கள்.

ரொறன்ரோ பிராந்தியத்தில், கடந்த தேர்தலில் 44 நகரசபை உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். மக்கள் தொகை அதிகரிப்பு மற்றும் எல்லை மாற்றங்கள் காரணமாக, இம்முறை 3 தொகுதிகள் அதிகரிக்கப்பட்டு, 47 நகரசபை உறுப்பினர்கள் தெரிவாகவுள்ளனர்.

மார்க்கம் தொகுதியையும் உள்ளடக்கிய யோர்க் பிராந்தியத்தில், மார்க்கம் நகரசபைக்கு 8 உறுப்பினர்களுடன் 1 பிராந்திய சபை உறுப்பினரும், நியூமார்க்கட், றிச்மன்ட்ஹில், ஸ்ரோவில், வோர்ன், ஒறோறா, கிங், ஜோஜினா, குவிலிம்பெறி போன்ற ஏனைய நகரசபைகளுக்கான உறுப்பினர்களும் தெரிவாகவுள்ளனர்.

டூறம் பிராந்தியத்தில், ஏஜெக்ஸ், பிக்கறிங், உக்[illegible] புறொக், கிளாறிங்ரன், ஸ்கூகொக் ஆகிய நகரசபைகளுக்கு, நகரசபை மற்றும் பிராந்தியசபை உறுப்பினர்களும், கல்விச்சபை உறுப்பினர்களும் தெரிவாகவுள்ளனர்.

பீல் பிராந்தியத்தில், மிசிசாகா, பிராம்டன், கலடன் ஆகிய நகரசபைகளுக்கு, நகரசபை மற்றும் பிராந்தியசபை உறுப்பினர்களும், கல்விச்சபை உறுப்பினர்களும் தெரிவாகவுள்ளனர்.

தமிழர்களைப் பொறுத்தவரை இந்தப் பிராந்தியங்கள் அனைத்தும் நகரசபை மற்றும் கல்விச்சபைக்குப் போட்டியிடுவதற்கான அதிகரித்த கவனத்தைப் பெறும் பிரதேசங்களாகக் குறிப்பிடலாம்.

பீல்பிராந்தியத்தைப்பொறுத்தவரை, பிராந்திய தலைமையதிகாரி (Regional Chair) ஒருவரும் மேலதிகமாகத் தெரிவுசெய்யப்படுவார். இந்தப் பதவிக்கு இம்முறை பற்றிக் பிரவுண் போட்டியிடுவதற்கான முயற்சிகளில் இறங்கியிருப்பதாக உத்தியோகப்பற்றற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன. ஒன்ராரியோ முன்போக்கு பழமைவாதக் கட்சியின் தலைவராக இருந்து, பாலியல் குற்றச்சாட்டு தொடர்பாக பதவி விலகிய பின்னர், பீல் பிராந்திய தலைமையதிகாரிக்கான போட்டியில் குதிப்பதற்கான தனது விருப்பை வெளிப்படுத்தியுள்ளார்.

ரொறன்ரோ பெரும்பாகத்தையும் அதன் சுற்றுப்புற பிராந்தியங்களையும் உள்ளடக்கிய பிரதேசத்தில், சுமார் இரண்டரை இலட்சத்திலிருந்து 3 இலட்சம்ஈழத்தமிழர்கள் வாழ்கிறார்கள் என்று கணிப்பிடப்படுகிறது. எனவே கனடியப் பல்லினச் சமுதாயக் கட்டமைப்பில், கனேடிய தேசிய நீரோட்டத்திற்கு ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்கும் ஒரு பலமான சக்தியாக வளர்ச்சி பெற்றுப் பங்களிப்பு வழங்குவதற்கான இன்னுமொரு படியாகவே இத் தேர்தலை நாம் எடுத்து நோக்க வேண்டியுள்ளது.

தமிழினம் கனடாவிற்குப் புலம்பெயர்ந்து 35 வருடங்களிற்கும் மேலாகி விட்டது. ஆனால் அரசியல் வளர்ச்சி என்று பார்த்தால், கடந்த வருடம்வரை, இருவர் மத்திய அரசிலும், இருவர் நகரசபையிலும், இருவர் கல்விச் சபையிலும் அங்கம் வகித்துள்ளனர். இவ்வருடம் அண்மையில் இடம்பெற்ற மாகாணசபைக்கான தேர்தலில், இரு தமிழர்கள் தெரிவாகியுள்ளனர். இந்த இலக்கங்களை வைத்துப் பார்த்தால், கனடிய அரசியலில், ஈழத்தமிழர்கள் பலமாகக் காலூன்றியிருப்பதாகவோ, இறுக்கமான பின்னணியைக் கட்டியெழுப்பியிருப்பதாகவோ கொள்ளமுடியாதுள்ளது. இந்நிலையில், ஒக்ரோபர் மாதத்தில் நடக்கும் நகரசபைத் தேர்தல்களில் மேலும் பல தமிழர்கள் தெரிவாகுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

சுமார் 80க்கு மேற்பட்ட மொழி பேசுபவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய ரொறன்ரோ பெரும்பாகத்தில் ஆங்கிலத்திற்கு அடுத்தபடியாக முதன்மையாகப் பேசப்படுகிற சுமார் பத்து மொழிகளில் தமிழும் ஒன்று என்கிறது அரசதரப்பு தகவல்கள். இந்தத் தரவுகளைப் பின்புலத்தில் ஆராய்ந்தறிந்த பல அரசியல் பிரமுகர்கள், தமக்கான ஆதரவைப் பலப்படுத்திக்கொள்ள தமிழ் விழாக்களைப் பயன்படுத்துகிறார்களே ஒழிய, தமிழ் பிரமுகர்களை, காத்திரமான பங்காளிகளாக மாற்றவேண்டும் என்பதில், அத்தனைதூரம் ஆர்வம் காட்டியதாக இல்லை.

**மார்க்கம் நகரசபை**

ரொறன்ரோ பெரும்பாகத்திலும் அதை அண்டிய பிரதேசங்களிலும் பல நகரசபைகள் இருந்தாலும், மார்க்கம் நகரசபைக்கான தேர்தலில் அதிகபட்ச தமிழர்கள் களமிறங்குவதை கடந்தகால தேர்தல்களில் அவதானிக்கக்கூடியதாக இருந்தது. இவ்வருடம் ஒக்ரோபரில் நடைபெறவுள்ள நகரசபைத் தேர்தலிலும் ஏற்கனவே பல தமிழர்கள் தங்கள் பெயர்களைப் பதிவுசெய்துள்ளதை அவதானிக்க முடிகிறது.

2014ல் இடம்பெற்ற நகரசபைத் தேர்தலின்போது, ரொறன்ரோ மற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்கம் நகரசபைகளில் மொத்தம் 28 தமிழர்கள் போட்டியில் குதித்தார்கள். இப்படிக் குதித்தவர்களில் சிலரைத் தவிர ஏனைய அனைவரும் தமிழ் சமூகத்துக்குப் புதியவர்களே. புதியவர்கள் என்று இங்கே கூறும்போது, சமூகத்திற்கான செயற்பாடுகள் எதிலுமே கலந்துகொள்ளாத, சமூகத்திற்கென தங்கள் நேரத்தையோ நிதியையோ சேவையையோ வழங்காத பலரும், தங்கள் சொந்த விளம்பரத்திற்காக, வர்த்தக பிரச்சாரத்திற்காக, பெயர் புகழுக்காக அல்லது வெறுமனே பணம் இருப்பதற்காக மட்டுமே தேர்தலில் குதித்தவர்களாக இருந்தமை, ஒட்டுமொத்தத் தமிழர்களும் அவசியம் கவனத்தில் எடுத்து குரல்கொடுக்கவேண்டிய விடயமே.

நகரசபை உறுப்பினர் (கவுன்சிலர்) அல்லது கல்விச்சபை உறுப்பினருக்குப் போட்டியிடுவதற்கான கட்டணம் வெறும் 100 டொலர்கள் மட்டுமே. அத்துடன், அந்நபர் கேட்கும் வட்டாரத்தில் வாழும் 25 பேரிடம் அந்நபரை ஆதரிப்பதற்கான கையொப்பம் பெற்றால் போதுமானது. அரசியலில் குதிப்பதற்கும் தேர்தலில் நிற்பதற்கும் யாருக்கும் உரிமை இருக்கிறது என்பது உண்மைதான்.




ஆனால், ஒரு தனிநபர் அரசியலில் குதிப்பதற்கும், ஒரு ஈழத்தமிழர் அரசியலில் குதிப்பதற்கும் அடிப்படையில் சில வேறுபாடுகள் உள்ளன. ஈழத்தமிழர் என்று வரும்போது, அவர்கள் அரசியலில் புறக்கணிக்கப்பட்ட, அரசியல் உரிமைகள் வலிந்து பறிக்கப்பட்ட, இனஅழிப்பிற்குள்ளான ஒரு இனத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துபவர்கள்.

அந்த வலியைப் புரிந்துகொண்டு, அப்படிப் பாதிக்கப்பட்ட இனத்திற்கு மேலும் தீய பெயரைச் சம்பாதித்துக் கொடுக்கும் வகையில் எந்த ஒரு ஈழத்தமிழர் செயற்பட்டாலும் அது தவறான முயற்சியே.


ஒரு அரசியல் பதவிக்குப் போட்டியிடுவதாக முடிவெடுத்தால், அதற்கான சில முன்கட்ட முயற்சிகளை முன்னெடுப்பது அவசியம். சமூக சேவை, சமூகரீதியான செயற்பாடுகள், சமூகத்தின் நன்மை சார்ந்த முன்னெடுப்புக்கள் என்ற வகையில் சிலவற்றில் ஈடுபடலாம். அல்லது, மைய நீரோட்டத்துடன் சார்ந்ததாக, கனடிய சமூக அமைப்புக்களில் செயற்படுவது, கனடிய சமூகங்களுடனான உறவை வளர்த்துக் கொள்வது, தேர்தலில் நிற்கப்போகின்ற தொகுதியிலுள்ள அரசியல் பிரமுகர்களுடன் அல்லது குழுக்களுடன் தொடர்புகளை உருவாக்கி, சில தேர்தல் பணிகளில் ஈடுபட்டு பயிற்சியெடுப்பது, ஆங்கிலத்தில் பேச்சாற்றலை வளர்த்துக்கொள்வது என்று பல வீட்டுவெலைகளை முற்கூட்டியே செய்து, அரசியலுக்கான தயார்நிலைக்கு வருவது முக்கியமானது.

எந்தவொரு சமூகப்பணியிலும் ஈடுபடாமல், சமூக செயற்பாடுகளில் பங்கேற்காமல், தமிழர் தவிர்ந்த ஏனைய சமூகங்களுடன் எந்தத் தொடர்பையும் உறவையும் உருவாக்காமல், திடீரென எங்கிருந்தோ அரசியலில் குதித்து பெயரெடுக்க முயற்சிப்பது, தவறான அரசியல் முன்னெடுப்பு மட்டுமல்ல, தான் சார்ந்த சமூகத்திற்கு அவப்பெயரைக் கொண்டுவருகின்ற முயற்சியும் கூட.

இதைவிட மோசமான விடயம் என்னவென்றால், இப்படி தேர்தலில் குதித்தவர்கள், தேர்தல் முடிந்தபின்னர் ஒட்டுமொத்தமாகக் காணாமல் போய் விடுவதும், அடுத்த தேர்தலில் மீண்டும் திடீரென ஞானம்பெற்று மீளத் தோன்றுவதுமாகும். முதற்தடவை தேர்தலில் குதித்தபோது தோல்வியைத் தழுவினாலும், தொடர்ந்து அரசியலில் ஈடுபடும் ஆர்வம் இருந்தால், அப்போதிருந்தே பல்லின மக்களுடன் தொடர்புகளை உருவாக்குவதும், தொடர்ந்து சமூகப் பணிகளில் ஈடுபடுவதும், பொது நிகழ்வுகளில் கலந்துகொள்வதும் மிக முக்கியமானது.

2014ல் தேர்தலில் குதித்த 28க்கும் அதிகமானவர்களில் ஒரு சிலர் மட்டுமே தேர்தலின் பின்னரும் சமூகத்துடன் இணைந்து பயணித்தவர்கள். ஏனையவர்கள் பலரும் உடனடியாகவே சமூகத்துடனான தங்கள் தொடர்புகளைத் துண்டித்ததுடன், கனடிய மைய நீரோட்டத்துடன் இணைந்து பயணிக்கவோ, கனடிய சமூக செயற்பாடுகளில் ஈடுபடவோ எந்தவித ஆர்வமோ அக்கறையோ காட்டாதவர்கள்;. தமிழர் நிகழ்வுகளில்கூட இவர்களில் பலரையும் காணக் கிடைப்பதில்லை. தேர்தலில் நிற்கும் தொகுதியில் வாழும் தமிழர்களின் வாக்குகளை பிரதானமாகக் குறிவைத்துத் தேர்தலில் குதிப்பது மட்டும் நியாயமானது, ஆனால் தமிழர்களுக்கான சமூக செயற்பாடுகளில் ஈடுபடுவது அவசியமற்றது என்று நினைப்பது தவறானது.

தமிழர்களுடனான சமூக செயற்பாடுகளில் ஈடுபடுவதும் தமிழர் நிகழ்வுகளில் கலந்து கொள்வதுமே கனடிய அரசியலுக்கு அவசியமானது என்பது எனது வாதமல்ல. அது கட்டாயத் தேவையுமல்ல. அரசியலில் குதிக்கும் ஒருவர், அந்தத் தொகுதியில் பொதுப் பணியில் ஈடுபடுவதும், மக்களிடம் தன்னை இனம் காட்டுவதும், சமூக விடயங்களையும் அரசியல் செயற்பாடுகளையும் நன்கு அறிந்தவராகவும், பொதுப் பணிகளில் ஈடுபடும் ஆர்வம் கொண்டவராகவும், மக்கள் பணி [illegible]




கொண்டவராகவும் இருப்பது அவசியமானது. இது தமிழர்களுடனான பணியாக இருக்கவேண்டுமென்ற அவசியமில்லை. பொதுமக்களுடனான பணிகளாக இருப்பது மிகவும் முக்கியமானது.

தனியாக தமிழர்களின் வாக்குகளை மட்டுமே நம்பி களமிறங்குவதும் தவறானதே. ஒரு தொகுதியில் வாழும் ஏனைய நாட்டவர்களும் ஓரளவுக்கு அறிந்த நபராக, ஏற்கனவே கேள்விப்பட்ட பெயராக இருப்பதுடன், அந்நபர் செய்திருக்கக்கூடிய சமூகப் பணிகளும் அவரது தகுதிகளும், ஏனைய நாட்டவர்களாலும் பாராட்டப் படக்கூடிய, ஏற்றுக்கொள்ளக்கூடிய, அல்லது ஆகக்குறைந்தது குறைசொல்லமுடியாத நிலையில் தனக்கான ஒரு பெயரை உருவாக்கி வைத்திருப்பது அவசியமானது.

இவ்வருடம் ஒக்ரோபரில் வருகின்ற நகரசபைத் தேர்தலில் குதிக்கும் நம்மவர்கள் உட்பட, கனடிய அரசியலில் தம்மை இணைக்க விரும்புவோர், இப்போதிருந்தே இத்தகைய சமூக செயற்பாடுகளில் இறங்குவது அவசியம்.

கடந்த காலங்களில் அரசியலில் குதித்தவர்கள், தொடர்ந்தும் சமூக செயற்பாடுகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதும், இம்முறை குதிப்பவர்கள் இனிவரும் காலங்களில், தோல்வி—வெற்றி என்பதைக் கடந்து, சமூக செயற்பாடுகளில் ஈடுபடுவதுடன், பொது நிகழ்வுகளில் தொடர்ந்து பங்கேற்று, மக்களுடனான தொடர்பில் இருப்பதும் முக்கியமானது. இவற்றுடன், அரசியலில் களமிறங்கி, மக்களின் பிரதிநிதியாக குரல்கொடுக்க முடிவெடுத்தால், அதற்கான கல்வித் தரத்தையும், மொழி ஆளுமையையும், உலக—கனடிய அரசியல் நிலவரங்களையும், அரசியல் பிரமுகர்களுடனான தொடர்புகளையும் தொடர்ச்சியாக உருவாக்குவதே, நீண்டகாலத்தில் நிரந்தர அரசியல் வெற்றிகளைக் கொண்டுவரும்.

அரசியலில் குதிக்கும் அனைவருக்கும், வெற்றிக்கனியைத் தட்டிப்பறிக்க மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

**குயின்ரஸ் துரைசிங்கம்**

## கனடாவாழ் வேலணை மாணவர்களிற்கான புலமைப்பரிசில் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வேலணை மக்கள் ஒன்றியமானது, கடந்த சில ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக வேலணையில் உள்ள மாணவர்களின் கல்விச்செயற்பாடுகளுக்கு ஆதரவு வழங்கிவருகின்றமையினை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

அச்செயற்பாடுகளின் தொடர்ச்சியாகக், கனடாவில் புலம்பெயர்ந்து வாழ்கின்றவேலணையைப்பூர்வீகமாகக்கொண்டமாணவர்களினதும்கல்விச் செயற்பாடுகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில், நன்கொடையாளர்களின் அனுசரணையோடும் ஆர்வலர்களின் வேண்டுதல்களுக்குமேற்ப, உயர்தரவகுப்புகளில் அதிகூடிய பெறுபேறுகளைப் பெற்றுப் பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்களுக்கான புலமைப்பரிசில்திட்டம் ஒன்றினை இந்த ஆண்டிலிருந்து அறிமுகப்படுத்தியிருக்கின்றோம் என்பதைப் பேருவகையுடன் அறியத்தருகின்றோம்.

இப்புலமைப்பரிசில்த் திட்டமானது, இங்கே வாழும் இன்றைய இளஞ்சந்ததியினரும் எதிர்வரும் காலங்களில் வேலணைப்பிரதேசத்தின் வளர்ச்சியில் பங்கேற்பதனை ஊக்குவிக்குமென நம்புகின்றோம்.

**முதலாவது அதிகூடிய பெறுபேற்றுக்கு $3000.00 CAD புலமைப்பரிசிலும்**

**இரண்டாவது அதிகூடிய பெறுபேற்றுக்கு $2000.00 CAD புலமைப்பரிசிலும்**

**மூன்றாவது அதிகூடிய பெறுபேற்றுக்கு $1000.00 CAD புலமைப்பரிசிலும்**

**அடுத்த ஏழு அதிகூடிய பெறுபேறுகளுக்கும் தலா $500 CAD புலமைப்பரிசிலும் வழங்கப்படும்.**

இப்புலமைப் பரிசிலிற்கு விண்ணப்பிக்க விரும்புவோர், விண்ணப்பப்படிவத்தினையும் மேலதிக விபரங்களையும் எமது இணையத்தளத்தில் (www.velanai.com) பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தினைப் vpoglobal@gmail.com என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு செப்ரம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

நன்றி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தில் அதிகரித்துச்செல்லும் குற்றச்செயல்கள் குறைய வழியுண்டா?

ஈழத்தில் கொடிய யுத்தம் நடைபெற்று 10 வருடங்கள் நிறைவடையவில்லை. அதற்குள்ளே தமிழர் தம்மைத் தாமே அழித்துக்கொள்ளும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர், இவற்றில் பெருமளவு — நமது தமிழ்ச் சமூகத்தினாலேயே நடத்தப்படுகின்றது என்பது தான் வேதனையான உண்மை.

சில முக்கியமான எம்மவர் சம்பந்தப்பட்ட குற்றச் செயல்களின் பட்டியல்

25 - 6 -2018

யாழ். சுழிபுரத்தில் 6 வயது ரெஜினா, கழுத்து நெரித்து கொலை செய்யப்பட்டு கிணற்றில் இருந்து சடலமாக மீட்பு

21- 6 - 2018

அருகி வருவதும், தமிழீழத்தின் தேசிய விலங்குமான சிறுத்தை ஒன்றை இளைஞர் பலர் சேர்ந்து சித்திரவதை செய்து அடித்துக் கொன்று அதனைக் கொண்டாடி மகிழ்வு.

14 - 6 - 2018

தேராவில், விசுவமடுவில் 23 வயது மயூரன் துளசி, வாக்குவாதத்தின் இறுதியில் கணவரால் எரித்துக் கொலை.

23 - 1 - 2018

யாழ் ஆனைக்கோட்டையில் 72 வயது ஜெகநாதன் சத்தியபாமா, (பணத்துக்காக?) அடித்துக் கொலை.

19 - 1 - 2018

யாழ் வண்ணார்பண்ணையில் தாயைக் கோடரியால் வெட்டச்சென்ற மகன் தாக்கியதில் தாய் படுகாயம், சகோதரனின் 3 வயது மகள் இறப்பு

1 - 1 - 2018

சண்டிலிப்பாயில் 20 வயது ஆனந்தராஜா ஆனந்தபாபு, அடிகாயங்களோடு கிணற்றில் இருந்து சடலமாக மீட்பு

24 - 1 - 2017

யாழ் சுருவில் பகுதியில் 7 மாத கர்ப்பிணி ஹம்சிகா, பலமாக தாக்கியும், வெட்டியும் படுகொலை.

16 - 2 - 2016

வவுனியா, உக்குளாங்குளம் 13 வயது ஹரிஷ்ணவி, வன்புணர்வின் பின்பு தூக்கிட்ட நிலையில் சடலமாக மீட்பு

14 - 5 - -2015

யாழ் புங்குடுதீவு மாணவி 17 வயது வித்தியா, கடத்தப்பட்டு பாலியல் வல்லுறவின் பின் கொலை

14 - 4 - 2014

குருநகரில் ஜெரோம் கொன்சலிற்றா (வயது 23) கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு (பாதிரியார்கள் இருவர் காரணம் எனக் குற்றச்சாட்டு)

16 - 3 - 2014

கிரிக்கெட் போட்டியின் போது யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவர்களால், சென். பற்றிக்ஸ் கல்லூரி பழைய மாணவன் அமலன் (வயது 23) மைதானத்தில் வைத்து அடித்துக் கொலை.

இவற்றை விட காவல்துறை மற்றும் ராணுவம் சம்பத்தப்பட்ட குற்ற செயல்களின் பட்டியல் தனியாக உண்டு. இவற்றுக்கெல்லாம் நாம் என்ன செய்யப் போகிறோம்? இதற்கான காரணங்களை சிந்தித்துப் பாப்போம்!

எந்த ஒரு சமூகத்திலும் குற்றச்செயல்கள் இடம்பெறுவது வழமையேயானாலும் இன அழிப்புக்கு உட்பட்ட ஒரு சமூகம், இதுவரை தமக்கான எந்தவொரு அரசியல் தீர்வையும் பெற்றுக்கொள்ளவில்லை. காணாமல் ஆக்கப்பட்டவர்கள், அரசியல் கைதிகள் விவகாரம், காணி விடுவிப்பு, மீள்குடியேற்றம், போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கான மறுவாழ்வுபோன்றவற்றுக்கான சரியான தீர்வு கிடைக்காமல் மக்கள் அதற்கான போராட்டங்களில் தற்போதும் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றனர். இந்த நிலையில் ஒரு மிகப்பெரும் கலாச்சார சீரழிவை நோக்கி தமிழ்ச் சமூகம் சென்று கொண்டிருப்பதன் காரணம் என்ன?






மிகமுக்கியமாக பணத்துக்காகவும், பாலியல் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும், பழிவாங்கவும் — துன்புறுத்தல், கடத்தல், வாள்வெட்டு கொலை போன்ற குற்றச்செயல்கள் அதிகளவில் இடம்பெற ஆரம்பித்துள்ளன.

சமூகத்தில் பணம் தொடர்பில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஏற்றத்தாழ்வு காணப்படுகிறது. ஒரு புறம் வெளிநாடுகளில் இருந்து தமது உறவினர் நலன் கருதி, பெருந்தொகைப் பணம் அனுப்பி வைக்கப்படுவதால் தண்ணீராக செலவழிக்கப்படுகிறது. மறுபுறம், தமது அடிப்படை மற்றும் ஆடம்பர தேவைகளைப் பூர்த்தி செய்ய போதுமான பணம் அற்ற நிலையில், மற்றவர்களோடு தம்மை சமப்படுத்த குறுக்குவழிகளில் பணத்தை பெற முனைகின்றனர்.

மது மற்றும் போதைப் பொருள் பாவனை அதிகரிப்பால் தமது பாலியல் விருப்பங்களை நிறைவு செய்ய வயது, உறவுமுறை பார்ப்பதில்லை. அத்துடன் குடும்பத்தலைவன் அற்ற குடும்பங்களில் பெண்கள் தனித்து ஆதரவற்று வறுமை நிலையில் வாழும் போது, அவர்களை தமது இச்சைக்கு பயன்படுத்த விரும்புகின்றனர்.

செறிவு கூடிய ஷிகிரிணி மதுபானம் (15%) சட்டவிரோதமாக விற்கப்படுகிறது. பச்சை என்று அழைக்கப்படும் இதனை ஒரே முறையில் முழுமையாக அருந்தினால் மனதை பேதலிக்கச் செய்து, தாம் என்ன செய்கிறோம் என்பது புரியாமல் நடக்கச் செய்யும்.



குறைந்த விலையில் அதிக போதையை தரும் இந்த மதுபானங்களும், போதைப்பொருள்களும் பல குற்றச்செயல்களுக்கான பிரதான காரணமாகின்றன.

யாழ். ஐந்து சந்திப் பகுதியில் கேக் கடை போன்று செயற்பட்ட மாவா போதைப்பொருள் விற்பனை நிலையத்தை அண்மையில் காவல்துறையினர் கண்டுபிடித்தனர். இதில் வெற்றிலையில் கலந்தும், குளிர் பானத்தில் கலந்தும், தனியாகவும் போதைப்பொருள் விற்பனை செய்யப்பட்டது.

இந்த ஆண்டில் மட்டும் கொள்கலன்களில் அடைக்கப்பட்ட 350 ரிரீ போதைப்பொருளை இலங்கை போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு கைப்பற்றியது. அத்துடன் உலகில் மிகவும் ஆபத்தான போதைப்பொருள்களாக கருத்தப்படக்கூடிய ஙிறீணீநீளீ விணீஸீபீஹ் மற்றும் பிணீஉலீவீஉலீ வகைப் போதைபொருள்களும் கைப்பற்றப்பட்டன.

யாழில் பாடசாலைகளை இலக்குவைத்து மாணவர் மத்தியில் போதைப்பொருள் பாவனை வேண்டுமென்றே ஏற்படுத்தப்படுகிறது. இவர்கள் கல்லூரி வளாகத்தில் கல்வி கற்கும் நேரத்தில் போதைப்பொருள்களை பாவிப்பதாகவும், போதை கலந்த இனிப்புகளை உண்பதாகவும், புகை பிடித்தல் மற்றும் மது அருந்துவதாகவும் பாடசாலை சமூகங்களினால் மேல் நீதிமன்றத்தில் கூட முறைப்பாடு செய்யப்பட்டது. இதற்கு அந்தப் பாடசாலைகளின் ஒருசில ஆசிரியர்களும் ஒத்துழைப்பும் உதவியும் வழங்கி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இளைஞர்கள் இலகுவாக மாற்றப்படக்கூடியவர்கள். அவர்களைக் குறிவைத்து இந்தப்பழக்கங்கள் ஊக்குவிக்கப்படும் போது, இலகுவாக அவர்கள் இதில் அடிமையாகின்றனர். யாழ் கோட்டையின் மறைவான பகுதிகளிலும் வேறு இடங்களிலும் பள்ளி மாணவர்கள் காதல் என்ற போர்வையில் முறையற்று நடக்கின்றனர். எல்லோரிடையேயும் பரவலாகக் காணப்படக்கூடிய கைபேசி மூலம், சமூக வலைத்தள பாவனை மற்றும் இணையப் பாவனை அதிகரித்துள்ளது. இவற்றை சரியான வழியில் பயன்படுத்த தவறுகின்றனர்.

விபச்சார முகவர்கள் கூட இருப்பதாக கூறப்படுகிறது பெண்களிடத்தில் மதுபாவனை அதிகரித்துள்ளது. அண்மையில் மதுபோதையில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு பெண்கள் விபத்துக்குள்ளான சம்பவம் கோப்பாயில் இடம்பெற்றது.

தமக்கு எதிரான கருத்தை வெளியிடும் ஒருவரை அல்லது எதிராக செயற்படும் ஒருவரை பழி தீர்க்கும் மனோபாவம் காணப்படுகிறது. இதனை பல சமயங்களில் திரைப்படங்கள் மூலமாக வளர்த்துக்கொள்கின்றனர். அத்துடன் சமூகத்தில் தம் மீதான பயத்தை ஏற்படுத்தி செல்வாக்கை அதிகரித்துக் கொள்ள முற்படுகின்றனர். இதன் மூலம் குற்றம் செய்தாலும் தண்டிக்க முடியாத அல்லது அதனைப் பற்றி கவலை கொள்ளாதவர்களாக உள்ளனர்.

குழுக்களாகப் பிரிந்து சண்டையிடுதல், வர்த்தகர்களையும், பொது மக்களையும் கடத்தியோ, மிரட்டியோ பணம் பறித்தல் இடம்பெறுகிறது. ஆவா குழுவின் பல வாள்வெட்டு சம்பவங்களை கேள்விப்பட்டிருக்கிறோம்.

இவற்றைக் கட்டுப்படுத்த என்ன செய்யலாம் என்பதுதான் இங்கு உள்ள மிகப்பெரும் கேள்வி. இந்த நேரத்தில் எல்லோர் மனங்களிலும் புலிகள் இருந்த காலப்பகுதியில் இரவில் ஒரு பெண் தனியாக வீதியில் நடந்து செல்ல முடிந்த, குற்றச்செயல்கள் கட்டுப்படுத்தப்பட்ட பாதுகாப்பான காலப் பகுதி தோன்றும். அதற்கு ஒரே காரணம், குற்றம் செய்தவர் தப்ப முடியாத நிலையே. ஆகவே,

1. குற்றம் செய்தால் கடுமையாக தண்டிக்கப்படுவோம் என்று உணரச் செய்தல். பொது வெளியில் தண்டனை வழங்கல்.

2. மது, புகையிலை, போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்தல்

3. இளையவர்களிடையே கல்விக்கான தேடலை ஊக்குவித்தல்.

4. வெளிநாட்டில் இருந்து தேவைக்கு ஏற்ப பணம் அனுப்புவதோடு சரியான முறையில் பயன்படுகிறதா என்பதை உறுதி செய்தல்.

5. தனியாக வாழும் பெண்களின் மறுவாழ்வுக்கு உதவுதல். வறுமையில் வாழும் குடும்பங்களைக் கண்டறிந்து உதவுதல்.

6. வெளிநாடுகளில் இருந்து ஊருக்கு செல்பவர்கள், மற்றவர் பார்த்து ஏங்காத வகையில் தமது நடவடிக்கைகளை அமைத்துக் கொள்ளல்.

7. பாரிய குற்றம் செய்த ஒருவரை அவர் உணரும் வரை சமூகத்தில் இருந்து ஒதுக்கி வைத்தல்.

8. பெண், ஆண் பிள்ளைகளை பெற்றோர் தங்கள் கண்காணிப்பில் வைத்திருத்தல். தங்கள் உடலைப் பற்றிய முறையான அறிவைக் (பாலியல் கல்வி) கொண்டிருத்தல்.

9. குடும்ப உறுப்பினர் பொறுப்போடு செயற்படுதல். இதனால் உறவுகள் மீது நம்பிக்கையும், மதிப்பும் ஏற்படும். தீங்கு செய்யும் மனநிலை ஏற்படாது.

10. ஈழ வரலாற்றை மனதில் கொண்டு, இளையவர்களுக்கு இதுபற்றி சொல்லி வளர்த்தல். தமிழர் தாயக விடுதலை வரலாற்றை பேச்சு, நாடகம், இசை மற்றும் கலைகளூடாக வெளிப்படுத்தும் நிகழ்வுகளை நடத்துதல்.

இவற்றில் பலவும் செயற்படுத்தப்படக் கூடியவையே. நாம் அனைவரும் உணர்ந்து செயற்படும்போது நிச்சயம் நமது தாயகம் வன்முறைகள் குறைந்த சமூகமாக மாறும். உணர்வோம் ! செயற்படுவோம் !

**தர்ஷினி உதயராஜா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CANADA DAY

இன்று நல்லிணக்கம், சகோதரத்துவம், மக்கள் இறைமை என பல விடயங்களை உள்ளடக்கி, எம்மவர் பலருக்கு வாழ்வளித்துவரும் நவீன உலகின் சோர்க்காபுரி கனடாவின் தேசிய தினம்.

கனடா பத்து மாகாணங்களையும் மூன்று ஆட்சி நிலப்பகுதிகளையும் கொண்ட கூட்டமைப்பு கனடா (Canada) வட அமெரிக்க கண்டத்தில் உள்ள உலகின் இரண்டாவது பெரிய நாடு ஆகும். வடக்கே வட முனையும், கிழக்கே அட்லாண்டிக் பெருங்கடலும், தெற்கே அமெரிக்க ஒன்றியமும், மேற்கே பசிபிக் பெருங்கடலும், அமெரிக்க ஒன்றிய நாடுகளின் அலாஸ்கா மாநிலமும் எல்லைகளாக அமைகின்றன



கடந்த வருடம் கனடாவின் 150 வது பிறந்தநாளை கொண்டாடு முகமாக சுமார் 1000 தமிழ் மாணவிகளின் கனேடிய தேசிய கொடி வடிவில் பரதநாட்டிய நிகழ்வு

கனடாவின் தலைநகரம் ஒட்டாவா ஆகும். ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய இரண்டும் கனடாவின் ஆட்சி மொழிகளாக இருக்கின்றன. அடிப்படையில் கனடா ஒரு மக்களாட்சிக் கூட்டரசு. அத்தோடு, அரசியலைமைப்புச்சட்ட முடியாட்சியும் ஆகும். பெயரளவில், எலிசெபெத் மிமி கனடாவின் அரசி ஆவார். நடைமுறையில் நாடாளுமன்ற மக்களாட்சியும் மரபுமே முக்கியத்துவம் பெறுகின்றன.



பிரெஞ்சு, ஆங்கிலேய குடிவரவாளர்களாலும் ஆதிக்குடிகளாலும் கனடா உருவாக்கப்பட்டது. கூட்டமைப்பின் போது ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்களின்படி கனடாவை இணைக்கும் ஒரு தொடருந்துப் பாதை கட்டவேண்டிய தேவை இருந்தது. இதற்காக 1880களில் சீனர்கள் தொடருந்துப் பாதை கட்டமைப்பில் வேலை செய்வதற்காக வரவழைக்கப்பட்டனர். 1885ஆம் ஆண்டு தொடருந்துப் பாதை கட்டிமுடிந்த பின்பு சீனர்கள் வரவு கட்டுப்படுத்தப்பட்டது. குறிப்பாக "Chinese Exclusion Act" 1923 ஆம் ஆண்டு நடப்புக்கு வந்தது.

கறுப்பின மக்கள் வெவ்வேறு காலப்பகுதியில் கனடாவில் குடியேறினார்கள். தொடக்கத்திலேயே அவர்கள் அடிமைகளாகப் பிரெஞ்சு மக்களுடன் கனடாவுக்கு வந்தனர். எனினும் 1793 ஆம் ஆண்டில் மேல் கனடாவில் அடிமைகளுக்கு விடுதலை கிடைத்தது. அதனைத் தொடர்ந்து அமெரிக்காவில் இருந்து பல கறுப்பின மக்கள் கனடாவுக்கு விடுதலை தேடிவந்தனர். இவர்கள் வந்த பாதை நிலத்தடி இருப்புப்பாதை (Underground railroad) என்று அழைக்கப்பட்டது.

1920 ஆண்டளவில், கனடா இன அடிப்படையிலான குடிவரவுக் கொள்கைகளைப் பின்பற்றத் தொடங்கியது. இதன் காரணமாக ஐரோப்பியர் தவிர்ந்த ஏனைய இன மக்கள் கனடாவுக்குள் வருவது கடினமாக்கப்பட்டது. இக்கொள்கை 1967 இல் நீக்கப்பட்டது. எனினும், இதற்கமையவே இரண்டாம் உலகப்போருக்கு பின்னர் பல்வேறு ஐரோப்பிய குடிவரவாளர்களை கனடா உள்வாங்கியது. வியட்நாம் போரின்போது அமெரிக்க draft dogers பலரையும் உள்வாங்கியது.

1971 ஆம் ஆண்டு, உலக நாடுகளிலேயே முதலாவதாக, கனடா பல்லினப் பண்பாட்டுக் கொள்கையை அதிகாரப்பூர்வமாக ஏற்றுக்கொண்டது. அதனைத் தொடர்ந்து பன்னாட்டு மக்களும் கனடாவுக்கு குடிவருவது அதிகரித்தது. 1980களிலும் 1990களிலும் தமிழர்கள், பிற தெற்காசிய மக்கள், ஆபிரிக்கர்கள் புதிய குடிவரவாளர்களில் கணிசமான தொகையாக இருந்தனர்.

ஆங்கிலம், பிரெஞ்சு இரண்டும் ஆட்சி மொழிகளாகும். பிரெஞ்சு மக்களின் மொழிப் போரின் பின்னரே ஜூலை 7, 1969 அலுவல் மொழிச் சட்டம் ஊடாகக் கனடா முழுவதும் ஆட்சி மொழியானது. இதன் பின்னரே கனடா இருமொழி நாடாக அறியப்படலாயிற்று.

ஆங்கிலத்தை 59.7% மக்களும், பிரெஞ்சை 23.2% மக்களும் தங்கள் தாய்மொழியாகக் கொண்டுள்ளார்கள். கனடா ஒரு பல்பண்பாடு நாடாக இருந்தாலும் நாட்டின் ஒவ்வொரு குடிமையும் ஒரு ஆட்சிமொழியையாவது அறிந்திருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதனால், 98.5% மக்களுக்கு ஏதாவது ஒரு ஆட்சி மொழியிலாவது பேச முடியும்.

ஆட்சி மொழி அல்லாத மொழிகளுக்கும் தகுந்த முக்கியத்துவம், மதிப்பு, சுதந்திரம் வழங்கப்படுகின்றது. ஆட்சி மொழியற்ற ஒரு மொழியை 5,202,245 மக்கள் தங்கள் தாய் மொழியாகக் கொண்டுள்ளார்கள். எடுத்துக்காட்டாக, ஒரு குறிப்பிட்ட மக்கள் செறிந்து வாழும் ஒரு இடத்தில் அந்த மொழியில் சமூக சேவைகள் பெற, அந்த மொழியைக் கற்க, பாதுகாக்க உதவ அரசு முற்படுகின்றது. சீன, இத்தாலியன், ஜெர்மன், பஞ்சாபி மொழிகள் இவ்வகையில் குறிப்பிடத்தக்க மக்களால் பயன்படுத்தப்படுகின்றது.

ஏறக்குறைய 300000 தமிழர்கள் கனடாவில் வசிப்பதாகப் பொது ஊடகங்கள் தெரிவிக்கின்றன, எனினும் தெளிவான ஒரு புள்ளி விபரம் இன்னும் கணக்கிடப்படவில்லை. பெரும்பாலான தமிழர்கள் ரொறன்ரோ நகரத்திலேயே வசிக்கின்றார்கள். பிறரும் மொன்றியால், வன்கூவர், கால்கரி போன்ற பெரும் நகரங்களிலேயே வாழ்கின்றார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் 80களின் பின்பு ஈழப் போராட்டம் காரணமாக இங்கு அகதிகளாக வந்து குடியுரிமை பெற்ற ஈழத்தமிழர்கள் ஆவார்கள்.

Janathan Alfred

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

RE/MAX

DOING MORE FROM
FOR SALE
TO SOLD

# THINKING OF SELLING YOUR HOME ?

NAVIGATE THE REAL ESTATE MARKET WITH A TRUE EXPERT !

**FREE** Comparative Market Analysis & Home Evaluation








WWW.REMAXHOMESALE.COM



**Realtor Ramanan**
**416 290 6000**
**Re/Max Community Realty Inc Brokerage ***
(Independently owned and operated)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஏழிசை மதுர சபா "இசைப்பள்ளியின் 25வது ஆண்டு விழா







வீணை வித்தகி ஸ்ரீமதி.கல்யாணி சுதர்ஷன் அவர்களின் "ஏழிசை மதுர சபா "இசைப்பள்ளியின் 25வது ஆண்டு நிறைவு விழாவில் @ J Clarke Richardson Collegiate Ajax onJune 23,2018. மேலதிக புகைப்படங்களை இகுருவி இணையத்தளத்தில் பார்வையிடலாம்.

# "அற்புத நர்த்தனாலய" நடனப் பள்ளியின் 15வது ஆண்டு கலைவிழா







திருமதி. அற்புதராணி கிருபராஜ் அவர்களின் "அற்புத நர்த்தனாலய "நடனப் பள்ளியின் 15வது ஆண்டு நடன, நாட்டிய கலைவிழா நிகழ்வில் @ Armmeniam Youth Centre on June 17,2018. மேலதிக புகைப்படங்களை இகுருவி இணையத்தளத்தில் பார்வையிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடு விற்பனை முகவர் அலுவலக திறப்புவிழா நிகழ்வு













RE/MAX COMMUNITY REALTY INC இன் இரண்டாவது வீடு விற்பனை முகவர் அலுவலக திறப்புவிழா நிகழ்வு . அனைவரையும் கவரும் அதிநவீன தொழிநுற்ப உள்கட்டமைப்பு வசதிகள் கொண்ட 300 Rossland Rd E, Unit 404, Ajax, Ontario L1K 04K என்ற முகவரியில் அமைந்துள்ளது. வீடுவிற்பனைத் துறை நிர்வாகிகளான லோகன் வேலும்மயிலும் மற்றும் ரஜீவ் கோணேஸ் ஆகியோரின் தீவீரமான முயற்சியிலும் ஏனைய விற்பன முகவர்களின் ஆதரவோடும் இந்த கிளை நிறுவனம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. பாராளமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி உற்பட பல அரசியல் பிரமுகர்கள் , மற்றும் வீடு விற்பனை முகவர்கள் கலந்து சிறப்பித்தார்கள் . மேலதிக புகைப்படங்களை இகுருவி இணையத்தளத்தில் பார்வையிடலாம் .



# கனடியத் தமிழ் வர்த்தக சம்மேளத்தின் கருத்துப்பகிர்வு நிகழ்வு







கனடியத் தமிழ் வர்த்தக சம்மேளத்தின் சமூகம் சார்ந்த வியாபார உத்திகளை மேலும் மேம்படுத்துவதற்கான கருத்துப்பகிர்வு நிகழ்வு கடந்த ஜூலை மதம் 20 ம் திகதி வர்த்தக சம்மேளனத்தின் உறுப்பினர்களுக்கு இடையில் நடைபெற்றது. இதில் Anu Dogra, Dunstan Peter, L. David Fox, Dharsaan Pathmanathan, & Rajasri Sriskandarajah. ஆகியவர்கள் தமது கருத்துக்களை வழங்கினார்கள் .



# இசைக்கு ஏது எல்லை ?

கனடாவில் ஈழத்தின் இசை மேதை கலா பூசணம் எஸ் . பத்மலிங்கம் அவர்களின் சாஷ்திரிய சங்கீத குரல் இசையோடு 25ஆவது "இசைக்கு ஏது எல்லை ? " நிகழ்வு ஜூலை 24 ம் திகதி நடைபெற்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாமத்திய வீட்டு நேரடி ஒளிபரப்பு தேவையா?



கடந்த சில வாரங்களாக முகப்புத்தகங்களில் சாமத்திய வீட்டு நிகழ்வொன்றை, ஊடகம் என்று கூறப்படும் ஒருவரால் நேரடி வர்ணனை செய்யப்படும் காணொளி ஒன்று வைரலாக சமூகவலைத்தளங்களிலும், தமிழ் இணையதளங்களிலும் பரவிக்கொண்டிருந்தது.

சாமத்திய வீட்டில் சிறுமி நடந்துவரும் அழகு தொடக்கம் தாய் தந்தையர் அணிந்திருந்த உடை பரிமாறப்பட்ட உணவுவரை, அனைத்தையுமே முகநூலில் நேரலை செய்திருந்தார் அந்தச் செய்தியாளர்.

இதை தமிழ் இணையதள ஊடகம் ஒன்று "உலகத் தமிழர்கள் பார்த்துப் பூரிக்கும் யாழ் சிறுமியின் கனேடிய சாமத்திய வீடு..!! (வீடியோ) அண்ணே!!!! அப்படியே கனடாவில கலியாணம் செய்யிற ஜோடிகளின் அன்றைய சம்பவங்களையும் இரவிரவாக வர்ணனை செய்யுங்கோ. உலகத் தமிழர்கள் பார்த்துப் பூரிக்கும்படியாக அப்படியே இங்கேயும் பிரசுரிப்போம்." என்று தனது பங்கிற்கு செய்தி பரப்பியிருந்தது.

இதில் இரண்டுவிடயங்களை நாம் கருத்தில் நோக்கலாம் முதலாவதாக சமாதியவிடு தேவையா? அது மிக பிரமாண்டமாக செய்யும் சடங்கா அல்லது அது சம்பிரதாயமா?

இரண்டாவதாக சாமத்தியவீடு ஊடக ஒளி, ஒலி பரப்பு தேவையா? என்பதுதான் புலம்பெயர் சமூகத்தால் பேசப்படுபொருளாக இருக்கிறது

1) சாமத்தியவிடு தேவையா?

ஒரு பெண் உள ரீதியாகவும், உடல் ரீதியாகவும் பாரிய மாற்றத்துக்கு உள்ளாகும் பருவம் அவள் பூப்பெய்தும் பருவம்தான். இது பற்றிய சரியான புரிந்துணர்வு புலத்தில் பல பெற்றோர்களிடம் நிச்சயமாக இல்லை. இந்த நிலையில் நாம் இது பற்றிப் பேச வேண்டியதொரு கட்டாயத்தில் இருக்கிறோம்.

புலப்பெயர் நாடுகளில் மாற்று இனங்களுடன் சேர்ந்து வளர்ந்து விட்ட நிலையில் சாமத்தியச் சடங்குகள் அவசியந்தானா? சாமத்தியச் சடங்கு எமது கலாசாரத்தில் ஏன் இடம் பிடித்துக் கொண்டது? என்பது போன்றதன் கேள்விகளுக்கு மிகத் தெளிவான கருத்துக்களோ அல்லது விளக்கங்களோ இதுவரை சரியான முறையில் புலம்பெயர் தேசங்களில் கிடைக்கவில்லை.

கடனடாவில் உள்ள 40 தமிழ் குழந்தைகளிடம் ஒரு ஆய்வொன்றை நடத்தியபோது பெரும்பாலான பிள்ளைகள் தமக்கு இப்படியான சடங்குகளில் உடன்பாடில்லை என்றே தெரிவித்துள்ளார்கள். பெற்றோரின் விருப்பதுக்காவே அவர்கள் இதை செய்வதாகவும் கூறுகின்றார்கள்.



அதேநேரம் பெற்றாரிடம் கேட்டபோது பிள்ளை ஆசைபடுகிறார்கள் என்று நாசூக்கான பொய்யை கூறிச் சமாளிக்கின்றார்கள்.

கடைசியில் வீடியோ எடுப்பவர், புகைப்படம் எடுப்பவர் மற்றும் மண்டபக்காரர் சேர்ந்து சாமத்திய வீட்டை ஒரு கொண்டாட்டமாக செய்து கொடுக்கிறார்கள். எது எப்படியோ பத்து வருடத்துக்கு முன்னர், யுத்தகாலத்தில் இருந்த கனடிய தமிழர்களின் வாழக்கை பொருளாதார நிலையில் இருந்து தற்பொழுது தமிழ்ச் சமூகம் அபரீத வளர்ச்சி கண்டுள்ளது.

எப்படி வளர்ச்சி பெற்றிருந்தாலும் குறுகிய சமூக கட்டமைப்புக்குள் வாழும் கனேடிய தமிழர்கள் தமது பொருளாதார வளர்ச்சியை படம் போட்டு காட்டுவதற்கும், இயந்திர வாழ்வாக ஓடி திரியும் நிலையில் சொந்த பந்தத்துடன் உறவை பேணி சந்தோசமாக இருப்பதற்காவும், மகளை அழகு படுத்தி பார்க்கும் ஒரு சந்தோசத்தை ஏற்படுத்தி நிக்கும் நிகழ்வாகவும் இது பதிவு செய்யப்படுகிறது.

இதில் பிரதான பங்கு வகிப்பது வர்த்தக புரட்சி மற்றும் விளம்பர உலகம். சாமத்திய வீடு சடங்கில் தங்கி உள்ள பல வர்த்தக நிறுவனங்கள் தமது வியாபார விளம்பர உத்திகளை இவ்வகைச் சடங்குகளில் சேர்ப்பதினால் சாதாரண மக்களுக்கான சாமத்திய வீட்டுக்கு கவர்ச்சியாக அமைந்துள்ளது. புடவைக்கடை, புகைபிடிப்பாளர், விடியோபிடிப்பாளர், மண்டபம், உணவு பரிமாறும் நிலையங்கள், மல்லிகை பூ வியாபாரிகள் என்று இதில் தங்கியுள்ள வியாபாரங்களை அடுக்கிக்கொண்டே போகலாம். புதிய வர்த்தக உத்திகளும், புதிய சேவைகளும் தான் சமூகத்தின் கலாச்சாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும் முக்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காரணிகளாக அமைந்துள்ளன.

இன்னும்பத்து வருடத்தில்சாமத்திய சடங்கு நிலைக்குமா? நிலாக்காதா? என்று கேட்டால் பதில் நிலைப்பதம் நிலைக்காததும் என்பது அக்காலத்தில் உள்ள சந்தைப்படுத்தலில்தான் தங்கியுள்ளது. சிலர் இப்போது இதை "சேலைச் சடங்கு (Saree Ceremony) என்றும் கூடக் கொண்டாடுகிறார்கள்.

வியாபாரம் என்பதில் யாரும் மாற்றுக்கருத்து கொண்டவர்களாக இருக்க மாட்டார்கள். வியாபாரம் என்று வந்து விட்டால் ஏதாவது மட்டுப்படுத்தப்படட வரைவிலக்கணம் இருகின்றதா? என்றால் இல்லை.

இனி வரும் ஊடகங்கள் சாம்மதியவீடு மட்டுமல்லாது அந்தச் செய்தியில் குறிப்பிட்டது போல

## உங்கள் சாமத்திய வீடு, திருமண வீடு, பிறந்தநாள் வீடு போன்ற நிகழ்வுகளுக்கு ஊடக நேரடி ஒளிபரப்புக்கு அழையுங்கள்

சேலைச் சடங்கானது மற்றைய சமுகத்துக்கு நாம் கூறும் மரபு காரணம் மறைந்து, சேலைச் சடங்கு என்னும் புதிய வர்த்தக வடிவம் எடுக்கிறது எனலாம். சாமத்திய வீடு தேவையா இல்லையா என்பதற்கு என்னிடம் பதில் இல்லை. ஆனாலும் உங்கள் மனங்களில் ஏதோ ஒரு மூலையில் நாம் விட்டு வந்த சமூகத்தையும், போரில் அழிந்த மக்களையும் மனதில் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். அதே நேரம் கனடா போன்ற வளர்ந்த நாடுகளிலில் உங்கள் பிள்ளைகளின் எதிர்காலம், கல்வி, பாதுகாப்பு, பண்பாடு போன்றவற்றில் கவனம் செலுத்துங்கள்.

சாமத்திய வீட்டுக்கு ஊடக ஒளி ஒலி பரப்பு தேவையா ?

இது மிகவும் சுவாரசியமானது. இரண்டு வருடத்துக்கு முன்னர் ஒரு நடன ஆசிரியர் தனது மகளின் பிறந்த நாள் நிகழ்வுக்கு தனது ஊடக நண்பர்களையும் அழைத்திருந்தார். என்னுடன் வந்த சில ஊடக நண்பர்கள் தாம் கொண்டுவர வேண்டிய பரிசு பொதிக்கு பதிலாக தமது ஒளிப்படக் கருவியைக் கொண்டுவந்து சுற்றி சுற்றி புகைப் படமெடுத்து தமது ஊடகமூடாக வலைத்தளங்களில் பரப்பிவிட்டிருந்தார்கள். இதைத் தொடர்ந்து இன்னுமொரு சமூக புகழ்விரும்பி தனது மகளின் சாமத்திய வீட்டுக்கு ஊடகர்களை அழைத்து சமூகவலைத்தள செல்வாக்கைத் தேடியதைத் தொடர்ந்து, சமூகத்தில் ஒரு VIP நிலையை அடைய விரும்பும் சிலரும் இப்போது ஊடகர்களை அழைக்கத் தொடங்குகியிருக்கிறார்கள்.

இதிலும் அதே வர்த்தகப் புரட்சிதான் முக்கிய காரணமாக இருக்கிறது. ஊடகமும் ஒரு முதலிரவுவரை போக ஆயத்தமாக இருக்கிறர்கள். அப்படியான நேரடி ஒளிபரப்பு வந்தாலும் காலம் அதனையும் உள்வாங்கி முன்னேறும். அது தான் வர்த்தக மற்றும் வியாபார உலகம். ஊடக வியாபாரம் அந்த விளம்பரத்தை மேற்கொண்டு தமக்காண சேவை பெறுனர்களை அடைந்தே தீரும்.

அதீத தொழில்நுற்ப வளர்ச்சியின் வேகத்தினால் பெரும் முதலீட்டில் உருவாக்கப்படும் ஊடகம் என்னும் கட்டமைப்பு இப்போது அன்றாடப் பாவனைப் பொருகளினூடு உள்ளங்கைகளில் வந்துவிட்டது. அதே போல் ஊடக ஆசையுள்ள சாதாரண மக்கள் ஒவ்வொருவரும் ஒரு ஊடகமாக சமூகவலைத்தளங்கள், செல்பேசி மென்பொருட்கள் மூலம் ஊடக நிலையை அடைந்து விட்டார்கள்.

முழுநேரமாக ஒரு வியாபாரம் வைத்திருப்பவர்களோ, வேலையில் இருந்து ஓய்வு பெற்றவர்களோ சமூக அந்தஸ்திற்காக ஊடகத்தை இன்னொரு வியாபாரமாக ஒரு செல் போனோடு ஆரம்பிக்கலாம். வியாபார போட்டி சந்தை வாய்ப்பை திறந்து விட்டுள்ளது. மாற்றங்கள் பணமாற்று விகிதம்போல் தினம் தினம் மாற்றப் பட்டுக்கொண்டே இருக்கிறது.

ஆதலால் இனி வரும் காலங்களில் சமூகவலைதளங்கள், இணையதளங்கள் என்பன சாமத்திய வீடடையோ அல்லது பெயர் மாற்றப்பட்ட சேலைச் சடங்கு, திருமணங்கள், முதல் தடவையாக மது அருந்துவது போன்றவற்றை சர்வதேச படுத்துவது சாதரணமாக கடந்து போகும்.

சரவணன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உங்கள் குடும்பத்தின் எதிர்காலத்தை பாதுகாக்க இன்றே திட்டமிடுங்கள்?

Super Visa 100% Refund if Visa Denied




உங்களுக்கு விரும்பிய காப்புறுதி நிறுவனத்தில் காப்புறுதி செய்யலாம்

போதுமான பாதுகாப்பே குடும்பத்தில் நிறைவான நிம்மதியைத் தரும்.

உங்களிடம் உள்ள காப்புறுதி உங்களுக்கு எவ்வாறான பாதுகாப்பைத் தருகிறது என்று அறிய வேண்டுமா? இலவச ஆலோசனைக்கு என்னை அழையுங்கள்.

**திலீபன் இராமநாதன்** BBM (Hons)
**(Thileepan Ramanathan)** Dir : (647) 381-8445
ஆயுள் காப்புறுதி முகவர் Email: itsthil@yahoo.ca

ஆயுள் காப்புறுதி விலைவிபரங்கள்

| வயது | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| காப்புறுதி தொகை | காப்புறுதி வருடங்கள் | M | F | M | F | M | F | M | F | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200 000 | 10 | 15 | 11 | 15 | 12 | 15 | 14 | 19 | 18 | 26 | 21 | 34 | 26 | 62 | 45 | 99 | 71 | 167 | 113 | 294 | 204 |
| 500 000 | 10 | 28 | 18 | 28 | 19 | 29 | 23 | 36 | 8 | 51 | 37 | 76 | 54 | 143 | 99 | 232 | 163 | 405 | 270 | 705 | 491 |
| 200 000 | 20 | 17 | 14 | 18 | 15 | 20 | 16 | 26 | 21 | 40 | 29 | 63 | 43 | 116 | 79 | 204 | 137 | 309 | 208 | 481 | 316 |
| 500 000 | 20 | 34 | 23 | 34 | 24 | 37 | 28 | 50 | 38 | 80 | 54 | 136 | 83 | 268 | 178 | 482 | 324 | 734 | 500 | 1139 | 761 |
| 100 000 | ஆயுள்வரை | 49 | 44 | 58 | 52 | 69 | 61 | 81 | 69 | 103 | 86 | 122 | 107 | 154 | 128 | 201 | 168 | 269 | 229 | 360 | 308 |
| 250 000 | ஆயுள்வரை | 95 | 83 | 115 | 102 | 142 | 126 | 178 | 149 | 234 | 195 | 290 | 239 | 370 | 303 | 476 | 393 | 641 | 541 | 878 | 744 |

Non medical- Term & Permenent Products

| வயது | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| காப்புறுதி தொகை | காப்புறுதி வருடங்கள் | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 150 000 | 10 | 46 | 41 | 64 | 53 | 92 | 72 | 166 | 121 | 292 | 197 | 586 | 389 |
| 100 000 | 10 | 33 | 30 | 46 | 38 | 64 | 51 | 113 | 83 | 197 | 134 | 393 | 248 |
| 50 000 | 10 | 20 | 20 | 33 | 23 | 36 | 29 | 60 | 45 | 102 | 71 | 200 | 128 |
| 150 000 | 20 | 56 | 46 | 92 | 67 | 147 | 104 | 243 | 164 | 398 | 257 | 675 | 442 |
| 100 000 | 20 | 40 | 33 | 64 | 47 | 101 | 72 | 165 | 112 | 268 | 174 | 452 | 297 |
| 50 000 | 20 | 24 | 20 | 36 | 27 | 54 | 40 | 86 | 60 | 138 | 91 | 230 | 152 |
| 20 000 | ஆயுள்வரை | 45 | 37 | 49 | 41 | 61 | 52 | 80 | 66 | 111 | 86 | 157 | 117 |
| 30 000 | ஆயுள்வரை | 64 | 53 | 71 | 59 | 89 | 75 | 117 | 96 | 164 | 126 | 232 | 173 |
| 40 000 | ஆயுள்வரை | 84 | 69 | 92 | 76 | 117 | 98 | 154 | 126 | 217 | 167 | 308 | 229 |
| 50 000 | ஆயுள்வரை | 104 | 85 | 114 | 94 | 144 | 121 | 191 | 156 | 270 | 207 | 384 | 285 |
| 75 000 | ஆயுள்வரை | 153 | 124 | 169 | 139 | 214 | 178 | 283 | 231 | 402 | 308 | 573 | 425 |
| 100 000 | ஆயுள்வரை | 202 | 164 | 223 | 183 | 283 | 236 | 376 | 306 | 534 | 409 | 763 | 564 |

**Call me for your free consultation.**

Life100
INSURANCE & INVESTMENTS INC.

*"Price are based on current rates and it may change time to time. condition may apply"*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டக் போர்ட்டைக் காணவில்லை



டக் போர்ட் ஒன்ராரியோவின் முதல்வராக யூன் 29, 2018ல் சுப வேளையில் பதவியேற்றார். அதன் பின்னர் தனது அமைச்சரவை பட்டியலையும் வெளியிட்டார். பல தமிழர்களின் எதிர்பார்ப்பில் மண்ணையள்ளித் தூவி விட்டார் போர்ட். ஒரு தமிழருக்கும் அமைச்சரவையில் இடம் கிடைக்கவில்லை. ஒரு சிறுபான்மையினத்தவரும் இல்லை. விதிவிலக்காக றேமண்ட் சோ முதியோருக்கான அமைச்சராக பதவியேற்றார். கொன்சவேற்றிவ் கட்சி, சிறுபான்மையினத்தவருக்கு எதிரான கட்சி என்பதனை மீண்டும் ஒரு தடவை அவர்கள் நிறுவத் தயங்கவில்லை. உதவி அமைச்சர்கள் பட்டியலில் பல சிறுபான்மையினத்தவர் இடம் பெற்றுள்ளார்கள். ஆனால் அங்கும் தமிழருக்கு இடம் கிடைக்கவில்லை. கொன்சவேற்றிவ் கட்சியினை ஒரு புத்திஜீவி(?) பிரமுகர் கூட்டமே இயக்கிக் கொண்டிருக்கின்றது. அவர்களின் முடிவுகளை டக் போர்ட் வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றார். அகக் காரணிகளை இவர்கள் தீர்மானிக்கலாம். புறக் காரணிகளை இவர்களால் தீர்மானிக்க முடியாது.

டக் போர்ட் பதவியேற்ற ஒரு சில தினங்களில் கனடா, அமெரிக்காவிற்கு ஏற்றுமதியாகும் சுமார் 245 பொருட்களுக்கு அதிக சுங்க வரியை நிர்ணயித்துள்ளது. அதற்கு முன்பாக டொனால்ட் ரம்ப் அலுமீனியம், இரும்பு போன்ற பொருட்களுக்கு அதிக சுங்க வரியை விதித்தார். இது நேரடியாகவே கனடாவைப் பாதித்தது. குறிப்பாக கனடாவின் மூன்று தொழில் நகரங்கள் இதன் நேரடிப் பாதிப்புக்குள்ளாகியது. Sault Ste. Marie, Ont., Hamilton, Ont.,Sorel-Tracy, ஆகிய நகரங்களே அவையாகும். இவற்றுள் இரு நகரங்கள் ஒன்ராரியோ நகரங்கள். பொருளியல் வல்லுனர்கள் புதிய சுங்க வரியின் விளைவினால் கனடாவில் தயாரிக்கப்படும் கார்களின் எண்ணிக்கை சுமார் ஒன்பது லட்சத்தால் குறையும் என கருதுகின்றனர். கனடாவில் தற்சமயம் வருடத்துக்கு 2மில்லியன் கார்கள் தயாரிக்கப்படுகின்றன. குறையும் தொகை 45வீதமாகும். ஒன்ராரியோவிலேயே பல கார் தயாரிப்பு நிறுவனங்கள் உள்ளன. கேம்பிரிட்ஜ், ஒசாவா, வின்சர், ஓக்வில் போன்ற நகரங்களில் கார் தயாரிப்பு நிறுவனங்கள் இயங்குகின்றன. அண்மைக் காலங்களில் இங்குள்ள நிறுவனங்கள் பல மில்லியன்களை அதிகமாக முதலிட்டுள்ளது. உதாரணமாக 2013 போர்ட் ஓக்வில் தொழிற்சாலையில் 700 மில்லியன் டொலர்களை அதிகமாக முதலிட்டது. ரொயாட்டா இவ் வருடம் 1.4 பில்லியனை கேம்பிரிட்ஜ் மற்றும் வூட்ஸ்ரொக் தொழிற்சாலைகளில் முதலிட்டுள்ளது. கனடாவிலேயே ராவ்4, மற்றும் கிறைஸ்லர் மினி வான்கள் அதிகம் உற்பத்தியாகின்றன. இத் தொழிற்சாலைகளில் வேலை பார்ப்பவர்கள் பலர் வேலையை இழக்க வேண்டிவரும்.

ஒன்ராரியோவின் லெமிங்ரன் நகரில் உற்பத்தியாகும் தக்காளியிலிருந்து பிரபல ஹெயின்ஸ் (Heinz) கெட்சப் தயாரிக்கப்பட்டது. நப்ராவின் விளைவு ஹெயின்ஸ் நிறுவனம் தனது தயாரிப்புக்கான தக்காளியை பிறிமொன்ற், ஒகாயாவில் பெற்று அங்கேயே உற்பத்தி செய்யத் தொடங்கியது. பெரும் இழப்பைச் சந்தித்த லெமிங்ரன் விவசாயிகளை பிரென்ச் என்ற மற்றொரு கெட்ச்அப் நிறுவனம் காப்பாற்றியது. இந் நிறுவனத்துக்கும் அமெரிக்க தொடர்புண்டு. ஆனால் ஹெயின்ஸ்ன் வெளியேற்றம் நப்ராவின் விளைவு.

ஒன்ராரியோ மிச்சிக்கனுக்கு சுமார் 60 பில்லியன் டொலர்கள் பெறுமதியான பொருட்களை ஏற்றுமதி செய்கின்றது. கலிபோர்னியா, நியு யோர்க், ஒஹாயோ போன்ற மாநிலங்களுக்கும் அதிகளவு ஏற்றுமதியைச் செய்கின்றது. அடுத்த ஒரு வருடத்துக்குள் இதில் வீழ்ச்சியைக் காணலாம்.

ஒன்ராரியோவின் ஏற்றுமதியில் 25வீதம் கார்களாகும். கார் உதிரிப் பாகங்கள் 5 வீதம், ஒன்ராரியோ 82 வீதமான பொருட்களை அமெரிக்காவிற்கே ஏற்றுமதி செய்கின்றது. அதிகளவு இறக்குமதியும் அமெரிக்காவிலிருந்தே பெறப்படுகின்றது. 55 வீதமாகும். அமெரிக்காவுடனான வர்த்தகப் போர் நேரடியாகவே ஒன்ராரியோவை பாதிக்கும். இது அடுத்து வரும் வருடங்களில் ஒன்ராரியோ மிக மோசமான பொருளாதார மந்த நிலையை அடைய வேண்டிவரும். ஒன்ராரியோவில் வேலையற்றோர் வீதம் அதிகரிக்கும். இது பல நிலைகளில் பொருளாதாரத்தை பாதிக்கும்.

புதிய முதல்வர் டக் போர்ட் மேற் கூறப்பட்ட புறக் காரணிகளையும் களைய வேண்டும். கட்சப், கார் மாத்திரமல்ல. இரும்பு உட்பட்ட பல பொருட்களின் தயாரிப்பு மிக, மிகக் குறையும். ஒரு புறம் நப்ரா, மறுபுறம் நப்ராவை மீறிய [illegible] ஏய்க்கும் டக் போர்ட். இவற்றின் நகர்வை டக் போர்ட் எவ்வாறு சமாளிக்கப் போகின்றார் என்பதில் தங்கியுள்ளது இவரது எதிர்காலம். இவர் சார்ந்த கொன்சவேற்றிவ் கட்சியே நப்ராவை அதாவது வட—அமெரிக்க வர்த்தக ஒப்பந்தத்தை நடைமுறைக்கு கொண்டு வந்தார்கள்.

முன்னால் கனடிய பிரதமர்கள் அமெரிக்காவுடனான வர்த்தகத்தை கண்டித்துள்ளார்கள். சேர். ஜோன் மக்டொனால்ட் "கனடாவிற்கான மறைமுகமான துரோகம்" என குறிப்பிட்டுள்ளார். ஜஸ்ரின் ரூடேயின் தந்தை பியரி எலியட் ரூடோ "கனடாவிற்கு செய்யப்படும் பயங்கர வஞ்சனை. கனடாவின் இறையான்மையை, அமெரிக்காவிற்கு பொருளதாரத்தின் பெயரிலும், கனடிய வளங்களின் பெயரிலும் தாரைவார்ப்பதாகும்" என்றார். ஜோன் ரேர்னர் "கனடாவை விற்கும் சட்டம்" என்றார்

நப்ரா சுதந்திர வர்த்தக வலய அமைப்பல்ல. இது வட அமெரிக்க கண்ட பொருளாதார ஒருங்கிணைப்பு அல்லது தொகையீடு. ஒருங்கிணைப்பு என்பது கனடாவைப் பொறுத்த வரை கனடாவை இழத்தலாகும் ; (Integration means assimilation and that for Canada means the end of our country) தற்போதைய ரம்பின், கனடா மீதான கட்டுப்பாடுகள் சிறப்பாக வெளிப்படுத்துகின்றன.

கனடிய பாற் பொருட்கள் பண்ணைகள் "வழங்கல் மேலாண்மை" முறையை பின்பற்றுகின்றன. வழங்கல் மேலாண்மை முறை என்பது (Supply Management) தேவைக்கு ஏற்ப உற்பத்தி செய்யப்படும் முறை. இது 1970களில் நடைமுறைக்கு வந்தது. 1950—1960 களில் அளவுக்கதிகமான பாற் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டன. ஒவ்வொரு வருடமும் சி.டி.சி ( Canadian Dairy Commission(CDC)), இதன் அளவுகோளைத் தீர்மானிக்கும். இதனால் அளவுக்கு [illegible] இறக்குமதியும் கட்டுப்படுத்தப்படுகின்றது. இறக்குமதிக்கான "ஒதுக்கீட்டு" எல்லையைத் தாண்டி எப் பொருளும் இறக்குமதி செய்ய முடியாது. ஒவ்வொரு கனடிய பண்ணைக்கும் இவ்வாறான ஒதுக்கீடு உள்ளது. இது "நியாயமான விலை", "அதிக உற்பத்தி தவிர்ப்பு", "இறக்குமதிக் கட்டுப்பாடு" ஆகிய மூன்று விடயங்களை உள்ளடக்குகின்றது. கொக்கோ கோலா போன்ற மிகப் பெரிய நிறுவனங்கள் கனடிய பாற்சந்தையில் களமிறங்க, இங்கேயே உற்பத்தியை மேற்கொள்ளவுள்ளன. பீற்றபறோவில் உள்ள மினிற்மெய்ட் உற்பத்திச்சாலையை விரிவாக்கி, அங்கு இனிப்புக் குறைந்த பாலை, கொக்கோ கோலா உற்பத்தி செய்யவுள்ளது (lactose-free milk that is rich in protein and lower in sugar than traditional milk.) நப்ராவினால் மெக்சிக்கோ பெரும்பாலான மெக்சிக்கோ பண்ணைகள் மூடப்பட்டுள்ளன.

டக் போர்ட்டின் கொள்கைகள் வழங்கல் மேலாண்மை முறையை முடக்காமல், அதே சமயம் டொனால்ட் ரம்ப்பினால் மேற்கொள்ளப்படும் வணிக யுத்தத்தை வெற்றிக் கொள்ளக் கூடிய கொள்கைகளையும் முறைகளையும் கடைப்பிடிக்க வேண்டும். யூன் 7 தேர்தலில் வெற்றி பெற்று ஒரு மாத காலமாகின்றது. இது வரை ரம்பின் சுங்க வரி அதிகரிப்பை எவ்வாறு எதிர் கொள்ளப்போகின்றார் என மக்களுக்குத் தெரியாது. சேவைக் குறைப்பு மாத்திரம் பொருளாதாரத்தை வளப்படுத்தாது. அதற்கான தெளிவான சிந்தனையும் திட்டமும் தேவை. அது டக் போர்ட்டிடம் இருப்பதாக தெரியவில்லை. ஒன்ராரியோ மிக மோசமான பொருளாதார பின்னடைவை நோக்கி நகர ஆரம்பமாகிவிட்டது. அடுத்த வருட முற்பகுதியில் கனடிய டொலர் 65 அமெரிக்க சதங்களாகவிருக்கும்.. அதிரடிகள் பொருளாதார அதிர்வை ஏற்படுத்தாது.

ரதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் அரசியலுக்கான ஒற்றுமையும் கொள்கை அரசியலுக்கான ஒற்றுமையும்




கடந்த 24ம் திகதி யாழ்ப்பாணத்தில், இடம்பெற்ற நூல் வெளியீடு ஒன்று தமிழ் தேசிய அரசியல் பரப்பில் அதிக கவனத்தை பெற்றிருக்கிறது. வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் ஆற்றிய உரைகளை தொகுத்து 'நீதியரசர் பேசுகின்றார்' என்னும் தலைப்பில் வெளியீடு செய்திருந்தனர். இந்த வெளியீட்டின் போது சிறப்பு விருந்தினராக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக அறியப்படும் ,ரா.சம்பந்தன் பங்குபற்றியிருந்தார். வழக்கத்து மாறாக கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான மாவை சேனாதிராஜா, சித்தார்த்தன் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகிய அனைவரும் விக்கினேஸ்வரனின் நிகழ்வில் பங்குகொண்டிருந்தனர். நீண்ட நாட்களுக்கு பின்னர் கூட்டமைப்பின் அனைத்து தலைவர்களும் ஒரு நிகழ்வில் ஒற்றுமையாக பங்கு கொண்டிருந்தனர். இந்த வழக்கத்துக்கு மாறான நடவடிக்கையின் விளைவாகத்தான், குறித்த நிகழ்வு அதிக கவனத்தை பெற்றிருந்தது. அதாவது கூட்டமைப்பிலுள்ளவர்கள் அனைவரும் ஒரிடத்தில் பங்குகொள்வதையே ஆச்சரியமாகப் பார்க்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. உண்மையில் இது ஆச்சரியத்துக்குரியதல்ல மாறாக கவலைப்பட வேண்டிய ஒன்று. மக்களால், நம்பிக்கையுடன் தெரிவு செய்யப்பட்டவர்கள் ஒரு நிகழ்வில் பங்குகொள்வதையே மக்கள் ஆச்சரியமாகப் பார்க்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

இந்த நிகழ்வில் பேசிய சம்பந்தன் வழமையான அலட்டலோடு ஒற்றுமை பற்றி வகுப்பெடுத்திருந்தார். நாங்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும். எங்களுக்குள் கருத்து பேதங்கள் இருக்கலாம் ஆனாலும் ஒற்றுமை முக்கியம். நாங்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும் இல்லாவிட்டால் அழிந்து போய்விடுவோம் — என்றெல்லாம் ஆக்கோரசமாக பேசியிருந்தார். விக்கினேஸ்வரனின் மேடையில் சம்பந்தன் கூறிய ஒற்றுமை என்பது, விக்கினேஸ்வரனை இலக்கு வைத்தே கூறப்பட்டது என்பதை விளங்கிக்கொள்ள சிரமப்பட வேண்டியதில்லை. இதனை தெரிவிப்பதற்காகவே வந்தவர் போலவே சம்பந்தனின் பேச்சு அமைந்திருந்தது.

சம்பந்தனின் பேச்சுக்கு விக்கினேஸ்வரன் அதே மேடையிலேயே பதிலளித்திருந்தார். உண்மையில் விக்கினேஸ்வரன் உரைகளை எழுதி வாசிக்கும் பழக்கமுள்ளவர். எனவே அதனை சம்பந்தனின் உரைக்கான பதில் என்று சொல்ல முடியாது. சம்பந்தன் அப்படித்தான் பேசுவார் என்பதை முன் கூட்டியே உணர்ந்து அதற்கு ஏற்றவாறான பதிலுடன் அவர் இருந்திருக்கின்றார்.

ஒற்றுமை அவசியம் ஆனால் அது கொள்கை அடிப்படையில் இருக்க வேண்டும் மாறாக ஒற்றுமைக்காக கொள்கையை கைவிட்டுச் செல்ல முடியாது. மக்களுக்கு நாம் வழங்கிய வாக்குறுதிகளின் அடிப்படையில்தான் நாம் பயணிக்க வேண்டும். உயரிய கொள்கையை கடைப்பிடித்து அவற்றின் அடிப்படையில் சுயநலம் களைந்து முன்னேறுவதே இன்று தமிழ் மக்களுக்குள்ள ஒரேயொரு அரசியல் பாதையாகும். அதே வேளை சம்பந்தனே தன்னை அரசியலுக்கு கொண்டு வந்ததாகவும் எனவே கொடுத்த கையை கடிக்கும் பழக்கம் எனக்கில்லை என்றும் விக்கினேஸ்வரன் தெரிவித்திருந்தார். அதே வேளை இப்போதும் கூட்டமைப்புக்கு விசுவாசமாக இருப்பதாகவும் தெரிவித்திருந்தார். விக்கினேஸ்வரன் தெரிவித்திருந்த இந்தக் கருத்தை மட்டுமே சிலர் எடுத்துக் கொண்டனர். ,தன் மூலம் விக்கினேஸ்வரன் தொடர்ந்தும் கூட்டமைப்புக்குள்தான் இருப்பார் எனவே தங்களுக்கிடையில் எந்தவொரு முரண்பாடும் இல்லை என்றவாறு காண்பிப்பதற்கு குறித்த நூல் வெளியீட்டு நிகழ்வை தமிழரசு கட்சியினர் பயன்படுத்திக்கொள்ளக் கூடும்.

உண்மையில் சம்பந்தன் பேசும் ஒற்றுமை அர்த்தமற்ற ஒன்று. ஏனெனில் இன்று அவ்வாறானதொரு ஒற்றுமை இல்லாமல் போனமைக்கு காரணமானவரும் சம்பந்தன்தான். 2009 ற்கு பின்னர் அவ்வாறானதொரு ஒற்றுமைக்கான அனைத்து வாய்ப்புக்களையும் கூட்டமைப்பே கொண்டிருந்தது. அதனை பேணிப் பாதுகாப்பதற்கான தலைமைத்துவத்தை வழங்கக் கூடிய சந்தர்ப்பமும் சம்பந்தனுக்கு கிடைத்தது. கூட்டமைப்பிற்கென்று ஒரு கட்டமைப்பு தேவை. வீட்டுச் சின்னத்தை ஒரு பொதுச் சின்னமாகக் கொண்டு கூட்டமைப்பை தனியானதொரு கட்சியாக பதிவு செய்ய வேண்டும் என்றெல்லாம் சம்பந்தனுக்கு பலரும் ஆலோசனை வழங்கியிருந்தனர். ஆனால் சம்பந்தனோ அவற்றை ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை. ஆனால் இன்று அதே சம்பந்தன் தான் ஒற்றுமை பற்றி வகுப்பெடுக்கின்றார்.

விக்கினேஸ்வரன் தனதுரையில் தமிழ் மக்களின் அரசியல் இன்று பரிதாபகரமான நிலையில் இருக்கின்றது என்று குறிப்பிடுகின்றார். அவ்வாறாயின் அதற்கான பொறுப்பை அவர் எவர் மீது சுமத்துகின்றார். சம்பந்தன் மீதுதானே! சம்பந்தன் சரியானதொரு தலைமைத்துவத்தை வழங்கியிருந்தால் அவ்வாறானதொரு பரிதாபகரமான நிலைமை ஏற்பட்டிருக்காது என்றும் புரிந்து கொள்ளலாம் அல்லவா?

சம்பந்தன் ஏன் திடிரென்று ஒற்றுமை தொடர்பில் அலட்டிக் கொள்கின்றார்? ஏன் கூட்டமைப்பின் அனைத்து அரசியல் தலைவர்களும் விக்கினேஸ்வரனின் நிகழ்வில் பங்குகொண்டனர்?

நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் கூட்டமைப்பின் வாக்கு வங்கி கணிசமாக சரிவடைந்தது. அவ்வாறானதொரு முடிவை சம்பந்தன் எதிர்பார்க்கவில்லை. கூட்டமைப்பின் வாக்கு வங்கி கணிசமாக வீழ்ச்சியடைந்த அதே வேளை கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் வாக்கு வங்கி கணிசமாக அதிகரித்திருக்கிறது. அதே வேளை மத்திய அரசாங்கத்தின் முகவர்கள் என்று வர்ணிக்கப்படும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செல்வாக்கிலும் கணிசமான அதிகரிப்பு காணப்படுகிறது. அத்தோடு தெற்குமைய சிங்கள கட்சிகளின் செல்வாக்கும் அதிகரித்திருக்கிறது. உண்மையில் இவை அனைத்துமே கூட்டமைப்பின் வீழ்சிக்கான குறிகாட்டிகள்தான்.

விக்கினேஸ்வரன் கொள்கை அடிப்படையில் கூட்டமைப்பின் அரசியல் அணுகுமுறைகளை தொடர்ச்சியாக விமர்சித்து வந்தமையும் ,தற்கொரு காரணம் என்று சம்பந்தன் கணிக்கின்றார். ஒரு வேளை விக்கினேஸ்வரன் கூட்டமைப்பின் தேர்தல் பிரச்சாரங்களில் பங்கு கொண்டிருந்தால், நிச்சயமாக முன்னணியினரால் தற்போது பெற்றிருப்பது போன்று வாக்குகளை பெற்றிருக்க முடியாது. அவ்வாறு சம்பந்தன் கணிப்பாரானால் அது சரியானதொரு கணிப்புத்தான். இவ்வாறானதொரு பின்புலத்தில்தான், அன்மைக்காலமாக விக்கினேஸ்வரன் தனித்துச் செல்லலாம் என்னும் கருத்து வலுப்பெற்று வந்தது.

கூட்டமைப்பிலிருந்து பிரிந்து நிற்பவர்களையும் கொள்கை ரீதியில் உடன்படக் கூடிய இன்னும் பலரையும் சேர்த்துக் கொண்டு விக்கி தனி வழியில் செல்லலாம் என்னும் கருத்தொன்றும் அங்கும் , இங்குமாக உலவியது. ஒரு வேளை விக்கி தனிவழியில் செல்வாரானால் அதன் மூலம் உடனடியாக பாதிக்கப்படப் போவது சம்பந்தன்தான். சம்பந்தன் தற்போது தமிழ் மக்களின் தலைவராகவே அறியப்படுகிறார். அவர் அவ்வாறு , இருக்கின்றாரா அல்லது இல்லையா என்னும் கேள்வியை ஒரு புறமாக வைத்துக் கொள்வோம். ஆனால் அவ்வாறானதொரு தோற்றம் அவருக்குண்டு. ஆனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பந்தன் ஏன் திடிரென்று ஒற்றுமை தொடர்பில் அலட்டிக் கொள்கின்றார்? ஏன் கூட்டமைப்பின் அனைத்து அரசியல் தலைவர்களும் விக்கினேஸ்வரனின் நிகழ்வில் பங்குகொண்டனர்?

விக்கினேஸ்வரன் கொள்கை நிலையில் உறுதியாக தன்னை வெளிப்படுத்தியதால் சம்பந்தனின் தலைவர் என்னும் தகுதிநிலை சற்று கேள்விக்குள்ளாகியது. விக்கினேஸ்வரன் கொள்கை நிலையில் காண்பித்த உறுதியாதால்தான் தமிழரசு கட்சி அவருக்கு எதிராகத் திரும்பியது. அவரை இரவோடு இரவாக வடக்கு முதலமைச்சர் பதவியிலிருந்து அகற்ற முயற்சித்தது. இந்த விடயங்களை எல்லாம் மறந்துவிட்டுத்தான் தற்போது சம்பந்தன் ஒற்றுமை பற்றிப் பேசுகின்றார்.

சம்பந்தனுக்கு தற்போதுள்ள தலையிடி ஒன்றே ஒன்றுதான். அதாவது, ஒரு வேளை விக்கினேஸ்வரன் கூட்டமைப்பிலிருந்து முற்றிலுமாக விலகிச் செல்வாராயின் சம்பந்தனின் தலைவர் தகுதிநிலை கேள்விக்குள்ளாகும். அதே வேளை எதிர்வரும் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் கூட்டமைப்பிற்கு அல்லது தமிழரசு கட்சி நிறுத்தும் வேட்பாளரை எதிர்த்து விக்கினேஸ்வரன் களமிறங்குவாராயின் தமிழரசு கட்சியின் ஆதிக்கம் பெரியளவில் வீழ்ச்சியுறும்.


இந்த விடயங்கள் அனைத்தையும் ஆராய்து பார்த்ததன் விளைவுதான் சம்பந்தனின் ஒற்றுமை பற்றிய பிரசங்கம். விக்கினேஸ்வரன் நாளை என்ன முடிவெடுப்பார் என்பது பற்றி இப்போது எந்தவொரு ஆருடமும் கூற முடியாது ஆனால் அவர் வலியுறுத்தும் கொள்கை வழி ஒற்றுமையே இன்றைய நிலையில் தேவையானது. வெறுமனே தேர்தல் என்றதும் கொள்கை பற்றி பேசுவதும் பின்னர் தேர்தல் முடிந்ததும் நீ யாரோ நான் யாரோ என்பது போல் பேசுவதும் வெறும் சுயநல அரசியலின் வெளிப்படாகும். மேற்படி நூல் வெளியீட்டில் சம்பந்தன் பேசிய ஒற்றுமை என்பது அந்த வகையான ஒன்றுமைதான். ஆனால் விக்கினேஸ்வரன் பேசும் ஒற்றுமையே ,ன்றைய சூழலில் தமிழ் மக்களுக்குத் தேவையானது.

சம்பந்தனுக்கு உண்மையிலேயே கொள்கை வழியான ஒற்றுமையில் நம்பிக்கையிருந்தால், அதற்கான முயற்சிகளை செய்வதற்கு இப்போதும் அவகாசம் உண்டு. அனைவரையும் உள்ளவாங்கி கூட்டமைப்பை பலப்படுத்த முடியும். அவ்வாறானதொரு இலக்கை நோக்கி முன்னகர வேண்டுமாயின், அதற்கு முதலில் சம்பந்தன் தனது சுயநலத்தை களைய வேண்டும். தமிழரசு கட்சியை மட்டுமே சுமந்து செல்லும் மனோபாவத்திலிருந்து விடுபட வேண்டும்.சம்பந்தனின் அரசியல் காலம் முடிவதற்கு முன்னர் நமது அடுத்த தலைமுறையிடம் சரியானதொரு தேசியக் கட்டமைப்பை விட்டுச் செலவதற்கான வாய்ப்பு இப்போதும் பிரகாசமாகவே உள்ளது. ஒரு தலைமை தான் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் கூட்டத்திடம் எதனை விட்டுச் செல்கின்றது என்பதுதான் அந்த தலைமையின் கனதியாகும். சம்பந்தனின் கனதி என்ன என்பதை அவர்தான் தீர்மானிக்க வேண்டும்.

**இருக்குவிக்காக யதீந்திரா**

# இரண்டு பெண்களின் தலைமையில் இனி ஜெனரல் மோட்டார்ஸ்





உலக மோட்டார் வாகனத் தொழில்துறையில் பெண்களின் வருகை என்பது அதிகரித்த வண்ணம் உள்ளது. இப்பொழுது பல பெண் தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர் சிலர் விரைவாக தலைமை பதவிகளுக்கு முன்னேறிய வண்ணம் உள்ளனர்.

ஜெனரல் மோட்டஸ்சின் வணிக வரலாற்றில் நீண்ட காலமாக இருந்து வந்த ஆண்களின் தலமைக் கட்டமைப்பில் மாறுதல்கள் ஏற்பட ஆரம்பித்துள்ளன. ஜெனரல் மோட்டார்ஸ்சின் தலமை நிதியாளர் சக் ஸ்டீவன்ஸ் ஓய்வுபெற, திவ்யா சூர்யாதேவரா 39 வயது இந்தியத் தமிழ்ப் பெண் அப்பதவியைப் பொறுப்பேற்பார் என்று ஜுன் 13 புதனன்று கிடைத்த செய்தி கூறுகிறது.

சென்னையில் பிறந்தவர் திவ்யா சூர்யதேவரா, சென்னை பல்கலை கழகத்தில் வர்த்தக படிப்பில் இளநிலை மற்றும் முதுநிலை பட்ட படிப்புகளை முடித்து உள்ளார்.

இவர் தனது 22வது வயதில் ஹார்வர்டு பல்கலை கழகத்தில் எம்.பி.ஏ. படிப்பதற்காக அமெரிக்காவுக்கு சென்றார். பின் 2005ம் ஆண்டில் தனது 25வது வயதில் டெட்ராய்ட் நகரில் உள்ள ஜெனரல் மோட்டார்ஸ் நிறுவனத்தில் தன்னை இணைத்து கொண்டார்.

இதேபோன்று தலைமை நிதி அதிகாரியாகவும் ஒரு பெண் இருந்ததில்லை. கடந்த 2017ம் ஆண்டில் இருந்து இந்நிறுவனத்தின் குழுமம்சார் நிதிப் பிரிவின் துணை தலைவராக திவ்யா இருந்து வருகிறார். இந்நிலையில், வருகிற செப்டம்பர் 1ந்தேதி தலைமை நிதி அதிகாரி பொறுப்பில் இருந்து சக் ஸ்டீவன்ஸ் ஓய்வு பெற்ற பின்னர் திவ்யா அந்த பதவியினை வகிக்க உள்ளார்.

தலைமை நிதி அலுவலர் பதவியேற்றதும் திவ்யா, ஜெனரல் மோட்டார்ஸ் நிறுவன தலைவர் மற்றும் தலைமை செயல் அதிகாரியான மேரி பாராவின் கீழ் பணியாற்றுவார். "திவ்யாவின் அனுபவம் மற்றும் நிதி துறை சார்ந்த பல்வேறு பணிகளில் இவரது தலைமை நிறுவனத்துக்கு நல்ல வரவேற்பை பெற்றிருக்கிறது," என மேரி பாரா வெளியிட்டிருக்கும் அறிக்கையில் தெரிவித்து இருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனேடிய தொலைபேசிகளுக்கு தொல்லைதரக் காத்திருக்கும் அமெரிக்க எல்லைப் பாதுகாப்பாளர்களும்

கனேடியர்கள் அமெரிக்க எல்லையை கடக்கும் பொழுது அவர்களது தொலைபேசிகளை அமெரிக்க காவல் அதிகாரிகள் சோதனைக்குள்ளாக்கும் சட்டம் தற்பொழுது மேலும் வலுவாக்கப்பட்டு உள்ளது. இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் அமெரிக்க எல்லைப் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு அமெரிக்காவிற்குள் பிரவேசிக்கும் பயணிகளது செல்பேசிகளினதோ அல்லது கணினிகளது கடவுச்சொற்களை வாங்கி அதில் இருக்கும் கோப்புக்கள், ஒளிப்படங்கள் போன்றவற்றை பரிசோதிக்கும் அதிகாரம் உண்டு. இது பயங்கரவாதத்தைக் கட்டப்படுத்தும் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டிருக்கிறது.

ஹரி சாங் என்ற சட்டத்தரணி "இச்சட்டமானது தெளிவாக சொல்லப்படவில்லை ஆனால் இந்த சட்டத்தின்படி அமெரிக்க எல்லை பாதுகாப்பு பிரிவினர் உங்களின் தனிப்பட்ட தகவல்களை தமக்கு ஏற்றாற்போல் சின்னாபின்னமாக்க முடியும்" என்று தனது கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

கடந்த ஆண்டு மட்டும் 30,000 தொலைபேசிகள் அமெரிக்க எல்லை பாதுகாப்பு அதிகாரிகளினால் பரிசோதிக்கப்பட்டு இருக்கின்றது. இது



குறைந்த அளவிலான பரிசோதனை விகிதமே என்று அமெரிக்கத் தரப்பு தெரிவித்தாலும் கனடாவில் எதிர் வரும் ஒக்டோபர் மாதம் உற்சாகத்திற்கான கஞ்சா பாவன சட்டமாக்கப்படும்போது அமெரிக்கா செல்லும் கனேடியர்களின் தொலைபேசிச் சோதனைகள் அதிகரிக்கப்படும் என எதிர்பார்க்கலாம்.

கடவுச் சொல்லை கொடுக்க மறுக்கும் உரிமை ஒவ்வொரு பயணிக்கும் உண்டு. இச் சந்தர்ப்பத்தில் அமெரிக்க எல்லைப் பாதுகாப்பு அதிகாரி பயணியின் தொலைபேசியை ஐந்து நாட்களுக்கோ அல்லது அதற்கும் மேலான நாட்களோ கையகப்படத்த முடியும். அத்துடன் பயணியைத் திருப்பி அனுப்பவோ அல்லது நீண்ட தாமதத்துடன் அமெரிக்கவுக்குள் அனுமதிக்கும் அதிகாரத்தையும் இச் சட்டம் கொடுக்கிறது.

இது பற்றி வல்லுனர்கள் கருத்து தெரிவிக்கையில் பயணிகள் அமெரிக்கா எல்லையை கடக்கும் பொழுது தொலைபேசியில் சர்ச்சைக்குரிய கோப்புகளையோ அல்லது காணொளிகளையோ வைத்திருப்பதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அறிவுறுத்துகிறார்கள். அமெரிக்க அதிகாரிகளுடன் சர்ச்சைக்குட்படாமல் பயணம் செய்வது ஒவ்வொரு பயணியின் எதிர்காலப் பயணங்களை இலகுவாக்கும். அவர்கள் உங்களை கோபப்படுத்தும் வண்ணம் கேள்விகள் கேட்டாலும் நீங்கள் அவர்களது கேள்விகளுக்கு பொறுமையாக பதில்களைக் கொடுங்கள் அதுவே உங்களின் பயணங்களை சௌகரிகம் ஆக்கும்.

Immigration.ca என்னும் இணைய தளம் அமெரிக்க அதிகாரிகளுக்கு தொலைபேசி சோதனை தொடர்பாக இருக்கும் அதிகாரத்தை தெள்ளத் தெளிவாக கீழே விளக்கியுள்ளது.

1). U.S. border agents can deny entry to anyone who refuses to have their phone searched when asked. While phone searches are not meant to be conducted on every traveller as a routine, every Canadian is still subject to possible random checks. They can demand a phone and its password without probable cause.

2). Officers conducting the search must first turn connectivity off, but travellers are advised to do so before approaching the border to ensure the search is limited.

3). More in-depth searches are only allowed when they are deemed necessary for national security. U.S. border agents must get approval from a a higher ranked supervisor in order to do so. Once permission has been granted, the contents of the phone can then be uploaded onto a private hard drive.

4). U.S. border agents can confiscate phones if travellers refuse to have them searched. Phones can be kept for up to five days, or longer with approval from a higher ranked supervisor.

5). Lawyers can indicate sensitive files under attorney-client privilege. Information like journalist notes or medical files are subject to U.S. privacy laws. U.S. border agents must get legal advice before excluding such files from the search.

6). Any files taken from a searched device are destroyed, unless they pose a security threat.

7). Travellers may be present while the search is conducted but they cannot ask to see the screen. Search statistics must be documented and made public. Officials will conduct regular audits to ensure agents are following the rules.

**க.சிவமணி**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடு வாங்க விற்க வாங்க




RE/MAX COMMUNITY
Realty Inc , Brokerage

**Esan** Kulasegaram
Sales Representative
**416.833.9999**

off: 416.287.2222 | fax: 416.282.4488
203 - 1265 Morningside Ave Toronto, ON
Brokerage Independently Owned And Operated



# 20 Year Pay Insurance

## இருபது வருடக் கட்டுப்பணம்!
## வாழ்நாள் முழுவதும் காப்புறுதி!



**இருபது வருடங்களுக்கு மட்டும்**
**மாதாந்தக் கட்டுப்பணத்தைச் செலுத்துங்கள்.**
**அதன் பின்னர் உங்கள் வாழ்நாள் முழுவதும்**
**உங்களுக்கு காப்புறுதி இருக்கும்.**

இருபது வருடங்களின் பின், விரும்பினால் காசுப் பெறுமதியை (Cash Value) அல்லது Policy Loan ஐப் பெற்றுக் கொள்ளலாம்.

| Age | 20 | | 25 | | 30 | | 35 | | 40 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 72 | 60 | 82 | 68 | 92 | 84 | 112 | 98 | 131 | 116 |
| 200K | 126 | 108 | 147 | 126 | 172 | 158 | 211 | 185 | 248 | 223 |
| 300K | 188 | 162 | 220 | 188 | 258 | 236 | 317 | 278 | 372 | 334 |



RBC Insurance · Manulife · Industrial Alliance · La Capitale Financial Group · Assumption Life · BMO Insurance · Sun Life Financial

**Thana Manickavasagar** Broker

**Cell:416.728.5772 Office:416.519.3896**

• Life Insurance • Critical Illness Insurance • Disability Insurance • Mortgage Insurance • RRSP • RESP
• Non-Medical Insurance • Travel Insurance • Super Visa Medical Coverage • Drug and Dental Plan • TFSA

thana7@gmail.com www.thana.ca Fax: 647.547.8447 80 Nashdene Road, #D218, Scarborough, ON, M1V 5E4


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Kalaimanram Academy of Fine Arts and Yoga வின் 2017 - 2018 "நிருத்த நிறைஞர் " பட்டமளிப்பு விழா.










பரதநாட்டியக் கலையில் ஸ்ரீமதி நிறைஞ்சனா சந்துருவை அதிபராகக் கொண்ட கனடா கலைமன்றத்தின் நிருத்த நிறைஞர் 2018ம் ஆண்டு பட்டமளிப்புவிழா 24 ஜூலை மிகவும் சிறப்பாக நடைபெற்றது. மேலதிக புகைப்படங்களை இகுருவி இணையத்தளத்தில் பார்வையிடலாம்.

## FUTURE ZENITH CAPITAL - Mortgage Investment Corporation திறப்புவிழா








Home Life Future Realty Incநிறுவனத்தின் அதிபர் செல்வா வெற்றிவேல்,கடந்த ஜூலை 27 ம் திகதி ஒரு புதிய நிறுவனத்தை FUTURE ZENITH CAPITAL - Mortgage Investment Corporation என்,னும் பெயரில் அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரியும் அங்கு கலந்து கொண்டு நிறுவனத்தின் பெயர்பலகையை திரை நீக்கம் செய்து வைப்பதில் திரு செல்வா வெற்றிவேலோடு இணைந்து கொண்டார். மேலதிக புகைப்படங்களை இகுருவி இணையத்தளத்தில் பார்வையிடலாம்.










### விபுலானந்த அடிகளார் ஆவணப்படம் வெளியீட்டு விழா

கனடாவில் இயங்கிவரும் சுவாமி விபுலானந்த அடிகளார் கலை மன்றத்தின் ஏற்பாட்டில் கடந்த ஜூன் 24 ம் திகதி பெரிய சிவன் ஆலய மண்டபத்தில் நடைபெற்ற விபுலானந்த அடிகளார் ஆவணப்படம் வெளியீட்டு விழா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# REFINANCE TO LOWER RATES & SAVE UP TO 75%



**Your Mortgage Expert**

## Sathy Bagee

VP Business Development

Fisco Licence # M 16002389

416 821 4512

**Good Credit ?**
No Income verification - Low Interest Rate.

**Bad Credit ?**
No Income verification - No Credit Check

VIA FINANCIAL

sathy@viafinancial.ca www.viafinancial.ca

***condition may apply under the guideline of the lenders.



Chapel Ridge

FUNERAL HOME & CREMATION CENTRE

## Serving the Tamil Community

OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

### *At Need Funeral Arrangements*



**Vilosanan Sivatharman**
416-993-0826

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception* • *Burial* • *Cremation*

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

### *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**

- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**

- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

**1911 Woodbine Ave, Markham ON, L3R 5G1**
**www.chapelridgefh.com**
**info@chapelridgefh.com**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நரம்ப சுருட்டல்?

வெரிகோஸ் வெயின் (vericose vein ) இதனை—கவனிக்காமல் விட்டால்..!!!!

நீண்ட நேரம் நிற்க முடியாமை, கால்களில் சிலந்தி வலை போன்று நரம்புகள் சுருண்டு குடைச்சல் தருவதை நரம்பு சுருட்டல் அல்லது நரம்புசுளிவு

Vericose vein என்கிறோம். இதனை கவனிக்காமல் விட்டால் இருதய கோளாறுகளையும் ஏற்படுத்தும்.

பொதுவாக இடுப்பிற்கு கீழ் தொடையின் பின்புறமாக கீழ் நோக்கி பாதம் வரைக்கும் சிலந்தி வலை தோற்றம் போன்று காணப்படும்.

பாதிக்கப்பட்ட ரத்தக்குழாய் பெரிதாகவும், தடிமனுடனும், அதிக வளைவுடனும் தனித்து தென்படும். பாதிக்கப்பட்ட ரத்தக்குழாய் இயல்பாக ரத்தத்தின் வேகம் குறைந்தும் மேல் நோக்கி நகர்ந்து போக முடியாத நிலையும் அங்கேயே தங்கி பல பிரச்னைகளை ஏற்படுத்தும். 10 முதல் 20 சதவீத மக்கள் இப்பிரச்னையால் பாதிக்கப்பட்டுள்ளனர். சிலருக்கு வெளியில் காட்டாத சிறிய நிலையிலும், சிலருக்கு எளிதில் வெளியில் தெரியும் நிலையிலும் உள்ளது. குறிப்பாக 30 முதல் 70 வயதினரிடையே இந்நோய் தாக்கம் அதிகம் உள்ளது. ஆண்களை விட பெண்களுக்கு அதிகம் உள்ளது. தற்போதைய ஆராய்ச்சியில் பாதிப்பிற்குள்ளான 50 சதவீத மக்களிடம் பாரம்பரியமாக இந்நோய் இருப்பதாக கூறுகிறார்கள்.

நமது கால்களில் ரத்த ஓட்டம் சீராக ஓடாமல் இருப்பதால் ஏற்படுகிறது. அதுமட்டும் இல்லாமல் ரத்தகுழாய்களில் உள்ள வால்வுகளின் செயல்பாடுகளில் தளர்ச்சி மிகுதியால் ரத்தம் பின்நோக்கி சென்று ஒரே இடத்தில் அதிலும் தோலுக்கு அடியில் உள்ள ரத்த குழாயில் வீக்கம் ஏற்பட்டு தென்படும். இதனையே வெரிக்கோசிஸ்வெயின் என்கிறோம்.

காரணங்கள்:

அதிக நேரம் நிற்பது, நடப்பது, உட்காருவது, அதிக உடல் எடை, கர்ப்பகாலத்தில் வருவது பிரசவத்திற்கு பின்னர் இருப்பது இல்லை. இரத்த நாளங்களில் உள்ள வால்வுகள் செயல் இழப்பதாலும், ரத்த குழாய் மெல்லியதாகி தளதளஎன ஆகிவிடுகிறது.

வெட்டுகாயம், அடிபட்டாலும் வரலாம். வெரிகோஸ் வெயின் உண்டாவதன் காரணிகள்! நோய் எதிர்ப்பு மண்டலம், காயம் அல்லது சிகிச்சை காரணமாக நரம்பில் சேதம் உண்டாவதால் வெரிகோஸ் வெயின் உண்டாகலாம். இரத்தம் தடிமனாக தடித்து, இரத்த ஓட்டம் குறைந்து கட்டிகள் உண்டாகியிருந்தால் வெரிகோஸ் வெயின் உண்டாகலாம். மரபணு கோளாறுகள். உடலில் அதிக அளவில் ஈஸ்ட்ரோஜன் இருந்தால். யாருக்கு எல்லாம் வெரிகோஸ் வெயின் அபாயம் அதிகம் இருக்கிறது? வயதானவர்கள் புகைப்பவர்கள் உடல் பருமனாக இருப்பவர்கள் அதிக நேரம் உட்கார்ந்தே வேலை பார்ப்பவர்கள். புற்றுநோய் உள்ளவர்கள் அறுவை சிகிச்சை செய்துக் கொண்டவர்கள் மூளையில் தாக்கம் / காயம் உண்டானவர்கள் அதிக ஓய்வில் இருப்பவர்கள் பிரசவம் ஆனபிறகு பெண்களுக்கு ஏற்படும் ஹார்மோன் மாற்றத்தால் வெரிகோஸ் வெயின் உண்டாகலாம்.




அறிகுறி:

இடுப்பிற்கு கீழ் ஒன்றுக்கு அதிகமான நரம்புகள் சுருண்டும், வீங்கியும் சிலந்தி கூடு போன்று தென்படும். சில சமயம் இரவுநேரம் வலி வீக்கம், பாதம் #மரத்து போகும் நிலை ஏற்படுகிறது. நோய் முற்றிய நிலையில் #குழாய் #வெடித்து உள்ளேயே ரத்தம் வெளியேறிகொண்டு இருக்கும். சில சமயம் (eczema) மற்றும் தோல் சம்மந்தமான பிரச்னை ஏற்படும்.

கணுக்காலில் வீக்கம் ஏற்பட்டால் வால்வுகளில் கோளாறு இருப்பதாக கருதலாம்.

நோயினால் வரும் பிரச்னைகள்:

தோலுக்கடியில் உள்ள ரத்த நாளங்களில் வலி. தோல் சிவந்து காணப்படும். இதற்கு காரணம் ரத்தம் உறைந்து கட்டி ஆவதே. உள்ளேயே ரத்தநாளம் உடைந்து உள்ளேயே கட்டி நின்று தீரா காரணங்களையும் ஏற்படுத்தி விடும். டிவிடி (deepveinthromfosis) என அழைக்கப்படும் சிறிய ரத்த உறைவுகள் பல ரத்த குழாய்களின் உள் ஒட்டி கொண்டு இருக்கும்.

இது ரத்தத்தோடு மேல் நோக்கி போய் இருதயம் மற்றும் மூளையில் அடைப்பை ஏற்படுத்த வாய்ப்புண்டு.

ஆரம்பநிலைகளில் சித்த ஆயுர்வேத மருத்துவத்தில் தகுந்த மூலிகை உட்கொள்வதிலும், வெளிபூச்சாக தைங்களுங்களும் அதற்கு என்று மெழுகுவகை பூச்சுகளும் இருக்கின்றன

சிலவகை யோக பயிற்சிகளும் இந்த வெளிப்பூச்சுகளும் நோயை நிரந்தரம் ஆக்காமல் வலி இல்லாமல் போக செய்யும் அற்புத விஷயங்கள் கையில் இருக்கும் போது எதற்கு கவலை !




எழில்மதி பாலசந்திரன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மனுசங்கடா




உடலுக்கு பின்னால் உள்ள அரசியல் என்ன? "சவப்பெட்டிகளுக்கு பிணம் யாருடையது என்பதில் அக்கறையில்லை" என்றது கவிதை வரிகள் (காலத்தின் பதிவுகள்) . ஹோட்டல் ருவண்டா படத்தில், போல் ஒரு வீதியில், தனது வாகனத்தால் இறங்கிய போது, வீதியெங்கும் உடல்கள் காணப்பட்டன. அவரது கால்களில் உடல்கள் தட்டுப்பட்டன. Hutu, Tutsi ஆகிய இரு இனங்களுக்கிடையிலான உள்நாட்டுப் போரில் இறந்த—கொல்லப்பட்ட Tutsi இன மக்களின் உடல்களே அங்கு காணப்பட்டன. இயக்குனர் ரெரி ஜோர்ஜ் இறந்த உடல்களை காட்டியே அங்கு நடைபெற்ற ஒரு இன அழிப்பின் கொடூரத்தை வெளிப்படுத்தினார். ஒரு இனத்தை வெற்றி கொள்வதற்கு அழிக்கப்படும் உயிர்களே பலியாகின்றன. இது முன்னொரு காலத்திலிருந்தே தொடர்கின்றது.

பிரேதத்தை மையப்படுத்தி வெவ்வேறு காலகட்டங்களில், வெவ்வேறு சூழலில் வெளியாகிய படங்கள் மிக முக்கியமான சமூக, அரசியல் வன்முறையை, அநீதியை பதிவு செய்துள்ளன.

2011ல் வெளியானது Human Resources Manager என்ற ஹீப்று—ருமேனிய—ஆங்கிலப்படம்.பேக்கரியில்(வெதுப்பகம்) வேலை பார்த்த பெண் இறந்து விட்டார். ஜெருசலேத்தில் நடைபெற்ற தற்கொலை குண்டுத் தாக்குதலிலலேயே அப் பெண் இறக்கின்றார். இறந்த பெண்ணின் உடலை மனிதாபமற்ற முறையில் தவிர்ப்பதாக அதாவது கவனமெடுக்க தவறியதாக பேக்கரி மீது உள்ஊர் பத்திரிகை ஒன்று குற்றஞ் சாட்டியது. பேக்கரி முதலாளியின் வேண்டுகோளுக்கிணங்க அப் பெண்ணின் உடலை ருமேனியாவில் உள்ள ஒரு கிராமத்திற்கு தரைவழியே, பேக்கரியின் மனித வள முகவர் கொண்டு செல்கின்றார். உடலுடன் பயணிப்பவரும் ஒரு ஊழியர், இப் பயணத்தில் அவரது உயிருக்கு




எவ்வித பாதுகாப்பும் இல்லை.போரின் அவலங்களையும், முன்னால் சோவியத் யூனியனின் ஆட்சியிலிருந்த கிராமங்களையும் இயக்குனர் பதிவாக்கியுள்ளார். இப் படம் போர், உலகமயமாதல், நவதாரளவாதம் (Neoliberalism) ஆகியவற்றின் விளைவை ஒரு பயணத்தினூடகவும், இறந்த மனிதனின் உடலூடாகவும் வெளிப்படுத்தியுள்ளது. பேக்கரியின் அக்கறை அப் பெண்ணல்ல. அவரது இறந்த உடலுமல்ல. தனது வியாபாரம் இதனால் பாதிக்கப்படக் கூடாது. அதே சமயம் இறந்த உடலை, இறந்தவரின் குடும்பத்திடம் கொடுப்பதன் மூலம், கிடைக்கும் நல்ல பெயர், பெரும்பாலான வணிக நிறுவனங்கள், தங்களது வருமானத்தை அதிகரிக்க, சமூக அக்கறை கொண்டுள்ளதாக வெளிப்படுத்துகின்றன. வணிக நல விடயங்களில் அக்கறையுள்ளதாக காட்டிக் கொள்கின்றன. போர் நடைபெறும் இடத்துக்கு வேலை தேடிச் செல்ல வேண்டிய அவலம், அந்தத் தொழிலாளி வேலை தேடிச் சென்ற பாதையிலேயே அவரது உடல் மீண்டும் செல்கிறது. அவருடன் நவதாரளவாதம், உலகமயமாதல், நிர்ப்பந்திக்கப்பட்ட போர்கள் ஊர்வலமாக செல்கின்றன. ருமேனியாவில் ஒரு சமூக பொருளாதார உடைவினாலேயே ஏற்படுகின்றது. இந்த சமூக சிதைவின் காரணிகளை பிரசன்னா விதானகே தனது படமான முழு நிலவில் மரணத்தில் விசாரணைக்குட்படுத்துகின்றார்.

பிரசன்னா விதானகேயின் புரசந்த கலுவர Purahanda Kaluwara (Death on a Full Moon Day —முழு நிலவில் மரணம்)வில் உடலானது ஒரு வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் வாழ்வியல் முதலீடாக வெளிப்படுகின்றது.

தந்தை தனது மகன் இறந்து விட்டான் என்பதனை நம்ப மறுத்து, இராணுவ மரியாதைகளுடன் புதைக்கப்பட்ட இராணுவ வீரனின் சவக்குழியை தோண்டுகின்றார். தங்களது குடும்பத்திற்கு ஒரு வீடு கட்டுவதற்கும், தனது சகோதரியின் திருமணத்தை நடாத்துவதற்குமே மகன் இராணுவத்தில் இணைகின்றான். அவனது உடல் அக் குடும்பத்தின் பல பிரச்சினைகளை தீர்க்கின்றது. புலிகளுடன் போரிட்டபோது நிலையான வருமானம் அக் குடும்பத்திற்கு கிடைத்தது. பின்னர் உடலுக்கான ஓய்வு ஊதியத் தொகை கிடைக்கும். தந்தைக்கோ மகனின் இறப்பு முதலாவது போரில் தோற்று விட்டது, இரண்டாவது தனது குடும்ப முதலீடு இல்லாமல் அழிந்து விட்டது ஆகிய இரண்டு காரணிகளையும் ஏற்றுக் கொள்ள முடியாமல் உள்ளது. குடும்ப உறுப்பினர்கள் தமது அக உணர்வுகளுடன் முரண்பட்டே செயல்படுகின்றனர். இதனை பிரசன்னாவின் காட்சிகள் இயல்பாக வெளிப்படுத்துகின்றன. போரின் மீதான அல்லது பெரும்பான்மை சமூகத்தின் பிரதிநிதியாக, ஒரு குற்ற உணர்வின் வெளிப்பாடாக, தனது சமூகத்தில் போரினால் பாதிக்கப்பட்ட சமூகத்தின் விசாரணையாக இப் படத்தை பிரசன்னா காட்சிப்படுத்தியுள்ளார். இன்று போருக்குச் செல்லும் மேற்கு நாடுகளின் இராணுவ வீரர்களை, இராணுவத்தில் இணைப்பதற்கான விளம்பரங்களில், அவர்களது வறுமையிலிருந்து அவர்கள் மீற்கப்படுவார்கள் போன்று காட்டப்படுகின்றன.

பப்லோ லறைனின் போஸ்ட்மோர்ட்டம் (Post-mortem) திரைப்படத்தில், சிலியின் சோசலிச ஜனாதிபதி சல்வடோர் அல்லெண்டேயின் உடலை பரிசோதிக்கும் காட்சிகள் வருகின்றன. படத்தின் பெரும்பாலான காட்சிகள் பிரேத பரிசோதனைக் கூடத்திலேயே நடைபெறுகின்றன. அங்கு பிரேத பரிசோதனை அறைக்கு வரும் உடல்கள் மத்திய மற்றும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் உடல்களே வருகின்றன. உயிருடன் வரும் உடல்களும், அங்கு இறக்கடிக்கப்படுகின்றன. இந்த இரு வர்க்கத்தினரே புரட்சியில் பெரும்பாலும் பங்கு பற்றுபவர்கள். ஒரு நடுத்தர வர்க்கத்தின் சிதைவை இந்த பிரேத பரிசோதனைக் கூடத்தில் காணலாம்.

கடந்த ஆண்டு (2017) Three Billboards Outside Ebbing, Missouri படம் வெளியாகியிருந்தது. அமெரிக்காவில் தொடரும் ஒரு சமூக வன்முறையில், அன்ஜெலா என்ற பதின்ம வயது பெண் பாலியல் வல்லுறவுக்குட்பட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல்லப்பட்டார். இவரது தாய் தனது மகளின் மரணத்துக்கு காரணமானவர்களை அரசு கண்டுபிடிக்க வேண்டும், தண்டனை வழங்க வேண்டும் என போராடினார். உச்சக் கட்டமாக அரசின் மீதும் அதிகாரிகள் மீதுமான தனது வெறுப்பையும், நம்பீக்கையீனத்தையும், மூன்று விளம்பரப் பலகைகள் மூலம் பின்வருமாறு வெளிப்படுத்தினார்"RAPED WHILE DYING", "STILL NO ARRESTS?", ,"HOW COME, CHIEF WILLOUGHBY?". ". ஒரு மத்திய வர்க்கப் பெண்ணினால் வேறு எவ்வாறு அரசிடம் நீதி கேட்டு போராடலாம்? கொல்லப்பட்டவருக்கு என்ன நடந்தது, எவ்வாறு நடந்தது எனக் காட்டப்படவில்லை. உடல் பிரதான பாத்திரமாக இருந்தாலும், அதன் பின்னால் உள்ள அரச அதிகாரமும், அழிந்து போகும் நடுத்தரவர்க்க நம்பிக்கையீனதுக்குமே படம் முக்கியத்துவம் கொடுக்கின்றது. அரச வழிபாட்டு முறைக்கு எதிரான ஒரு தோற்றுவாயை இப் படம் முன்னெடுத்துள்ளது. சுமார் ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னர், இலங்கை இராணுவத்தால் பாலியல் வல்லுறவுக்குள்ளாகி கொல்லப்பட்டதாக அறியப்படுகின்றன இசைப் பிரியா வின் மரணத்தை மையமாக வைத்து "போர்க்களத்தில் ஒரு பூ" என்ற படம் வெளியாகியிருந்தது. இப் படத்தில் இசைப்பிரியாவை விட அவருக்கு நடைபெற்ற வன்முறையை பல கோணத்தில் படமாக்கியுள்ளார்கள். இங்கு இசைப்பிரியாவின் உடல் வணிகப் பொருளாக மாற்றப்பட்டுள்ளது. நீதிக்குப் பதிலாக நிதியே முக்கியத்துவம் பெறுகின்றது. இதுவும் ஒரு வகை உடலரசியலே.

2017ல் வெளிவந்த முக்கியமான படம் மனுசங்கடா. இப் படத்தின் இயக்குனர், ஒரு திரைப்பட விமர்சகர், நூலாசிரியர், விரிவுரையாளர் அம்~ன் குமார். இப் படத்தில் உடலானது உயர் சமூகத்தின் ஒடுக்குமுறை வெளிப்படுகின்றது. எப்பொழுதும் ஆக்கிரமிக்கும் சமூகத்துக்கு, அரசு இயந்திரங்கள் உதவி இருக்கும். அதே போல் அரசுக்கும், ஆக்கிரமிக்கும் சமூகம் ஆதரவு கொடுக்கும். இங்கும் அது தான் நடைபெறுகின்றது.

மனுசங்கடா திரைக் கதை தமிழ்த் திரையுலகிற்கு புதியதல்ல. ஆனால் வித்தியாசமானது. கோலப்பன் தனது தந்தை இறந்துவிட்டார். சென்னையிலிருந்து கிராமத்துக்குச் செல்கின்றார் கோலப்பன். அவரது தந்தையின் உடலை எரிப்பதற்கு எடுத்துச் செல்லும் பாதை, உயர் சாதியினருக்குரியது, எனவே மாற்றுப் பாதையான புதர் நிறைந்த பாதையினூடாகவே எடுத்துச் செல்ல வேண்டும் என்ற கட்டாயம். இதனை கோலப்பன் எதிர்க்கின்றார். கோலப்பனுக்கு சாதாகமாக நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. ஆனால் உயர் சமூகம் ஏற்க மறுக்கின்றது. இறுதியாக பொலிஸ், உடலை புதைத்துவிடுகின்றது. எங்கு புதைக்கப்பட்டது என்பதனையும் தெரிவிக்கவில்லை. இங்கு உடல், பாதை, அரசு , உயர் சமூகம் போன்றவையே பிரதான பாத்திரங்கள். பிண்ணனி இசை பல இடங்களில் மவுனித்து, கிராமத்து இயல்பான ஒலியை பதிவு செய்கின்றது. அரசை விட உயர் சமூகமே ஆதிக்க சக்தியாகவுள்ளது. அவர்களை நீதிமன்ற தீர்ப்புக்கள் எதுவுமே செய்யமுடியாது. ஏனெனில் நீதியின் காவலர்கள், உயர் சமூகத்தின் ஆதிக்கத்துக்குட்பட்டு செயல்படுகின்றார்கள். ஒரு இறப்பின் பின்னரே படம் ஆரம்பமாகின்றது. ஒரு உணர்ச்சியூட்டக்கூடிய சம்பவம் இருந்தும், அதன் பின்னால் உள்ள அரசியலுக்கும், சமூக ஒடுக்குமுறைக்கும் முக்கியத்துவமளித்துள்ளார். பாத்திரங்கள் உணர்ச்சிவசப்பட்டிருந்த போதும், அவர்கள் சார்ந்த சமூகம் இயல்பாக இயங்கிக் கொண்டிருக்கின்றது. இதற்காகவே குளோசப் காட்சிகளை பெரும்பாலும் தவிர்த்துள்ளார். கமாரவைக் கையாண்ட முறையும் வித்தியாசமானது. கைகளில் கமாராவை வைத்து முன் பகுதியில் படமாக்கியுள்ளார். ஆனால் நிலையற்ற நீதி மன்றத்துக்கு, நிலையாக ஒளிப்பதிவுக் கருவியை நிறுத்தியுள்ளார். மறுபுறம் அக வாழ்வின் சமூக அத்திவாரங்களை கட்டுடைத்துள்ளார். சமூகம், தனி நபர், அரசு மூன்றும் இணையும் பொழுது தோன்றும் ஆக்கிரமிப்பு நிலையானது வலிமையானது. இதுவே தொடர்ந்து வரும் ஒரு நிலையற்ற, நீதியற்ற நிலையை தோற்றுவிக்கின்றன. இதனை ஆழமான விசாரணைக்குட்படுத்துகின்றார் அம்~ன் குமார். தமிழில் வெளிவந்த படங்களில் முக்கியமான ஒரு படம் மனுசங்கடர். இவ்வாறான படங்கள் தமிழின் புதிய சினிமாவுக்கான பாதையை உருவாக்குகின்றன. இவ்வாறான சுயாதீனப்படங்களின் வருகையை வரவேற்கவேண்டும்.

உடல்களின் பிரதிகளின் பதிவுகளில் அண்மையில் வெளிவந்த மனுசங்கடாவை தவிர்க்க முடியாது. படைப்பாளியின் மனதில் தோன்றும் ஒரு குற்றஉணர்வின் வெளிப்பாடாகவும் படைப்புக்கள் அமைந்து விடுகின்றன. இதனை போர் மற்றும் சமூக வன்முறைகள் பற்றிய படைப்புக்களில் அதிகளவில் காணலாம். அம்~ன் குமாரும் விதிவிலக்கல்ல. பிரசன்னா விதானகேயிடம் காணப்படும் குற்ற உணர்வின் வெளிப்பாடை அம்~னின் படைப்புக்களில் காணலாம். நிலையற்ற நீதி மன்றத்துக்கு, நிலையாக ஒளிப்பதிவுக் கருவியை நிறுத்தி, அக வாழ்வின் சமூக அத்திவாரங்களை கட்டுடைத்துள்ளார். சமூகம், தனி நபர், அரசு மூன்றும் இணையும் பொழுது தோன்றும் ஆக்கிரமிப்பு நிலையானது வலிமையானது. இதுவே தொடர்ந்து வரும் ஒரு நிலையற்ற, நீதியற்ற நிலையை தோற்றுவிக்கின்றன. இதனை ஆழமான விசாரணைக்குட்படுத்துகின்றார் அம்~ன் குமார். தமிழில் வெளிவந்த படங்களில் முக்கியமான ஒரு படம் மனுசங்கடர். இவ்வாறான படங்கள் தமிழின் புதிய சினிமாவுக்கான பாதையை உருவாக்குகின்றன. இவ்வாறான சுயாதீனப்படங்களின் வருகையை வரவேற்கவேண்டும்.

மேற்கூறிய படங்கள் அனைத்தும் நீதியின் சார்பு நிலை, நிலமானிய சமூக ஒழுங்கின் நிலை, நடுத்தர வர்க்கத்தின் சிதைவு, வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் அழிவு, சமூக சக்திகளின் அதிகார நிலை போன்றவற்றை ஆழமாக மீளாய்வுக்குட்படுத்துகின்றன. அவ்வகையில் இன்றைய கால கட்டத்தில் இப் படங்களின் உடல்கள் ஒரு கட்டுடைப்பை செய்கின்றன.

ரதன்


DEBT FREE CREDIT SOLUTION

Seeking freedom from DEBT?

We offer Total Debt FREE SOLUTIONS



Elankeeran .T

*Certified Insolvency Counsellor*

By Canadian Association of Insolvency and Restructuring Professionals (CAIRP)

- கடன் தொகையினை 80% வரை குறைத்து அதனை வட்டியின்றி ஒரு மாதத் தவணையில் கட்ட ஏற்பாடு செய்தல்.

  We provide expert advice on how to consolidate and reduce debt payments safely without borrowing money.

- பாதுகாப்பான முறையில் கடனை அடைப்பது பற்றிய அறிவுரையும் ஆலோசனையும் தரப்படும்.

  We shield you from your creditors and offer you a guranteed protection.

SETTLEMENT
CONSUMER PROPOSAL
BANKRUPTCY

Cell. 416.834.7227 Fax. 1.877.800.789
Tel. 416.434.1522 freedebt.toro@gmail.com

**Head Office:**
10 Milner Business Court, Suite 334
Toronto, ON. M1B 3C6

**Branch Office:**
101 Palstan Road
Mississauga, ON. L4Y 4E7

www.TotalDebtFree.ca


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்து ஆண்டுகள் காட்டாச்சி நடாத்திய இராசபக்சா குடும்பத்தைச் சேர்ந்த கோத்தபாயா அடுத்த சனாதிபதியா?







இலங்கையில் அடுத்த சனாதிபதி தேர்தல் நடப்பதற்கு ஒன்றரை ஆண்டுகள் இருக்கின்றன. ஆனால் தேர்தல் களத்தில் இறங்க இப்போதே ஆயத்தங்கள் நடைபெறுகின்றன. இதில் மூன்று பேர்களது பெயர்கள் அடிபடுகின்றன.

இப்போதுள்ள சனாதிபதி மைத்திரிபால சிறிசேனா மீண்டும் போட்டியிடுவார் என்று அவரது கட்சியில் உள்ள அமைச்சர்கள் சொல்கிறார்கள். அதே போல் ஐக்கிய தேசியக் கட்சி அமைச்சர்கள் சிலர் பிரதமர் இரணில் விக்கிரமசிங்காதான் தங்கள் கட்சியின் சனாதிபதி வேட்பாளர் என உறுதிபடக் கூறுகிறார்கள். இந்த இருவரைத் தவிர மூன்றாவதாக முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் முன்னாள் சனாதிபதி மகிந்த இராசபக்சா அவர்களின் உடன்பிறப்புமான கோத்தபாய இராசபக்சாவும் களம் இறங்கியுள்ளார்.

கோத்தபாய தேர்தலில் போட்டியிடுவதற்குப் பெரிய தடைக் கல்லாக இருப்பது அவரது இரட்டைக் குடியுரிமை. 1992 இல் இலங்கை இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்ற கோத்தபாய அமெரிக்காவுக்குக் குடிபெயர்ந்தார். பின்னர் அந்த நாட்டின் குடியுரிமையைப் பெற்றார். 2005 இல் நாடு திரும்பிய கோத்தபாய இலங்கைக் குடியுரிமையைப் பெற்றார்.

**சில ஓய்வு பெற்ற இராணுவ தளபதிகள் மட்டும் அல்லாமல் பெரும் சிங்கள வணிகர்கள், செல்வந்தர்கள் கோத்தபாயாவுக்கு ஆதரவு அளித்து வருகிறார்கள். அவர்கள்தான் வெளிச்சம், அறிவாளிகளின் பாதை என்ற அமைப்புகளை இயக்கும் சூத்திரதாரிகள்.**

"நான் சனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது நிச்சயமானால் அமெரிக்க குடியுரிமையை இரண்டு மாதத்தில் துறந்துவிடுவேன்" எனக் கூறுகிறார். ஆனால் அவர் நினைப்பது போல அது எளிதாக இருக்க மாட்டாது என அமெரிக்க குடிவரவு அதிகாரிகள் கூறுகிறார்கள்.

கோத்தபாயாவுக்கு எதிரான மனிதவுரிமை மீறல்கள், இலஞ்சம் மற்றும் கொலைக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணை இடம்பெற்று வருகின்றன.

**இதில் வியப்பு என்னவென்றால் நாட்டைக் கொள்ளை அடித்து உலையில் போட்ட இராசபக்சா குடும்பத்தைச் சார்ந்த ஒருவரே தேர்தலில் பேட்டியிட்டு அடுத்த சனாதிபதியாக வர முயற்சிக்கிறார்.**

கோத்தபாய தான் போட்டியிடுவதற்கு ஒரேயொரு தக்கு மட்டும் வைத்திருக்கிறார். அது தனது அண்ணன் முன்னாள் சனாதிபதி மகிந்த இராசபக்சாவின் ஆசீர்வாதம் இருந்தால் மட்டுமே தேர்தலில் போட்டியிடப் போவதாகச் சொல்கிறார்.

கோத்தபாய தனது அரசியல் படிமத்தைத் துலக்குவதற்கு இரண்டு அமைப்புகளை உருவாக்கியுள்ளார். ஒன்று எலியா (வெளிச்சம்) மற்றது விஜயத் மகா (அறிவாளிகளின் பாதை) என்பதே அந்த இரண்டு அமைப்புகளாகும். இதில் விஜயத் மகா கடந்த மே 13,Shangri-La Hotel, கொழும்பு என்ற 5 நட்சத்திர ஹோட்டலில் நடத்திய அதன் முதலாவது ஆண்டு மாநாட்டில் கோத்தபாயா அறிவால் மிகுந்த இலங்கைக்குத் தேவையான இலட்சிய நோக்கின் அவசியம் (THE NEED FOR AN ACTIONABLE VISION FOR SRI LANKA) என்ற தலைப்பில் முக்கிய உரையாற்றினார். இந்த மாநாட்டில் மகிந்த இராசபக்சா உட்படச் சுமார் 2,000 பேர் கலந்து கெண்டார்கள். மாநாட்டின் முடிவில் எல்லோருக்கும் இரவு விருந்து அளிக்கப்பட்டது. கொழுப்பில் நடந்த மாநாட்டை அடுத்துப் பதுளை போன்ற நகரங்களிலும் மாநாடுகள் நடத்தப்பட்டன.

இதனை எழுதும்வரை கோத்தபாயாவை சனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு மகிந்தா இன்னமும் பச்சைக் கொடி காட்டவில்லை. சனாதிபதி வேட்பாளரைத் தெரிவு செய்யக் காலம் இருக்கிறது. அப்பேது பார்க்கலாம் என மகிந்தா இராசபக்சா சொல்லி வருகிறார். கோத்தபாயாவை சனாதிபதி வேட்பாளராக நிறுத்த மகிந்தாவுக்கு உள்ளூர விருப்பமில்லை எனச் சிலர் நினைக்கிறார்கள். ஒருவேளை தனது வாரிசான இளவரசர் நாமலுக்கு முடி சூட்ட மகிந்தா விரும்பலாம். எது எப்படியிருப்பினும் இராசபக்சா குடும்பத்தில் சனாதிபதி வேட்பாளரைச் தெரிவு செய்வதில் கருத்து வேற்றுமை நிலவுவதாகத் தெரிகிறது.

இந்தச் சூழ்நிலையில் அஸ்கிரிய பவுத்தமத பீடத்தின் துணைத் தலைவர் வண. வெந்தருவ உபாலி தேரர் பேசிய பேச்சு அரசியல் வட்டாரங்களில் புயலைக் கிளப்பியுள்ளது. கோத்தபாயாவின் 69 தாவது பிறந்த நாளைக் கொண்டாடும் முகமாக மிரிகானாவில் உள்ள அவரது வீட்டில் தேரர்களுக்குத் தானம் கொடுக்கும் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த மதச் சடங்கை நடத்த வண. வெந்துருவ உபாலி தேரர் அழைக்கப்பட்டிருந்தார். அதில் உரையாற்றிய உபாலி தேரர்,

**"சிறிலங்கா நாட்டுக்கு ஒரு சிங்கள பவுத்த தலைவர் தேவைப்படுகிறார். சிலர் உங்களை (கோத்தபாய) இட்லர் என வருணிக்கிறார்கள். அப்படியென்றால் நீங்கள் இட்லராகவே இருந்துவிட்டுப் போங்கள். இராணுவத்தின் துணையுடன் நாட்டின் தலைமைப் பொறுப்பை நீங்கள் கையில் எடுக்க வேண்டும். அதற்குப் பொருத்தமானவர் நீங்கள்தான்"** எனக் குறிப்பிட்டார்.

இட்லர் ஜெர்மானியர்கள் ஆரியர்கள் என்றும் யுதர்கள் தாழந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் சொல்லி 5 மில்லியன் யுதர்களை வாயுக் கூடங்களுக்கு அனுப்பிக் கொலை செய்தவர்.

இட்லரைப் போலவே பெரும்பான்மை சிங்கள — பவுத்தர்களும் தாங்கள் ஆரிய இனத்தைச் சேர்ந்தவர்கள், தமிழர்கள் இழிவான இனத்தைச் சார்ந்தவர்கள் என்ற மகாவம்ச மனப்பான்மையில் தோய்ந்து போய் இருக்கிறார்கள்.

மேலே கூறியவாறு சில ஓய்வு பெற்ற இராணுவ தளபதிகள் மட்டும் அல்லாமல் பெரும் சிங்கள வணிகர்கள், செல்வந்தர்கள் கோத்தபாயாவுக்கு ஆதரவு அளித்து வருகிறார்கள். அவர்கள்தான் வெளிச்சம், அறிவாளிகளின் பாதை என்ற அமைப்புகளை இயக்கும் சூத்திரதாரிகள்.

இந்த சூத்திரதாரிகளில் ஒருவர் முன்னாள் இராணுவ மேஜர் ஜெனரல் கமல் குணரத்தின. புதிய யாப்பை ஆதரிப்பவர்களுக்கு மரண தண்டனை வழங்க வேண்டும் என மேடைகளில் பகிரங்கமாகப் பேசி வருகிறார். கடந்த ஆண்டு ஒக்தோபர் மாதத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பகாவில் நடந்த கூட்டத்தில் இந்தக் கருத்தைத் தெரிவித்தார். இந்தக் கூட்டம் கோத்தபாய தலைமையில் நடை பெற்றது குறிப்பிடத்தக்கது.

**மரண தண்டனை மட்டுமல்ல புதிய யாப்பை ஆதரிப்பவர்கள் இரண்டகர்களாக நடத்தப்பட வேண்டும் அவர்களுக்கு இறுதி மரணச் சடங்கு நடத்தப்படுவதை அனுமதிக்கக் கூடாது என்றும் கமல் குணரத்தின மேடைகளில் கூறிவருகிறார்.**

கோத்தபாயாவை ஆதரிக்கும் இன்னொரு ஓய்வு பெற்ற இராணுவ தளபதி வலிந்து காணாமல் போனோரைக் கண்டு பிடிக்கும் சட்டத்தை ஆதரிப்போரை அடுத்து வரும் ஆட்சியில் துக்கில் போட வேண்டும் என்று பேசி வருகிறார்.

ஏற்கனவே கோத்தபாய ஒரு சர்வாதிகாரி என்ற பெயரை எடுத்திருக்கிறார். அவர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகக் கடமையாற்றினாலும் பாதுகாப்பு



சம்பந்தமான எல்லா உத்தரவுகளையும் அவரே பிறப்பித்தார். சரண் அடைந்த வி.புலிப் போராளிகளைச் சுட்டுக் கொல்லுமாறு கட்டளை பிறப்பித்தவரும் கோத்தபாயாதான். இராணுவ புலனாய்வுத்துறை அவரது நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கியது என சரத் பொன்சேகா சொல்கிறார்.

சண்டே லீடர் விக்கிரமதுங்க, றக்பி விளையாட்டு வீரர் வசீம் தாஜுதீன் போன்றவர்களது கொலைகளுக்குப் பின்னால் கோத்தபாயாவின் கைகள் இருப்பதாகப் பலர் நம்புகிறார்கள். கோத்தபாயாவின் காலத்தில்தான் வெள்ளை வான்களில் ஆள் கடத்தல், கப்பம் வாங்குதல், வலிந்து காணாமல் செய்தல், கிறீஸ் புதம் போன்ற மனிதவுரிமை மீறல்கள் தாராளமாகவும் ஏராளமாகவும் நடந்தேறியது. சனாதிபதி தேர்தலில் மகிந்த இராசபக்சா தோற்றதற்கு கோத்தபாயவே காரணம் எனப் பலர் நம்புகிறார்கள்.

**13 ஏ சட்ட திருத்தத்தை யாப்பில் இருந்து அகற்ற வேண்டும் என்று கோத்தபாயா பகிரங்கமாகக் கோரிக்கை விடுத்தார்.**

**வட கிழக்கு மாகாணங்களின் குடிப்பரம்பல் தேசிய அளவில் உள்ள குடிப்பரம்பல் போல் இருக்க வேண்டும் என்றார். அதாவது வட கிழக்கு மாகாணங்களில் சிங்களவர் தொகை 74 விழுக்காடு இருக்க வேண்டும் என்றார்.**

**முஸ்லிம் மக்களையும் வணிக நிறுவனங்களையும் இலக்கு வைத்துத் தாக்கிய பொதுபல சேனாவின் தொட்டப்பனாக** (godfather) **கோத்தபாயாவே இயங்கினார்.**

அஸ்கிரிய பவுத்த மத பீடத்தின் துணைத் தலைவர் வண. உபாலி அவர்களின் உரைக்குப் பலத்த எதிர்ப்புக்கள் எழாமல் இல்லை. "கோத்தபாயாவின் குறிக்கோள்களை ஆதரிக்கும் அயோக்கிய பவுத்த தேரர்கள் பற்றி நாம் அறிந்து வைத்திருக்க வேண்டும்" என நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

கிராம விமலஜோதி என்ற தேரர் உபாலி தேரரை கடுமையான வார்த்தைகளில் கண்டித்துள்ளார். இவர் கோத்தபாயாவின் ஆதரவாளர் என்பது குறிப்பிடத்தக்கது,

இரண்டு நாள்களுக்கு முன்னர் அமெரிக்காவில் இருந்து வெளிவரும் The New York Times நாளேடு How China Got Sri Lanka to Cough Up a Port (ஒரு துறைமுகத்தை சிறிலங்காவிடம் இருந்து சீனா எப்படி வளைத்துக் கொண்டது) என்ற தலைப்பில் இலங்கையைப் பற்றி ஒரு நீண்ட ஆய்வுக் கட்டுரை எழுதியுள்ளது. (https://www.nytimes.com/2018/06/25/world/asia/china-sri-lanka-port.html)

New York Times எழுதிய கட்டுரையில் 2015 இல் நடந்த சனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட மகிந்த இராசபக்சாவின் தேர்தல் செலவுக்கு அ.டொலர் 7.6 மில்லியன் பணத்தை Standard Chartered Bank மூலம் China Harbour என்ற சீன நிறுவனம் வழங்கியது என்ற குண்டைத் துக்கிப் போட்டுள்ளது.

தேர்தல் நடப்பதற்குப் பத்து நாட்களுக்கு முன்னால் அ.டெலர் 3.7 மில்லியன் செலவில் ரி சேட் அச்சடிக்க பயன்படுத்தப்பட்டதாக அந்த ஏடு குற்றம் சாட்டுகிறது. மேலும் அ.டெலர் 38,000 மகிந்தாவின் ஆதரவாளரான ஒரு தேரருக்கு வழங்கப்பட்டதாகச் சொல்லுகிறது. இதற்கும் மேலாக அ.டெலர் 1.7 மில்லியன் பெறுமதியான காசோலைகள் அலரி மாளிகையில் (இராசபக்சாவின் உத்தியோக இல்லம்) இருப்பவர்களிடம் கொடுக்கப்பட்டதாக அந்த ஏடு எழுதியுள்ளது.

New York Times **குறிப்பிடும் குற்றச்சாட்டுக்கள் பற்றி மகிந்த இராசபக்சா இதுவரை மூச்சே காட்டவில்லை. மவுனம் சம்மதத்திற்கு அறிகுறி என்று கொள்ளலாமா?**

நாமல் இராசபக்சா மட்டும் New York Times இல் வெளிவந்த கட்டுரையில் சில வேறுபாடுகள் இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்.

இலங்கையில் மொத்தம் ஒன்பது ஆண்டுகள் கொலை, கொள்ளை, ஆள்கடத்தல், கப்பம், ஊழல், இலஞ்சம், ஊதாரித்தனம் எனக் காட்டாச்சி நடாத்திய இராசபக்சா குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் எதிர்வரும் சனாதிபதி தேர்தலில் போட்டியிடப் பேகிறார் என்ற செய்தி உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் எதிர்ப்பு அலைகளைத் தோற்றுவித்துள்ளது!

நக்கீரன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனித உரிமை பேரவை:

# அமெரிக்காவின் விலகலும் கொண்டுவரப்பட்ட தீர்மானமும்



அமெரிக்கா அண்மையில் ஐ நாவின் மனித உரிமை பேரவையில் இருந்து அங்கத்துவத்தை விலக்கிக் கொண்டது. இந்த நிகழ்வானது இலங்கையை எவ்வாறு பாதிக்கபோகின்றது என்று பலரும் அங்கலாய்த்த வண்ணம் உள்ளனர். பலரும் பலவிதமான கருத்தை தெரிவித்த வண்ணம் உள்ளனர்.

இந்த தருணத்தில் நாம் சில அடிப்படை விடயங்களை புரிந்து கொள்ளல் அவசியம். 2015 இல் அமெரிக்காவினால் ஐ நா வில் கொண்டுவரபட்ட பொறுப்புக்கூறல், நல்லிணக்கம், நீதிக்கான நிலை மாற்றத்தை வலிந்து சொல்லும் தீர்மானம் அதிக்கப்படியான மேலதிக வாக்குகளால் ஐநாவில் நிறைவேற்றப் பட்டது. இதில் இலங்கையும் பங்காளி.

இலங்கை இந்த தீர்மானத்தில் உள்ளடக்கிய அம்சங்களை நடைமுறைபடுத்தி மக்களுக்கு நீதியை பெற்று தருவோம் என உத்தரவாதம் அளித்து அதன் பிரகாரம் மந்த கதியிலே அனாலும் தன்னுடைய செயல்பாடுகளை செய்து வருகிறது.

ஆனாலும், அமெரிக்கா ஐ நா மனித உரிமை சபையில் இருந்து விலகியது உலக நாடுகள் மத்தியிலும் மனித உரிமை நிறுவனங்கள், அமைப்புக்கள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்களின் இடையே அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.

மனித உரிமை சபை, மனித உரிமையை காக்கவும் — உரிமைகளை மேம்படுத்தும் நோக்குடன் இயங்கும் சபை. மனித உரிமை சபையில் அங்கத்துவம் வகிப்பதற்கு தேர்தல் மூலமே நாடுகள் தேர்ந்தெடுக்கபடுவது நியதி. இந்த தேர்தலில் வெற்றி பெற நாடுகள் படாத பாடுபடுவதோடு அங்கத்துவ காலம் முடிந்த உடன் மீண்டும் அங்கத்துவத்தை பெறுவதற்கு அவர்கள் அதி முக்கியம் காட்டுவார்கள். இது இவ்வாறு இருக்கும் போது அமெரிக்காவின் விலகல் கவலைக்குரியது.

ஐ நா வில் அனைத்து முடிவுகளிலும் தீர்மானங்களிலும் தாக்கம் செலுத்துவது அல்லது ஆதிக்கம் செலுத்துவது அமெர்க்கா, ரஷ்யா, பிரான்ஸ், ஐக்கிய இராச்சியம், ஜெர்மனி போன்ற நாடுகளாகும். இந்த நாடுகள்தான் ஐநாவின் பாதுகாப்பு சபையின் பிரதானமான நாடுகள்.

மறக்க வேண்டாம்... அமெரிக்கா பாதுகாப்பு சபையில் இருந்து விலகவில்லை — விலகவும் மாட்டாது. ஆனால் மனித உரிமை சபையில் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆதிக்கம் செலுத்தும் நாடுகள் அமெரிக்கா, ரஷ்ய மற்றும் சீனாவாகும். இந்த மூன்று நாடுகளும் மொத்த உலகுலகத்துக்கும் எதிரானவையாக மனித உரிமை சபையில் காணப் படுகிறன.

அதாவது மனித உரிமையை பாதுக்காக்க அல்லது மேம்படுத்த எடுக்கும் முடிவுகள் தீர்மானங்கள் போன்றவற்றில் இந்த மூன்று நாடுகளும் அவர்களுடைய பூகோள அரசியல் லாபத்தை கருத்தில் கொண்டு மட்டுமே ஆதரவோ அல்லது எதிர்ப்போ காட்டுவார்கள்.

இதன் அடிப்படையில் தான் 2015 இல் அமெரிக்கா இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை கொண்டு வந்தது மட்டுமல்ல இலங்கையை தீர்மானத்தின் பங்காளியாக ஆக்க அனைத்து அழுத்தங்களையும் கொடுத்து இன்று வரை கண்காணித்து வருகின்றது. அது மட்டுமல்ல மனித உரிமை சபையில் விலகினாலும் தாம் இலங்கை தீர்மானத்தை நிறைவேற்ற அமெரிக்க தன்னுடைய முழு ஆதரவையும் தருவோம் என்று உறுதியும் அளித்துள்ளனர்.

இங்கே நாம் ஒன்றை புரிந்து கொள்ளவேண்டும், மனித உரிமை சபையில் அமெரிக்க தீர்மானத்தை கொண்டு வந்தாலும் அந்த தீர்மானம் சபையில் ஜனநாயகமுறையில் தேர்தல் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இலங்கையும் பங்காளியாக இந்த தீர்மானத்தை நடைமுறைபடுத்த விருப்பம் தெரிவித்துள்ளது. ஆகவே அமெரிக்க அங்கத்துவ நாடாக இருந்தால் என்ன இல்லாவிட்டால் என்ன, ஆதரவு தந்தால் என்ன தராவிட்டால் என்ன இலங்கை தான் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றியே ஆகவேண்டும்.

ஒன்றை தெளிவாக நாம் ஞாபகத்தில் வைத்திருப்பது அவசியம். அமெரிக்கா இலங்கை தமிழர் மீது வைத்துள்ள அக்கறையால் — அன்பால் இலங்கையில் மனித உரிமை பேணப்படவேண்டும் என்ற காரணத்தினால் இந்த தீர்மானத்தை கொண்டு வரவில்லை. மாறாக அவர்களுடைய பூகோள அரசியல் லாபம் கருதியே இந்த தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

உதாரணத்துக்கு அமெரிக்கா போர்குற்ற விசாரணை பற்றிய தீர்மானம் கொண்டுவந்த அதே ஆண்டு லிபியா நாட்டு மக்களால் போர்குற்ற விசாரணைக்கான தீர்மானம் கொண்டு வரப்பட்டது. ஆனால் அமெரிக்கா அதற்கு எதிராக வாக்களித்தது. இங்கே நகை முரண் தெரிகின்றதல்லவா?

லிபியா மக்களும் மனிதர்களே இலங்கை மக்களும் மனிதர்களே! அகவே ஏன் இந்த பாரபட்சம் என்ற கேள்வி உங்களுக்கு பல உண்மைகளை புரிய வைக்கும்.

இதேபோன்று இன்னும் ஒரு உதாரணம் கியூபா. அமெரிக்காவின் இலங்கை மீதான தீர்மானத்துக்கு கியூபா வாக்களிக்கவில்லை. காரணம், கியூபா அமெரிக்காவின் ஏகாதிபத்தியதுக்கும் முதலாளித்துவத்துக்கும் எதிரான நாடு. ஆனால் எம்மைப்போல் பாதிக்கபட்ட அரும்பெரும் தலைவர் சே பிடல் காஸ்ட்ரோ போன்றவர்களால் ஆழபட்ட நாடு. இருந்தபோதும் கண்ணை மூடிக்கொண்டு அமெரிக்காவை எதிர்ப்பார்களே தவிர எந்த நீதி நியாயங்களையும் கருத்தில் கொள்ள மாட்டார்கள். இதுவே சகல நாடுகளினதும் நிலைப்பாடாகும்.

ஆகவே கிடைத்த துரும்பை சரியாக பயன்படுத்தியும் ஐநாவின் பொறிமுறையை சரியாக எமக்கு சாதகமாக பயன்படுத்தியும் தமிழ் கட்சிகளும் தலைமைகளும் பாதிக்கபட்ட மக்களுக்கு நீதியையையும் நியாயத்தையும் பெற்று கொடுக்க முயற்சி செய்ய வேண்டும்.

**நளினி ரட்ணராஜா**
மனித உரிமை செயற்பாட்டாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோல்களின் திருவிழா!



ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் ஜூன் மாதம் 14ம் திகதி முதல் உலகக் கோப்பை கால்பந்து போட்டிகள் நடைபெற்று வருவது யாவரும் அறிந்ததே!.

இப்பொழுது பல்வேறு நாடுகளின் அணிகள் மற்றும் ரசிகர்கள் வருகைதந்துள்ளமையால் மாஸ்கோ நகரமே திருவிழாக் கோலம் பூண்டு ஜொலிக்கிறது. 32 நாடுகளின் அணிகள் கலந்துக் கொள்ளும் இப்போட்டி ஜூலை மாதம் 15ம் தேதி வரை 64 ஆட்டங்களாக நடைபெற உள்ளது.

அடுத்த உலகக் கிண்ணப் போட்டிகள் 2022ம் ஆண்டு கத்தாரில் நடைபெற உள்ளன. இதனிடையே 2026ம் ஆண்டு உலகக் கோப்பை கால்பந்து போட்டிகளை நடத்தும் வாய்ப்பு யாருக்கு என்று நடந்த வாக்கெடுப்பில் அமெரிக்கா, கனடா, மெக்சிக்கோ ஆகிய மூன்று நாடுகளும் இணைந்து நடாத்தும் வாய்ப்பினைப் பெற்றுள்ளன.

தற்பொழுது நடைபெற்று வரும் உலகக் கோப்பை கால்பந்தாட்டப் போட்டிக்கான கோப்பை ரஷ்யாவின் புனித பீட்டர்ஸ்பெர்க்கில் பிரேசிலைச் சேர்ந்த கால்பந்து வீரரான கில்பர்ட்டோ சில்வா கோப்பையை அறிமுகம் செய்தார்.

இதனைத் தொடர்ந்து பாரம்பரிய இசையுடன் நடன நிகழ்ச்சிகளும் மேடையில் அரங்கேறின. போட்டிக்கான கோப்பை ரஷ்யாவின் பல்வேறு நகரங்களுக்கும் எடுத்துச் செல்லப்பட்டு வருகை தந்திருக்கிறது.

ரஷ்யாவில் மாஸ்கோ, சோச்சி, பீட்டர்ஸ்பர்க், கஸான் உள்ளிட்ட 11 நகரங்களில் உள்ள 12 மைதானங்களில் மொத்தம் 64 போட்டிகள் நடைபெறுகின்றன. இதில் எகடெரின் பர்க் — கலினிங்கிராட் நகரங்களுக்கு இடையே உள்ள தூரம் 2424 கிலோ மீட்டர். மாஸ்கோவுக்கும், லண்டனுக்கும் இடையே உள்ள தூரமும் இதே அளவுதான். மேலும் போட்டிகள் நடைபெறும் மைதானங்களில் 6 மைதானங்கள் ஆசிய கண்டத்திலும், மீதமுள்ள 6 மைதானங்கள் ஐரோப்பிய கண்டத்திலும் உள்ளன. இப்படி இரு கண்டங்களிலும் நடைபெறும் முதல் உலக கோப்பை போட்டி இதுதான்.

ரஷ்ய உலகக் கோப்பைத் தொடர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் 12 மைதானங்களில் 9 மைதானங்கள், புதிதாகக் கட்டப்பட்டவை. காரணம் உலகக் கோப்பை கால்பந்து போட்டி நடைபெறும் மைதானத்தில், குறைந்தது 35 ஆயிரம் இருக்கைகள் இருக்க வேண்டும் என்பது விதிமுறையாகும்.

இப்படி கட்டுமானங்களிலும் புதுமையை கொண்டுள்ளது இந்த கால்பந்து தொடர். உலகக் கோப்பை போட்டியைக் காண ரஷ்யா செல்பவர்களுக்கு விசா தேவையில்லை என்றும் போட்டிக்கான டிக்கெட் வைத்திருப்பவர்களுக்கு, Fan-ID ரஷ்ய அரசால் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நடப்பு போட்டித் தொடரில் இத்தாலி, நெதர்லாந்து போன்ற பலம் வாய்ந்த அணிகள் இல்லாதது, போட்டியின் சுவாரஸ்யத்தைக் குறைக்காது என்று நம்பப்படுகிறது. எகிப்து போன்ற புதுமுக அணிகள் தங்களின் திறமையை நிரூபிக்கப் போராடும் என்ற எதிர்பார்த்து உருவாகி உள்ளது.

இந்த உலகக் கோப்பைத் தொடரின் தர வரிசையில் கடைசி இடத்தில் உள்ள அணி போட்டியை நடத்தும் ரஷ்யாதான்.

நடப்பு போட்டித் தொடரில் முதல் முறையாக உதவி நடுவர் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதே போன்று ஒவ்வொரு போட்டிகளுக்கும் மூன்று கண்காணிப்பாளர்களை சம்மேளனம் நியமித்துள்ளது. போட்டியை காணும் ரசிகர்கள் இனவெறி பிரச்சனையில் ஈடுபட்டால் ஆட்டத்தை நிறுத்தவோ, ரத்து செய்யவோ கண்காணிப்பாளர்கள் பரிந்துரைப்பார்கள்.

**ஐஸ்லாந்து:**

பிபா உலகக்கோப்பை கால்பந்து போட்டிகளுக்கு முதன்முறையாக தகுதிபெற்றுள்ள ஐஸ்லாந்து அணி, உலகக்கோப்பைக்கு தகுதி பெறும் சிறிய நாடு என்ற பெருமையை பெற்றுள்ளது. இந்த நாட்டின் மொத்த மக்கள் தொகையே சுமார் 3,50,000 தான். முன்னதாக, சுமார் 13 லட்ச மக்கள் தொகையை கொண்ட டிரினாட் டொபாகோ அணியே உலகக்கோப்பைக்கு தகுதி பெற்ற மிகச் சிறிய கால்பந்து அணி என்ற பெருமையை பெற்றிருந்தது.

தகுதிச்சுற்றில் 10 போட்டிகளில் விளையாடிய ஐஸ்லாந்து அணி 22 புள்ளிகள் பெற்று உலகக்கோப்பைக்கு தகுதி பெற்றது. இந்த அணியின் பயிற்சியாளர் ஹெய்மிர் ஹால்கிரிம்சன் பல் மருத்துவராக இருப்பவர். இவரது பயிற்சியின் கீழ் தான் அந்த அணி உலகக்கோப்பைக்கு தகுதிபெற்றது.

**பனாமா:**

இந்த உலகக்கோப்பை தொடரில் அறிமுக அணியாக களமிறங்கும் 2வது அணி பனாமா. பல ஆண்டு கால முயற்சிகளுக்குப் பிறகு முதன்முறையாக பிபா உலகக்கோப்பைக்கு தகுதி பெற்றது பனாமா அணி.

மத்திய அமெரிக்க நாடான பனாமா தகுதிச்சுற்று போட்டியில் கோஸ்டா ரிகாவுக்கு எதிரான போட்டி ஒன்றில் 2—1 என வெற்றி பெற்று உலகக்கோப்பைக்கு தகுதிபெற்றது. இந்த போட்டியில் முதலில் இரு அணிகளும் 1—1 என சமநிலையில் தான் இருந்தது. பின்னர், போட்டி முடிவதற்கு 2 நிமிடங்களே இருந்த நிலையில் பனாமாவின் கேப்ரியல் டோர்ரஸ் கோல் அடித்தார்.

அந்த பந்து கோல் எல்லைக் கோட்டை தொடவில்லை என்று கூறி கோஸ்டா ரிகா அணியினர் நடுவரிடம் முறையிட்டனர். ஆனால், நடுவர் அதனை கோல் என்று அறிவித்தார். இந்த சர்ச்சை கோல் தான் பனாமா அணியின் முயற்சிக்கு பலனாக உலகக்கோப்பைக்கு முதன்முறையாக தகுதி பெற வைத்தது.

பனாமா அணி உலகக்கோப்பைக்கு தகுதி பெற்றதை அடுத்து அந்த நாடு அதனை கொண்டாடும் வகையில் தேசிய விடுமுறை அறிவித்திருந்தது என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

இந்த உலகக் கோப்பைதான் 32 அணிகளுடன் விளையாடப்படும் கடைசி தொடர். 2022—ம் ஆண்டு கத்தார் உலகக் கோப்பை முதல், 48 அணிகள் களமிறங்கப்போகின்றன. 16 அணிகளுக்குப் புதியதாக உலகக் கோப்பையில் விளையாடும் வாய்ப்பு கிடைக்கும்.

**சரவண சுப்பையா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிங்கள் மாம்

கணவனை இழந்த, கணவனால் பாதிக்கப்பட்ட, கணவனால் கைவிடப்பட்ட, மணவாழ்க்கையை தொடர முடியாத, நிர்பந்தம், ஏதோ ஒரு பிரச்சனையால் குழந்தையுடன், குழந்தைஇல்லாமல்வாழும்பெண்களை நிலைமை பற்றியது. இந்த ஆக்கம் கொஞ்சம் கத்தியில் நடப்பது போல தான், ஆனால் அதற்காக சொல்லாமல் விட முடியாது. இது பெரும்பாலும் ஆசியர்கள் மத்தியிலேயே அதிகமாக காணக்கூடியதாக இருக்கிறது.

இந்த சமூகத்தை பொறுத்தவரை, இளம்தாய் எனப்படும், சிங்கள் மாம் (single Mom) என்று அழைக்கப்படும் பலரின் பார்வை அவர்களை சந்தேகத்தோடு பார்ப்பது கூடவே இருந்து வருவதும், அறிந்தும் அறியாமலும், தெரிந்தும் தெரியாமலும் இருந்து வருவது கண்கூடு. இவர்கள் யாருடன் பேசினாலும் தப்பு செய்து விடுவார்கள், தப்பு செய்ய கூடியவர்கள் போன்ற எண்ணங்களும், நினைப்பதும் முற்று முழுதாக தவிர்க்க பட வேண்டியது. அது மிகவும் தவறான நோக்கமே, யாரும் தப்பு செய்யலாம் என்பதை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். அதற்கு கணவன் இருக்க வேண்டும் என்பது அல்ல. கணவன் இல்லாமல் இருப்பவர்களை வேலி இல்லாத பயிர் போல யாரும் மேயலாம், என்ற கண்ணோட்டத்தில் அலையும் எண்ணங்களை முதலில் நிறுத்த வேண்டும்.

எந்த ஒரு திருமணமான, ஏன் திருமணமாகாத எந்த ஆணும் நினைப்பது இப்படி பெண்ணை இலகுவில் தங்கள் வலைக்குள் சிக்க வைக்கலாம், வசப்படுத்தி விடலாம் என்பதே. அவர்கள் மனயுளைச்சல், பலயீனங்கள்,வருத்தம் போன்றவற்றை காரணமாக வைத்து, தங்கள் தேவைக்கு பயன்படுத்தி விடலாம் என்றே நினைக்கிறார்கள். அது முற்றிலும் தவறான கண்ணோட்டம் , பிடித்தால் திருமணம் செய்யுங்கள், அதை விடுத்து அவர்கள் வாழ்க்கையை சீரழித்து சிக்கலாகி விடாதீர்கள்.

வாழக்கை என்பது விளையாட்டு மைதானம் அல்ல, தோற்று போனால் மூட்டையை கட்டிக்கொண்டு போவதற்கு. வாழ்க்கையை போராடி, முட்டி மோதி தொடர வேண்டும் என்றே இருக்கிறது. அப்படியான நிலையில் அவர்களுக்கு நாங்கள் அனுசரணையாக, ஆறுதலாக, ஆதரவாக உதவியாக இருக்கலாம். அந்த உதவியை தவறான கண்ணோட்டத்தில் அர்த்தம் பண்ணி கையாள வேண்டாம். ஒரு முறை பாதிக்க பட்ட பெண்கள் மேலும் ஒரு ஒரு வாழக்கையை தேர்ந்து எடுக்க பயப்படுகிறார்கள், மேலும் அவர்கள் தண்டிக்க பட விருப்பம் இல்லாமல் இருக்கலாம், இல்லை வேறு எந்த காரணமாக இருந்தாலும், அது நமக்கு தேவையில்லாதது.

ஒரு பெண் ஒரு ஆணை விருப்பவது அவர்களது தனிப்பட்ட விடயம். அது யாரையும் பாதிக்காது. அதில் நாங்கள் தலையிட வேண்டிய அவசியமும் இல்லை. ஆனால் அனாவசியமாக தவறான காணோட்டத்தில் பார்க்கும் பார்வையம், தேவையற்ற பேச்சும் கண்டிக்க, தவிர்க்க படவேண்டியது. சமுதாயத்தில் உள்ளவர்கள் சற்று சிந்திக்க வேண்டும். இந்த என் மகளாக, சகோதரியாக, என் மனைவியாக இருந்தால் என்ன செய்யவோம் என்று. வீணாக தேவை இல்லாமல் ஒரு பெண்ணின் வாழ்வில் குழப்பத்தை ஏற்படுத்தாமல் இருக்க வழி வகுப்போமாக. முதலில் நாகரீகமாக இருக்க கற்றுக்கொள்வோமாக.

பாமா











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





CIBC
Vince Sinnadurai
Mortgage Advisor, CIBC
Toll Free: 1-888-415-5156
Tel: 416-917-9462, Fax: 905-554-8410
E-Mail: vince.sinnadurai@cibc.com

ekuruvi
416-272-8543

CGA
A Professional Accountant Always Makes A Difference
Nimal Vinayagamoorthy CGA
Cell: 416 888 1128
Tel: 416 494 4777

Mahen Singarajah
Broker
www.MahenOnline.com
RE/MAX Community Realty Inc., Brokerage
Tel: 416.302.7283 Off: 416.287.2222

Divagaran (Div) Manikkavasagar,
Sales Representative
HomeLife/GTA Realty Inc., Brokerage*
Dir: 416-616-6605, Off: 416-321-6969

RAMANAN SANTHIRASEGARAMOORTHY
Salesperson
RE/MAX COMMUNITY REALTY INC. Brokerage
Tel: 416-290-6000 , 416-287-2222


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நானும் சுனாமியும்



கமல் பாணியில் சொல்லப் போனால், நாம் வாழும் இந்த உலகம் மிகவும் விசித்திரமானது. ஒரு குறிக்கோளும் இல்லாமல் இருட்டில் இருந்து வெளிச்சத்தை நோக்கி பயணிக்கிறோம் ஒவ்வொருத்தரின் பயணம் சற்று வித்தியாசமாகவே அமைகிறது...

வாழ்க்கையில் என்னை மிகவும் பாதித்த ஒரு சம்பவம் 2004 ஆம் ஆண்டில் சுனாமி என்ற பெயரில் அரங்கேறியது. 25 ஆம் திகதி நத்தார் இயேசுவின் பிறந்த நாளை உலகமே கொண்டாடும் நாள் இது அனைவருக்கும் தெரிந்ததே, 26 ஆம் திகதி நான் செல்லும் ஆலயத்தில் குடும்ப தினம் கொண்டாடும் நாள். அனைவரும் குடும்பத்தோடு வழிபாடோடுகளில் ஈடுபடும் நாள்.



வழக்கம் போல குடும்பத்தோடஆலயம் சென்று தமிழ் திருப்பலியில் ஈடுபட்ட பொது திடீர் என்று அண்ணா ஓடி வந்து "தண்ணீ வந்துருச்சு தெஹிவல பாலத்துலனு" மெதுவா சொல்ல, "டேய் கண்டபடி உலராத, பேசாம இரு," னு அம்மா சொன்னார்.அப்பொழுது பெரிதாக அந்த விடயம் பற்றி நானோ என் அம்மாவோ யோசிக்கவில்லை. ஆலயத்தில் தெரிந்தவர்கள் எல்லாருக்கும் கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள் சொல்லிட்டு நான் சந்தோஷமா எங்களுக்கு தெரிஞ்ச முச்சக்கர வண்டியில் முகம் முழுக்க சிரிப்பும், எதிர் பார்ப்பும் என் நாள் இருந்தது.



என் எதிர்பார்ப்புக்கு காரணம் அன்று தான் எங்க வீட்டில் கொண்டாட்டம். அப்பா சூப்பர் மார்க்கெட்ல இறங்க நாங்க வீடு சென்றோம். வீடோ தெஹிவளை கடலோரம், இன்னர் யீணீவீகூீலைன் வீதி வீட்டுக்கு முன் ரயில் பாதை அங்க மக்கள் கூட்டம். என்னவாயிருக்கும்னு அம்மா பார்க்க போக நான் வீட்டுக்கு தம்பிட கை பிடித்து, வீட்டுள்ள போக நண்பியிடம் தொலைபேசி அழைப்பு, "தண்ணீ வருதாம் பார்த்து," அப்பவும் பெருசா ஏதும் நடக்காதுனு மனசு சொல்ல, புது டிரஸ் மாத்த போனன். திடீர்னு அம்மா வெளிய இருந்த கதறும் குரல், "தண்ணீ வருது ஓடுங்க," எங்க ஓட கை, கால் நகரந்தா தானே, மனசுக்கு முதல் பட்ட விஷயம் தம்பி. "நான் வர மாட்டன்," இப்புடி அவன் அடம் பிடிக்க என்ன செய்றதுன்னு தெரியாம தம்பிய இழுத்து பிடிச்சு வெளியில கூட்டிட்டு போனா அங்க மக்கள் கூட்டம்.









எல்லாம் ஒரு நொடில நடந்துச்சு, ரெண்டு வாரத்துக்கு முன்னாடி தான் ஹாலிவுட் படம் "டே அஃடர் டுமோரோ" பார்த்தன். அது அப்புடியே கண்ணு முன்னால வந்துச்சு... கால் ஓடல பக்கத்துல இருந்த தம்பிய காணல, கண்ணுல தண்ணீ என்ன ஒரு நேரம். அப்புறம் என்ன நடந்துச்சுனே தெரியாது, நாங்க இருந்த ரோடு ரெண்டா பிரியும், அம்மாவும் தம்பியும் ஒரு பக்கம் ஓட நான் தடுமாறி சூப்பர்மார்கெட்டில் இருக்கும் அப்பாவை பார்க்க போனான். அங்க போக அப்பா இல்ல. சூப்பர்மார்கெட்ல இருந்த எல்லாரும் என்ன வித்தியாசமா பார்த்தாங்க, அது சரி பார்க்க தானே செய்வாங்க காலில் செருப்பில்லை, கண்ணில் கண்ணீர், யாரையோ தேடும் முகம். அங்க இருந்து வெளியில வந்த எனக்கு ஒரே நடுக்கம். பக்கத்துல இருந்த சொந்தக்காரர் வீட்டை போக, அங்க எங்க வீட்டுல பெரிய பிரச்சனைன்னு நினைச்சுட்டாங்க. "கடல் வீட்டுக்கு வந்துருச்சு," இது தான் நான் அவங்களுக்கு சொன்ன பதில். உடனே ஓடி போனாங்க எங்க சொந்தகார அக்கா.

அங்க என் முழு குடும்பமும் என்ன தேடி அலறியடிக்க ஆறுதல் சொல்லி அவங்க வீட்டுக்கு அதாவது நான் இருந்த இடத்துக்கு அழைத்து சென்றாங்க அந்த அக்கா. வாழ்க்கைல எல்லாம் இருக்கு இது தான் சந்தோஷம்னு நினைச்ச எனக்கு 2 வாரம் தூக்கம் இல்ல, கடலுக்கு போகவே பயம். இதனால தான் என்னவோ என் வாழ்க்கைல ஒரு புதிய அத்தியாயம் ஆரம்பமானது.

கனடா நாட்டுக்கு நான் வந்தது இப்புடி தான். இன்னும் கடல், என்றாலே ஒரு இனம் புரியாத பயம் மனதில் தரும்... ஒரு ரெண்டு வாரம் நானும் அகதியாய் வாழ்ந்தேன், என் குழந்தை பருவ புகைப்படங்கள், பெற்றோர்களின் திருமண ஆல்பம் எல்லாமே சுனாமி அழிக்க வாழ்க்கையின் புதிய பயணம் ஆரம்பமானது. இலங்கைல இருந்திருந்தா நான் ஒரு வங்கில வேலை செய்திருப்பேன், இல்ல இந்நேரம் கல்யாணம் ஆகியிருக்கும். இங்க வந்ததாலோ என்னவோ என் சிறு வயது கனவு மீடியாவில் பயணிக்க முடிஞ்சுது. படங்கள்ல சொல்ற மாதிரி நமக்கு அடுத்து என்ன நடக்கும்னு தெரிஞ்சா அப்புறம் நரகம் தான்...

**ரொஷிதா ஸ்போல்டிங்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோட்கேஜ்

புதிய, முதல் தரம் வீடு வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், 3ஆம், Bridge, Private மோட்கேஜ்
சுய தொழில் புரிவோருக்கான மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற் உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கான மோட்கேஜ்



# MORTGAGE

## NESAN
**416-908-5656**

*Residential / Commercial / Industrial / Investment Properties*

1st, 2nd and 3rd Mortgages · Refinance · Secured Line of Credit · New House Commitment, Pre-approval · Home Equity Loan

### 1st Mortgage ('A' lender) Majaor, Under write Banks

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 698,000 | 659.62 | 1319.25 | 1429.19 | 2858.37 |
| 546,000 | 515.98 | 1031.96 | 1117.96 | 2235.92 |

### 1st Mortgage ('B' lender) Under write Banks, Trust, Cridit Union

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 698,000 | 765.04 | 1530.08 | 1657.59 | 3315.17 |
| 546,000 | 598.44 | 1196.88 | 1296.62 | 2593.24 |

### Private Mortgage ('C' lender) Private lender

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 698,000 | 1059.81 | 2119.62 | 2296.26 | 4592.52 |

### 2nd Mortgage ('D' lender) Private lender

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 98,000 | 179.15 | 358.29 | 388.15 | 776.30 |

### 3rd Mortgage ('E' lender) Private lender

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 49,000 | 113.72 | 227.43 | 246.39 | 492.77 |

### Secure Line of Credit & Loan

| Mortgage Amount | Secure Line of Credit | Home Equity Loan |
|---|---|---|
| 225,000 | 1005.95 / per month | 1276.51 / per month |

MORTGAGE ALLIANCE
Thavanesan Subra
Independently Owned and Operated
Brokerage # 10530

1585 Markham Rd, Unit # 407,
Toronto, ON. M1B 2W1
www. nesan.ca
mortgage@nesan.ca

SUBRA MORTGAGE SOLUTIONS INC.
Office: 1-844-878-2721
Fax: 647-351-3099

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயப்பன் இளைஞர் அணி
வழங்கும்

அனுமதி இலவசம்
FREE ADMISSION

JOYTHI

அருள்மிகு கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்

இவ்வாண்டின் மாபெரும்
இன்னிசை நிகழ்ச்சி

GRAND MUSICAL EVENT

AUGUST 04 & 05
2018


CALL FOR MORE INFORMATION
647.407.3810 | 416.558.1579

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் விருது விழா- 2018








# நான் சின்னச் சின்ன விசயங்களால் ஆன மனிதன்



தமிழ் படைப்புலகின் முக்கிய எழுத்தாளர்களுள் ஒருவரான வண்ணதாசனுக்கு வாழ்நாள் சாதனையாளருக்கான இயல் விருது வழங்கப்பட்டது.

2500 டாலர்கள் பணப்பரிசும், பாராட்டுக்கேடயமும் கொண்ட இயல் விருது, கனடா தமிழ் இலக்கியத் தோட்டம் அமைப்பால் ஆண்டுதோறும் தமிழ் இலக்கியத்தில் சாதித்த படைப்பளிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இந்த வருடம் கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் இயல் விருது விழா ஞாயிற்றுக்கிழமை 10 ஜூன் 2018 அன்று ஆறு மணிக்கு டோரொண்டோவில் நடைபெற்றது.

**வண்ணதாசன்**

கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள் மூலம் 50 ஆண்டுகளாக தமிழ் இலக்கிய உலகில் இயங்கிவரும் திரு கல்யாணசுந்தரம் சிவசங்கரன் (வண்ணதாசன்) அவர்களுக்கு தமிழ் இலக்கிய வாழ்நாள் சாதனையான இயல் விருது வழங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து 'வேங்கை நங்கூரத்தின் ஜீன் குறிப்புகள்' நாவலுக்கான புனைவுப் பரிசு தமிழ்மகனுக்கு வழங்கப்பட்டது. அபுனைவுப் பரிசு 'கனடாவில் இலங்கைத் தமிழரின் வாழ்வும் வளமும்' என்ற நூலுக்காக பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்களுக்கும், கவிதைப் பரிசு 'அம்மை' கவிதை தொகுப்புக்காக பா. அகிலன் அவர்களுக்கும், மொழிபெயர்ப்பு பரிசு 'பாலசரஸ்வதி ; அவர் கலையும் வாழ்வும்' நூலுக்காக டி.ஐ. அரவிந்தனுக்கும், ஆங்கில இலக்கியப் பரிசு அனுக் அருட்பிரகாசத்துக்கும் வழங்கப்பட்டது.

சுந்தர ராமசாமி நினைவு கணிமை விருது சசிகரன் பத்மநாதனுக்கும், மாணவர் கட்டுரைப் போட்டி பரிசு [illegible]கரி விஜேந்திராவுக்கும் வழங்கப்பட்டது. தமிழ் இலக்கிய சிறப்பு பரிசுகள் தி. ஞானசேகரனுக்கும், கலாநிதி நிக்கோலப்பிள்ளை அவர்களுக்கும், வழங்கப்பட்டது. கவிஞர் செழியன் நினைவு பரிசை திருமதி துளசி சிவகுமாரன் பெற்றுக்கொண்டு நெகிழ்ச்சியான உரையாற்றினார். விழாவின் முதன்மை விருந்தினர்களாக தண்ணீர் திரைப்படப் புகழ் தீபா மேத்தா மற்றும் நியூ யோர்க் ஸ்டோனி புரூக் பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை நிறுவிய முனைவர் பாலா சுவாமிநாதன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

இயல் விருதைப் பெற்றுக்கொண்ட வண்ணதாசனின் ஏற்புரை சுருக்கமாகவும், அடர்த்தியானதாகவும் அமைந்தது. 'சின்னச் சின்ன விசயங்கள் என்னை ஈர்க்கின்றன. பிரம்மாண்டமான நயாகரா அருவியில் நான் கண்டது உயரமாகப் பறந்த சிறிய பறவையைத்தான். நான் சின்னச் சின்ன விசயங்களால் ஆன மனிதன்' என்று சபையோரின் பலத்த கைதட்டல்களுக்கிடையே வண்ணதாசன் உரை ஆற்றினார். விழாவில் வண்ணதாசனின் 'அந்தரப்பூ' கவிதை தொகுப்பு வெளியிடப்பட்டது. ஆவணப்பட இயக்குநர், பேராசிரியர் சொர்ணவேல் வெளியிட அதை அ.முத்துலிங்கம் பெற்றுக்கொண்டார். கல்வியாளர்களும், தமிழ் ஆர்வலர்களும், கனடியத் தமிழர்களும் பெருந்திரளாக விழாவுக்கு வருகை தந்து சிறப்பித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடா தமிழர் வரலாறு 24




## கனடா தமிழர்களின் தற்போதைய அரசியல் நிலைப்பாடு

கனடா தமிழர்களின் தற்போதைய அரசியல் நிலைப்பாட்டை நாம் கவனத்தில் எடுத்துக் கொண்டால் பல தமிழர்கள் கனடாவில் உள்ள முக்கியமான அரசியல் கட்சிகளில் அங்கத்தவர்களாகஇணைந்திருப்பதை அவதானிக்கலாம். எனவே இங்குள்ள அரசியல் கட்சிகள் பற்றி அறிந்து கொள்ள முக்கியமான அரசியல் கட்சிகளின் பெயர்களை ஆங்கிலத்தில் தருகின்றேன். ;. Bloc Québécois, Canadian Action Party, Christian Heritage Party, Communist Party of Canada, Conservative Party of Canada, Green Party of Canada, Liberal Party of Canada, Libertarian Party of Canada.. இந்தக் கட்சிகளில் தேசிய மட்டத்தில் பெருமளவு மக்களின் ஆதரவைப் பெற்ற கட்சிகளாக Conservative Party of Canada, Green Party, Liberal Party, New Democratic Party (NDP) இருக்கின்றன. இக்கட்சிகளில் என்.டி.பி கட்சி 2011 ஆம் ஆண்டு அதிரடியாக வியக்கத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தியிருந்தது. தற்சமயம் தேசிய மட்டத்தில் லிபரல் கட்சி ஆளுங்கட்சியாகவும், கொன்சவேற்றி கட்சி எதிர்க்கட்சியாகவும் இருக்கின்றன. கனடியத் தமிழர்களும் இந்தக் கட்சிகளில் ஏதாவது ஒன்றில் அங்கத்தவர்களாகவோ அல்லது ஆதரவாளர்களாகவோ இருக்கின்றார்கள். சில தமிழர்கள் அரசியலில் ஈடுபாடு கொள்ளாமலும் ஒதுங்கி இருக்கிறார்கள். அவர்களில் சிலரிடம் இது பற்றி உரையாடிய போது, ஈழத்தமிழர்கள் அவஸ்தைப்பட்டபோது எந்த ஒரு தார்மீக ஆதரவும் தராது வேடிக்கை பார்த்த, ஈழத்தமிழர்கள் மீது தவறாக விமர்சித்த கட்சிகள் மீது அவர்கள் தீராத வெறுப்புக் கொண்டிருப்பது தெரிய வந்தது. அரசியலைப் புரிந்தவர்களுக்கு தெரியும் என்று நினைக்கின்றேன், எவ்வளவு காலத்திற்கு இந்த விருப்பு, வெறுப்பு இந்த மண்ணில் நீடிக்குமோ தெரியாது. இன்று சில தொகுதிகளில் வெற்றி தோல்விகளை நிர்ணயிக்கும் நிலையில் தமிழர்களின் வாக்குக்கள் இருப்பதைக் கடந்தகால அரசியல் நிலவரங்கள் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

முதலில் கனடிய மண்ணில் தமிழர்களின் வரலாற்றைப் பார்ப்போம். கனடா நாட்டிற்குப் புலம்பெயர்ந்த தமிழர்கள் ஆரம்ப காலங்களில் தங்கள் ஈடுபாடுகளை இந்த மண்ணில் பெரிதாக வெளிக் காட்டிக் கொள்ளாமல் தங்கள் குடும்பத்தின், சொந்த பந்தங்களின் வளர்ச்சியிலேயே அதிக கவனம் செலுத்தினார்கள். இங்கு வந்தவர்களில் அனேகர் வான்வழிப் பதைவழியாகவும், கப்பலில் கடல்வழிப் பாதை வழியாகவும், சிலர் அமெரிகாவின் எல்லையைக் கடந்தும் வந்தார்கள். இவர்களில் இலகுவாக உள்ளே வந்து குடியுரிமை பெற்றவர்களும், அதேசமயம் பல தடவைகள் முயற்சி செய்து பல இழப்புக்களைச் சந்தித்து கஷ்டங்களுக்கு மத்தியில் குடியுரிமை பெற்றவர்களும் உண்டு. ஆரம்ப காலத்தில் ஒருசில தமிழர்கள் மட்டும் படிப்பதற்காகவோ, அல்லது தொழில் வாய்ப்புக்கள் கிடைத்தோ இங்கு வந்திருந்தார்கள். இதன் காரணமாக விரவிட்டு எண்ணக்கூடிய குடும்பங்கள் மட்டுமே இருந்த கனடிய மண்ணில் 1983 ஆம் ஆண்டுக்குப் பிற்பாடுதான் கனடிய அரசு ஈழத்தமிழர்கள் மீது காட்டிய ஆதரவு காரணமாகப் பெருமளவில் ஈழத்தமிழர்கள் வந்து குடியேறினார்கள். 1991 ஆம் ஆண்டிற்கும் 2001 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் கனடாவுக்குப் புலம்பெயர்ந்தவர்களின் தொகையில் ஐந்தவது இடத்தை ஈழத்தமிழர்கள் பெற்றிருந்தனர். சுருங்கச் சொன்னால், 150வது தனது பிறந்த தினத்தைச் சென்றவருடம் கொண்டாடிய கனடியமண்ணில் கனடியத் தமிழர்களின் வரலாறு ஆரம்பமாகிச் சுமார் நாற்பது வருடங்கள் தான் ஆகின்றது.

யுத்த சூழ்நிலை காரணமாகப் புலம் பெயர்ந்து கனடிய மண்ணில் வந்து குடியேறிய ஈழத்தமிழர்கள் ஏனைய இனத்தவரோடு ஒற்றுமையாக வாழவேண்டுமானால் தங்களை முதலில் இந்த மண்ணில் நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும் என்ற பெருவிருப்போடு கடினமாக உழைத்தார்கள். மற்றவர்களுக்குச் சரிசமனாகத் தாங்களும் இருக்க வேண்டுமானால் குடும்பத்தின் பொருளாதார நிலை முக்கியமாகக் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் என்பதை இவர்கள் அனுபவம் மூலம் அறிந்து வைத்திருந்தனர். எனவே தங்களுக்கு ஏற்ற தொழில் கிடைக்காவிட்டாலும், கிடைத்த தொழிலை ஏற்றுக் கொண்டு அதற்கேற்பத் தங்களைப் பழக்கப்படுத்திக் கொண்டனர். அனேகர் தொடக்கத்தில் ஓய்வில்லாமல் இரண்டு மூன்று வேலைகளைக்கூடச் செய்தனர். இலங்கையில் வைத்தியர்களாக, பெறியியலாளர்களாக, கணக்காளர்களாக, சட்டத்தரணிகளாக, ஆசிரியர்களாக இருந்தவர்களுக்கு எல்லாம் இங்கு வந்த போது அத்துறைகளில் உடனடியாகத் தொழில் கிடைக்கவில்லை. கனடிய தொழில் அனுபவமோ, அல்லது கனடிய பரீட்சைகளில் சித்தியடைந்த தகுதியோ அவர்களுக்கு இல்லாததால் உடனடியாகத் தொழில் வாய்ப்புக் கிடைக்கவில்லை. அதனால் கனடிய பரீட்சை எழுதிச் சித்தியடைந்த பின்பே அத்துறைகளில் இவர்களால் ஈடுபட முடிந்தது. தனியார் நிறுவனங்களின் பாதுகாப்பு அதிகாரிகள், பெற்றோல் நிலையங்களில் தொழில் வாய்ப்பு, சமயற்கூடங்களில் வேலைவாய்ப்பு போன்றவற்றிற்குக் கனடிய முன் அனுபவம் கேட்கப்படாததால் அனேகர் பகுதி நேரவேலைகளை இப்படியான இடங்களில் பெற்றுக் கொண்டு, தங்கள் படிப்பில் அதிக கவனம் செலுத்தினர். மேற்கொண்டு படிப்பதற்குக் கனடாவில் அதிக வசதிகள் இருந்ததால், வார இறுதிநாட்களிலும், இரவு நேரவகுப்புகளிலும், இணையத் தளங்கள் மூலமும் படிக்கக் கூடிய வசதிகள் இருந்ததால் அவர்கள் அத்துறைகளில் தங்கள் படிப்பைத் தொடர்ந்தனர்.

இலங்கைத் தமிழர்கள் ஏன் கனடாவிற்குப் புலம் பெயர்ந்தார்கள் என்ற கேள்வி உங்களிடம் எழலாம், அதற்கான விளக்கத்தை இங்கே சுருக்கமாகத் தருகின்றேன். 1983 ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரம் தமிழ் மக்களுக்குப் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. இதற்கு முன் 1957 ஆம் ஆண்டு நடந்த இனக்கலவரம் தமிழ் மக்களுக்கு ஒரு எச்சரிக்கையாக அமைந்திருந்தாலும், அதைத் தொடர்ந்து அவ்வப்போது நடந்த இனக்கலவரங்கள் தமிழரைச் சிந்திக்க வைத்தன. இப்படியான இனக்கலவரங்களால் உடமைகளை மட்டுமே இழந்து கொண்டிருந்த தமிழர்கள் பின்நாளில் உயிர் இழப்புக்களையும் சந்திக்க நேர்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவேதான் தொன்றுதொட்டு வாழ்ந்த பாரம்பரிய மண்ணைவிட்டு, குறிப்பாக வடக்குக், கிழக்கு மாகாணங்களை விட்டு வெளியேற வேண்டிய சூழ்நிலைக்கு ஈழத்தமிழர்கள் தள்ளப்பட்டார்கள். சொந்த மண்ணை விட்டு வெளியேறிய ஈழத்தமிழர்கள் கனடாவில் குடியுரிமை பெற்றாலும், இலங்கை அரசில் நிலவரங்களில் இன்றும் கவனம் செலுத்திக் கொண்டே இருக்கின்றனர். வடக்குக் கிழக்கு மாகாணங்களில் அரசியல் மாற்றங்களை ஏற்படுத்தக் கூடிய சக்தி புலம்பெயர்ந்த மக்களிடம், குறிப்பாகத் தொண்டு நிறுவனங்களிடம் இருப்பதையும் அரசியல் வாதிகள் கவனத்தில் கொண்டிருக்கிறார்கள். புலம்பெயர்ந்த தமிழ் மக்களில் அதிக தமிழ் மக்கள் கனடாவில் குடியுரிமை பெற்றிருப்பதும் ஒரு காரணமாகும். அரசியல் வாதிகளைவிட புலம் பெயர்ந்த மண்ணில் இயங்கும் தொண்டு நிறுவனங்கள் தாயகத்தில் பெரும்தொகையான மக்களின் பெருமதிப்பைப் பெற்றிருப்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கது. அவர்கள் நினைத்தால், தனித்தனியே இயங்காமல் ஒன்றுபட்டு இலங்கை அரசியலில், வடக்குக் கிழக்கு மாகாண வேட்பாளர்களின் வெற்றி தோல்விகளை வாக்காளர்களைக் கொண்டே நிர்ணயிக்க முடியும் என்பதில் சந்தேகமில்லை.

கனடிய அரசியலில் ஈடுபாடு கொண்ட சில தமிழர்கள் அரசியலில் போட்டி போட்டாலும் அவர்கள் எல்லோரும் மக்களால் தெரிவு செய்யப்படவில்லை. ஒருவர் போட்டி போடும் தொகுதியில் தமிழர்கள் மட்டுமல்ல, ஏனைய இனத்தவர்களும் இருப்பதால் அவர்களின் ஆதரவும் வேட்பாளருக்குத் தேவைப்படும். எனவே வேட்பாளர் அத்தொகுயில் உள்ள ஏனைய இனத்தவர்களின் மதிப்பையும் பெற்றிருக்க வேண்டும். சரிசமனான வாக்குகளைப் பெறும் போது இவர்களின் வெற்றி தோல்விகளை நிர்ணயிப்பவர்கள் அவர்களாகவும் இருக்கலாம். எனவேதான் தமிழர்கள் ஒன்றுபட்டு ஒற்றுமையாகச் செயற்பட்டால் எதையும் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டதால் ராதிகா சிற்சபைஈசன் அவர்களைத் தமிழரின் பாராளுமன்றப் பிரதிநிதியாகத் தேர்தலில் போட்டியிட நிறுத்தினர். அதன் பலனாகவே கனடிய பாராளுமன்றத்திற்கு தமிழர்களின் முதற் பிரதி நிதியாக ராதிகா சிற்சபைஈசன் அவர்கள் தெரிவு செய்யப்பட்டார். கனடிய சரித்திரத்தில் என்றும் அழியாத பதிவாக இது நிலைத்து நிற்கும். தற்போது சட்டத்தரணியான ஹரி ஆனந்தசங்கரி; அவர்கள் பாராளுமன்றப் பிரதிநிதியாக இருக்கின்றார். மார்க்கம் நகரசபையின் உறுப்பினராக இருந்த லோகன் கணபதி அவர்கள் தற்போது ஒன்ராறியோ மாகாணசபை அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டு இருக்கின்றார். இவரைவிட புதிய அங்கத்தவராக விஜே தணிகாசலம் அவர்களும் தெரிவு செய்யப் பட்டிருக்கின்றார். ரொறன்ரோ மாநகரசபை உறுப்பினராக நீதன் சண் அவர்கள் இருக்கின்றார். ரொறன்ரோ கல்விச்சபை அங்கத்தவராக பார்த்தி கந்தவேள் அவர்களும், நோர்த்யோக் கல்விச்சபை அங்கத்தவராக யுனிற்ரா நாதனும் இருக்கின்றார்கள். தற்போது இருக்கும் தமிழர்களின் சனத்தொகைக்கு இந்தப் பிரதிநிதித்துவம் போதாது என்றே எண்ணத் தோன்றுகின்றது. பல்லின மக்கள் வாழும் கனடாவில் பல தமிழர்கள் அரசியலில் ஈடுபட்டுத் தேர்தலில் போட்டியிட ஆர்வம் கொண்டவர்களாக இருப்பதையும் அவதானிக்க முடிகின்றது.

தமிழர்கள் ஒற்றுமையாகச் செயற்பட்டால் தமிழ் உணர்வு கொண்ட இன்னும் பல அரசியல் பிரதிநிதிகளை எங்களால் அனுப்ப முடியும். மூன்றாம்தர நாடுகளில் தங்கள் சுயநலத்திற்காகப் பிரதிநிதித்துவப் படுத்தும் அரசியல் வாதிகள் போலல்லாது, தமிழ் இன உணர்வு கொண்டவர்களாக இருந்தால் தமிழ் இனத்தின் எதிர்காலம் கனடிய மண்ணில் சுபீட்சமாக அமைவதற்கு வாய்ப்புண்டு. ஆங்கிலத்தில் ஆக்கங்களைத் தரும் அடுத்த தமிழ் தலைமுறையினரை மேடைகளில் கௌரவித்து ஊக்குவிக்கும் சில அரசியல் வாதிகள் அதைவிடத் தமிழில் மிகச் சிறப்பாக ஆக்கங்களைத் தரும் அடுத்த தலைமுறையினரைத் திரும்பியும் பார்ப்பதில்லை என்ற, இந்த மண்ணில் வாக்காளர்களாக இருக்கும் தமிழ் ஆர்வலர்களின் குறைகளும் உண்டு. வாக்கு வேட்டைக்காக வீடுவீடாக ஏறி இறங்கியவர்கள் 'தனியே தமிழர்களால் மட்டும் தாங்கள் தெரிவு செய்யப்படவில்லை' என்று பதிலளித்த அரசியல் வாதிகளும் இங்கே உண்டு. தவறான கூட்டங்களோடு மேடைகளில் கைகோர்த்து நின்று புகைப்படம் எடுத்தவர்களை வாக்காளர்கள் உதாசீனப் படுத்திய சம்பவங்களும் உண்டு. ஆக மொத்தமாக கனடா ஒரு ஜனநாயக நாடாக இருப்பதால் அரசியல் வாதிகளின் முடிவு வாக்காளர்களின் கைகளில்தான் தங்கி இருக்கின்றது. அவர்கள் திரும்பவும் பதவிக்கு வருவார்களா இல்லையா என்பதை அவர்களின் நடவடிக்கைகள் தான் முடிவெடுக்கின்றன, எனவே கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தினார்களா இல்லையா என்பதைப் பொறுத்திருந்து முடிவுகளைப் பார்ப்பதே சிறப்பானது.

**குரு அரவிந்தன்**

# மக்கள் நலம்



அரசியல் சாணக்கியம் தெரிந்துவிட்டால் மட்டும் ஒருவர் நல்ல தலையனாகிவிட முடியாது. சமூக, பொருளாதார பிரச்சனைகளை தீர்க்கும் வல்லமை பொருந்திய சாமர்தியப் படையை வழிநடத்தக்கூடிய ஒருவனையே காலம் நல்ல தலைவன் என ஏற்றுக்கொள்ளும்.

ஈழத்தமிழர்களுக்கும் அரசியல் சாணக்கியம் தெரிந்த பல தலைவர்கள் வந்தார்கள், சென்றார்கள் ஏன் இப்பொழுதும் இருக்கிறார்கள். ஆனால் என்ன பெரும்பாலனவர்களால் எங்களுக்கான அரசியலை உள்ளூரிலோ அல்லது சர்வதேச அரங்கிலோ சந்தைப்படுத்தத் தெரியவில்லை. அத்தோடு எமக்கான சமூக பொருளாதாரத்தை மாற்றி அமைக்கக்கூடிய படையணியையும் அமைக்க மறந்துபோய் உறை நிலையில் எப்போதும் இருக்கப் பழகி விட்டார்கள்.

ஆனால் இந்த ஆண்டின் ஜுன் 12ம் திகதியை இரண்டு தலைவர்கள் ஒன்று சேர்ந்து மக்கள் நாளாக மாற்றி உலக்கத்தை வியப்பில் ஆழ்தியுள்ளார்கள். ஒருவர் அமெரிக்க அதிபர் ட்ரம் மற்றயவர் வடகொரிய அதிபர் கிம். இவ் இருவரும் தினமும் பலதரப்பட்ட எதிர்வினை விமர்சனங்களுக்கு முகம் கொடுப்பவர்கள். தங்களது கர்வமான பேச்சுக்களாலும் மல்லுக்கட்டும் நடவடிக்கைகளாலும் தமது மக்களையும் உலகமக்களையும் அதிகளவில் அசௌகரிகத்துக்கு உட்படுத்துபவர்கள். அரசியலாளர்கள் மத்தியில் அதிக வரவேற்பில்லாத தலைவர்கள் என்றும் கூடச் சொல்லலாம். இப்படிப்பட்ட இருவரும் சிங்கப்பூரில் உள்ள செந்தோசாத் தீவில் உள்ள கேபெல்லா ஆடம்பர விடுதியில் ஜுன் 12ம் திகதி சந்தித்து கைகுலுக்கி உலகத்தை மூக்கின் மேல் விரல் வைக்க வைத்துள்ளார்கள்.

"கோபம் உள்ளவனிடம் தான் குணம் இருக்கும்" என்பதை நிருபிக்கும் விதமாகவே இவர்களது சந்திப்பு நடைபெற்றிருக்கிறது. 2011ஆம் ஆண்டு வடகொரிய தலைவராக பதவியேற்ற கிம் ஜாங் உன்னும் 2017ம் ஆண்டு அமெரிக்க ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்பும் கடந்த காலங்களில் ஒருவர் மீது ஒருவர் காறி உமிழ்ந்ததையெல்லாம் கரையொதுக்கி வைத்து விட்டு ஒருவரை ஒருவர் கரம் பற்றி பகையைப் புறந்தள்ளி நேசப்பார்வைகளை வீசிக்கொணடதை உலகம் வியந்து நோக்கியது. இவர்களது சந்திப்பு மக்கள் நலம் சார்ந்த பெரிய முன்னெடுப்பு என்றும் ஊடகங்கள் உலகெலாம் உணர்ந்து ஓதியது.

1950—53 காலகட்டத்தில் நிகழ்ந்த போருக்குப் பின், எதிரிகளாக இருந்து வரும் வடகொரியா — அமெரிக்காவின் அதிபர்கள் எவரும் இதுவரை நேரடியாகவோ, தொலைபேசி வாயிலாகவோ பேச்சு நடத்தியது இல்லை. இந்நிலையில் இருநாட்டு தலைவர்களும் மக்களின் எதிர்கால நலனை கருத்தில் கொண்டு முதல் முறையாக சிங்கப்பூரில் சந்தித்துப் பேசியதை வரலாற்று சிறப்புமிக்க சந்திப்பாக உலக நாடுகள் வரவேற்றுள்ளன. இந்த சந்திப்பு எதிர்பார்த்ததைவிட சிறப்பாக இருந்ததாக இரு நாட்டு தலைவர்களும் தெரிவித்துள்ளனர். அமெரிக்காவின் கோரிக்கையை ஏற்று அணு ஆயுத தளங்களை அழிக்க வடகொரியா ஒப்புதல் அளித்துள்ளது.

முக்கியமாக இந்தச் சந்திப்பு வெற்றிகரமாக முடிவதற்குப் பின்னணியில் இரு தமிழர்கள் முக்கிய பங்காற்றியுள்ளனர். ஒருவர் பாலகிருஷ்ணன், இவர்களின் சந்திப்புக்காக வாஷிங்டனுக்கும், வடகொரியத் தலைநகர் யாங்யாங்குக்கும், சீனாவின் பெய்ஜிங் நகருக்கும் தீவிரமாக பயணித்துச் சந்திப்பை முழுமை பெறச் செய்தார். இடையே அதிபர் ட்ரம்ப் தன்னிச்சையாக சந்திப்பை ரத்து செய்தபோதும் பாலகிருஷ்ணன் வாஷிங்டனுக்குச் சென்று அவரை சமாதானம் செய்து, சந்திப்பு வெற்றிகரமாக நடக்கத் துணையாக இருந்தார். மற்றயவர் அமைச்சர் சண்முகம், சிங்கப்பூர் அரசில் சட்டம் மற்றும் உள்துறை அமைச்சராக உள்ளார். இரு நாட்டுத் தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்பை வெற்றிகரமாக நடத்தி முடிக்கும் பொறுப்பு இவரிடம் அளிக்கப்பட்டு இருந்தது. இரு தலைவர்களுக்கும் பாதுகாப்பு அளிப்பது, தங்குமிடங்கள், சந்திப்பை சுமூகமாகக் கொண்டு செல்வது உள்ளிட்ட அனைத்தையும் வெற்றிகரமாகச் செய்து முடித்துள்ளார் இவர்.

இதே போல் இனிவருங்காலங்களில் தமிழர்களும் தமக்கான அரசியலை வெல்வதற்கு பேச்சுவார்த்தையை ஆயுதமாக கையில் ஏந்தப் பழகிக்கொள்ள வேண்டும். மக்களின் நலன்களை மனதில் கொள்ளாமல் இன்றும் தமிழ் அரசியலாளர்கள் செயல்ப்படுவது வருந்தத்தக்கதே ஆகும். இதுவே மக்களுக்கும் அவர்களுக்குமான இடைவெளியை அதிகப்படுத்தியுள்ளது. மக்களுடன் சேர்ந்து பயணிப்பது என்பது மனங்களுடன் சேர்ந்து பயணிப்பதற்கு ஒத்ததாகும். அதைவிடுத்து தன்னிச்சையாக சென்றால் மக்கள் புத்தம் புது சிந்தனை கொண்ட அரசியல் வாதியைப் பிரசவிப்பார்கள் அப்பொழுது நீங்கள் அரசியல் கடவுச்சீட்டில் காலாவதியாகிப் பேயிருப்பீர்கள்.

முரட்டுக் குணம் கொண்டவர்கள் என வர்ணம் தீட்டப்பட்ட உன்னும் ட்ரம்பும் சமாதனத்துக்கான நோபல் பரிசிற்கு பரிந்துரைக்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனால் உலகத் தலைவர்களை ஒன்றிணைக்கும் சக்தி வாய்ந்த தமிழர்களை தன்னகத்தே கொண்ட ஓர் சமூகம் தம்மை எப்பொழுது ஒன்றுபடுத்திக் கொள்ளும்?. மக்கள் நலம் விரும்பும் தமிழ் பேசும் அரசியலாளர்கள் எப்போது எம் கரம் பற்றுவார்கள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Electronic gadgets are bad for your child's brain



Screen dependency has been a ubiquitous problem of late, not only affecting the lives of developing children but the day-to-day activities of adults too. Hence, the premise of the critically acclaimed TV show Black Mirror. It exposes a dystopian world where we're dependent on technology. Restricting time with a screen for children is essential, and some parents avoid screen time altogether. The American Academy of Paediatrics recommends a maximum limit of sixty minutes screen time for 2 to 5-year-olds (1). Anyone younger than that should probably avoid use technology use altogether.

A new study shows that young children got less sleep and were less focussed if they spent an excessive time with smart devices (2). This behaviour led to an extended sleep time during the day than at night, which is not conducive towards a healthy sleep cycle. The study has shown that for every quarter of an hour the child uses a smart device, they lose an hour of sleep. Definitely, not good returns on investment.

Another study found that the more time that a child spent on a smart device, the longer its speech would be delayed (3). Dr. Catherine Birken calls for more research in her statement to CNN (4). In fact, after all this research, it was given the name Screen Dependency Disorder (5).This order is closely associated with the newly discovered Internet Addiction Disorder.

We've all witnessed the behaviour of children these days; they're the first to latch on to their devices and constantly stay in touch with them. Be it manipulating apps at the dinner table or only communicating through an app-based software.

Children who suffer from this disorder, also experience a variety of other symptoms such as weight loss or gain, insomnia, headaches, poor nutrition, eyesight problems, and poor nutrition. Additionally, emotions like anxiety, loneliness, guilt, and dishonesty can manifest themselves. There has been a marked increase in the self-isolation of those who suffer from this disorder, where they also experience mood swings, and agitation.


This condition can cause withdrawal symptoms (from using their devices) too. You might notice a dependent and addictive behaviour, or hear them lie about how long they spent on their gadgets. Kids might begin to lose interest in outdoor activities, and not refrain from using these devices despite constant warnings of their adverse effects.

Most parents should find these results alarming, as any child who cannot take part in the regular family time is distressing. A comprehensive report of his behaviour should be reported to his paediatrician. Your doctor has likely encountered this phenomenon in the past, and probably has some follow-up questions to help figure out the best course of action for your toddler.

Since gadget addition affects the brain like a drug or an alcohol problem, the brain might develop some structural differences (6). Children develop a lack of impulse control, cannot organise, plan, or prioritise. The part of the brain that is responsible for empathy and compassion for others gets affected as well.

Since this is a relatively new concept, it is important to not get too ahead of ourselves. True, there are a lot of downsides to using gadgets at such a young age; but it has also been said that the literacy of this century shall be one's ability to manipulate technology, not one's ability to write. So, by all means, encourage a pencil more than a smartpen, time with a face instead of FaceTime; do all the organic things you would've done for the previous generation but do not assume that this way is bad beyond repair

# சீனர்கள் அமெரிக்காவில் முதலாளிகளாக ஆப்பு!!!



25 சதவீத சீன முதலீடு உள்ள நிறுவனங்களுக்கு அமெரிக்க கம்பனிகளை விற்பனை செய்வதையும் நவீன அமெரிக்க தொழில்நுட்பங்களை விற்பனை செய்வதையும் தடுக்க அமெரிக்கா முடிவு செய்திருக்கிறது. இம்முடிவை அமுல்படுத்துவதற்கான வழிவகைகளை அமெரிக்க இப்போது பரிசீலித்து வருகிறது.

உலக நாடுகள் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யும் எஃகு, அலுமினியம் உள்ளிட்ட பொருட்களுக்கு இறக்குமதி வரியை அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தலைமையிலான அரசு அதிகமாக உயர்த்தி அறிவித்தது. சீனாவில் இருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் சுமார் 5,000 கோடி அமெரிக்க டாலர்கள் மதிப்பிலான 800 பொருட்களுக்கு அமெரிக்க அரசு சமீபத்தில் கூடுதல் வரி விதித்தது.

இதற்கிடையே, அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பல பொருட்களுக்கு சீனா 25 சதவீதம் கூடுதல் வரி விதித்து பதிலடி கொடுத்தது. இதனால், அமெரிக்கா மற்றும் சீனா இடையே வர்த்தகப்போர் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், 25 சதவீத உரிமையாளர்களாக விளங்கும் சீனர்கள் உள்ள நிறுவனங்கள், அமெரிக்க நிறுவனங்களின் தொழில்நுட்பங்களையும் கம்பெனிகளையும் விலைக்கு வாங்குவதை தடுத்து நிறுத்தவேண்டும் என அமெரிக்கா கருதுகிறது. இதற்கான விதிமுறைகளை அமெரிக்க நிதி அமைச்சகம் வகுத்து வருவதாக வால் ஸ்ட்ரீட் நாளிதழ் இன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இருப்பினும், இதனை நடைமுறைப்படுத்தும் செயல்திட்டங்களை உருவாக்கும் பணிகள் இன்னும் முடிவடையவில்லை என தெரியவந்துள்ளது. மேம்பட்ட அமெரிக்க அறிவுசார் தொழில்நுட்ப பொருட்கள் சீனாவிற்கு ஏற்றுமதி செய்வதை கட்டுப்படுத்தும் திட்டங்களை அமெரிக்க பாதுகாப்பு கவுன்சில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சகம் ஆகியவை இணைந்து வடிவமைக்கவுள்ளன என தெரிவித்துள்ளது.

ஆனால், இதுகுறித்த கேள்விகளுக்கு வெள்ளை மாளிகை, நிதித்துறை அமைச்சகம் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சகம் ஆகியவை விளக்கம் அளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த திட்டங்களை செயல்படுத்துவதன்மூலம், சீனாவின்,"மேட் இன் சீனா 2025" தொழிற்துறை திட்டம் முடங்க சில வாய்ப்புகள் உருவாகும்.

இந்த தடைகளை திட்டமிட 1977 ஆம் ஆண்டின் சர்வதேச அவசர பொருளாதார அதிகாரங்கள் சட்டத்தை அரசு செயல்படுத்தப்பட வாய்ப்புள்ளது. கடந்த 2001 ஆம் ஆண்டு 9/11 தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலை தொடர்ந்து தீவிரவாத இணைப்புகளுக்கு நிதியுதவி செய்வதை நிறுத்த இந்த சட்டம் செயல்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

சந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியாபார போரும், வீட்டு முதலீட்டில் வரப்போகும் விளைவுகளும்



அமெரிக்க அதிபர் டொனல்ட் டிரம்ப் நாடுகளுக்கிடையே வியாபார போர் ஒன்றை தொடங்கி வைத்து சில மாதங்களாக இது விஸ்வரூபமெடுத்துள்ளது. அதாவது, இவர் அமெரிக்காவில் உள்ள ஸ்டீல் (Steel) தொழிற்சாலைகளை நிலை நிறுத்துவதற்காக வெளிநாடுகளில் இருந்து இறக்குமதியாகும் ஸ்டீல் உற்பத்திக்கு 25% வரி (Tariff) அறவிடப்பபோவதாகவும், 10% வரி அலுமினிய இறக்குமதிக்கும் (Aluminum) அறவிடப்போவதாகவும் அறிவித்திருந்தார்.

இதனால், அமெரிக்காவின் நேச நாடுகள் உட்பட மற்றும் பல நாடுகள் அதிர்ச்சி அடைந்து அதை நிறுத்துமாறும் மறுத்தால் தாமும் அமெரிக்காவில் இருந்து இறக்குமதியாகும் விவசாய மற்றும் கால்நடை உற்பத்தி பொருட்களுக்கு வரி விதிப்போம் என எச்சரிக்கை விடுத்துள்ளது. இதை தொடர்ந்து அவர் வட அமெரிக்க நாடுகளுக்கு இடையே ஆன (NAFTA) வியாபார ஒப்பந்தத்தை மீள் பரிசோதனை செய்யுமாறு கனடா, மெக்சிக்கோ (Mexico) நாடுகளை அழைத்து பேசுமாறும் ஒரு குழுவை அமைத்து சில மாதங்களாக அந்த ஒப்பந்தம்

மீள் பரிசோதனை நடந்துக் கொண்டிருக்கிறது. இது ஒருபுறமிருக்க அவர் தன்னிச்சையாக இந்த வரி அறிவிப்பை விடுத்துள்ளார். அத்துடன் மேலும் பல வரிகளை விதிக்க போவதாகவும் எச்சரித்துளளார். இந்த அறிவிப்பு பல நாடுகளுக்கிடையே பயத்தையும் விரிசல்களையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்த NAFTA ஒப்பந்தம் 1993 ஆண்டு கனடிய பிரதமர் Brain Mulroneyக்கும் அமெரிக்க அதிபர் Bill Clintonக்கும் இடையே உருவாக்கப்பட்டு இரு நாடுகளுக்குமிடையே வரி மற்றும் தடைகளுமின்றி சில பொருட்களை ஏற்றுமதி இறக்குமதி செய்ய இரு நாடுகளுக்குமிடையே ஒரு ஒப்பந்தமாக அமைந்தது. பின்னர் இதில் மெக்சிகோவையும் இரு நாடுகளும் இணைத்துக் கொண்டன. இதன் மூலம் வேலைவாய்ப்புகளும், பொருளாதார அபிவிருத்தியும் ஆரம்பத்தில் மூன்று நாடுகளுக்குமிடையே காணப்பட்டாலும், சில பாதிப்புகள் கனடாவுக்கும், அமெரிக்காவிற்கும் 2000ம் ஆண்டுகளுக்கு பின்னர் வர ஆரம்பித்தது. ஏனெனில் பல நிறுவனங்கள் தமது தொழிற்சாலைகளை மெக்சிகோவிற்கு இடம் மாற்றியதால் வேலைவாய்ப்புகளை இரு நாடுகளும் இழக்கத் தொடங்கியது. இதனால் இரு நாடுகளிலும் பொருளாதார வளர்ச்சி பாதிப்படைய தொடங்கி 2007இல் இருந்து 2009 வரை பொருளாதார மந்தநிலை காணப்பட்டது. இதனால் அமெரிக்க மக்களும், புத்தி ஜீவிகளும் ஆத்திரம் அடைந்தனர். இந்த NAFTA ஒப்பந்தம் தங்களுக்கு சார்பாக இல்லை என உணர்ந்து ஒரு எதிர்ப்பு அலை ஆரம்பித்தது. அது இப்பொழுது விஸ்வரூபம் எடுத்து நிற்கிறது என்பது தான் உண்மை. இந்த பிரச்சனை கடந்த 10 ஆண்டுகளாக அமெரிக்கர்களிடம் கொழுந்து விட்டு எரியும் பிரச்சனை. இதை மாற்றுவதாக உறுதி மொழி வழங்கிய அதிபர் டிரம்ப் அதிபர் பதவிக்கு தெரிவானார்.

இந்த NAFTA ஒப்பந்தத்துக்கு பின்னர் மேலும் பல ஒப்பந்தங்கள் (CAFTA) Central America Free Trade Agreement இது மேலும் பல தென் அமெரிக்க நாடுகளை இணைத்துக் கொண்டு செயல்படத் தொடங்கியது. இதை (TPP) என்று கூறப்படுகிறது. இந்த ஒப்பந்தங்கள் எல்லாமே அமெரிக்காவின் சில தொழிற்சாலைகளுக்கு மூடு விழா வைத்தது.

இதை சரி செய்வதற்காக கூறித்தான் அமெரிக்கத் தலைவர் டொனால்ட் டிரம்ப் பதவிக்கு வந்தார் என்பதை நாம் புரிந்துக் கொள்ள வேண்டும்.

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் அறிவித்திருக்கும் இந்த வரி சில தொழிற்சாலைகளை மீண்டும் அமெரிக்காவில் வளர்த்தெடுப்பதற்காகவே என்பதை நாம் புரிந்துக் கொள்ள வேண்டும். அவர் அமெரிக்காவிற்கு தான் தலைவர். மற்ற நாடுகளுக்கு அல்ல என்பதையும் நாம் உணர வேண்டும். அவர் அமெரிக்காவிற்கு எது நல்லதோ அதைத்தான் அவர் அறிவிப்பார், செய்வார். அதை நாம் தப்பாக நினைக்க தேவையில்லை. என்ன பிரச்சனை என்றால் இன்று உலக நாடுகள் (நேச நாடுகள் குறிப்பாக) ஒன்றை ஒன்று வியாபார ரீதியில் தாங்கியுள்ளன. ஒரு நாடு செய்யும் எதேச்சையான அறிவிப்பால் குறிப்பாக அமெரிக்கா செய்யும் பொழுது பல நேச நாடுகளும், அதன் பொருளாதாரமும் பாதிக்கப்படுவது மட்டுமல்ல, பல அமெரிக்க தொழிற்சாலைகளும் பாதிப்படையும் என்பதை அமெரிக்க அதிபர் கருத்தில் கொள்ள வேண்டும்.

அமெரிக்க அதிபர் ஒரு சிறந்த பேரம் பேசும் (Negotiator) வல்லுநர் என்பதை நாம் புரிந்துக் கொள்ள வேண்டும். அவர் இவற்றை தன்னிச்சையாக செய்வதன் நோக்கம்...

அப்பொழுது தான் மற்ற நேச நாடுகள் ஒரு பரஸ்பர ஒப்பந்தம் செய்ய முன்வருவார்கள் என்பது. இதை நாம் நன்கு புரிந்துக் கொள்ள வேண்டும். ஆனாலும் இது கத்தி மேல் நடப்பது போலாகும். சில நாட்களாக தொடர்ந்து அமெரிக்க அதிபர் கனடிய பிரதமர் மீது பல குற்றச்சாட்டுகளை சுமத்தியும், சில பேச்சுக்கள் அவரை அவமதிப்பதாகவும் பேசி வருவது இரு நாடுகளுக்குமிடையே இருக்கும் உறவை பாதிக்கும் என அவதானிகள் கருதுகின்றனர். பல புத்தி ஜீவிகள் அமெரிக்காவில் அதிபர் டொனால்ட் டிரம்ப்பை எச்சரித்தும் இருக்கிறார்கள். ஏனெனில், அமெரிக்காவிற்கும், கனடாவிற்கும் இடையே

100 ஆண்டுகளுக்கு மேலான உறவு சரித்திரம் உண்டு. இரண்டு உலகப்போரிலும்

அமெரிக்காவுடன் தோள் சேர்த்து கனடா போர் புரிந்துளளது. அமெரிக்கர்கள் இந்த உறவை முறித்துக் கொள்ளவோ அல்லது சேதப்படுத்தவோ விரும்ப மாட்டார்கள். எமது பிரதமர் புதியவராக இருந்தாலும் நிலைமையை அழகாக சமாளித்து செல்கிறார். அவரை இந்த விடயத்தில் பாராட்டியே ஆக வேண்டும்.

இந்த வியாபார போரால் (Trade War) என்ன நடக்கும் என்பதை ஆராய்ந்து பார்ப்போம். உதாரணமாக, அண்மையில் ஐரோப்பிய நாடுகள் தாமும் இந்த வரி அறிவிப்பிற்கு எதிர் வரி நடவடிக்கை செய்வோமென எச்சரித்ததை தொடர்ந்து அமெரிக்க மோட்டார் வாகன நிறுவனமான Harley - Davidson Inc. தமது தொழிற்சாலையை ஜெர்மனிக்கு எடுத்து செல்ல முடிவெடுத்துள்ளது. இந்த 25% (Tariff) வரி அறிவிப்பு மோட்டார் வாகன உற்பத்திக்கு தமக்கு ஏறத்தாழ வருடத்திற்கு 100 மில்லியன் டொலர்கள் நஷ்டத்தை தமக்கு ஏற்படுத்தும் என்பதால் தாம் இந்த தொழிற்சாலையை ஐரோப்பிய நாட்டுக்கு எடுத்து செல்வதாக அறிவித்துள்ளது. இதனால் அதிபர் டிரம்ப் ஆத்திரம் அடைந்துள்ளார். இதை தொடர்ந்து இன்னும் பல நிறுவனங்கள் தமது உற்பத்தியை வேறு நாடுகளுக்கு மாற்றும் அபாயம் உள்ளது. இது அமெரிக்காவிற்கு மட்டுமல்லை, கனடாவையும் பாதிக்கும். அத்துடன் இந்த வரி அறிவிப்பு கனடாவின் ஸ்டீல் உற்பத்தியையும் பெரிதும் பாதிக்கும். இப்படி மாறி, மாறி ஒவ்வொரு நாடும் வரி விதிக்க ஆரம்பித்ததால் ஒரு ஸ்திர தன்மை இல்லாத வியாபார நிலைமைக்கு இன்று நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

இன்றைய நிலையில் அமெரிக்காவிற்கு பெரிதும் பாதிப்பு வியாபார ரீதியில் சீனாவால் தான் ஏற்படுகிறது. இதனால் சீனாவிற்கு கிட்டத்தட்ட 200 பில்லியன் பெறுமதியான வரியை அவர்களுடைய ஏற்றுமதிக்கு அமெரிக்கா விதித்திருக்கிறது. இதனால் சீனா ஆத்திரமடைந்து அமெரிக்க விவசாய கால்நடை உற்பத்திகளுக்கு வரியை விதித்துள்ளது.

இது அமெரிக்க விவசாயிகளின் ஏற்றுமதிக்கு பெரிதும் பாதிப்பை விளைவிக்கும். சீனா இதை ஒரு எதிர்ப்பாகவே செய்கிறது எனலாம். இதை Retaliation வரி எனலாம். சீனா இதில் பிழை விடுகின்றது என தான் கூற வேண்டும். ஏனெனில் இன்றைய நிலைமையில் சீனாவின் Trade Surplus அமெரிக்காவிற்கான ஏற்றுமதியில் தான் கிடைக்கிறது. இதனால் சீனாவிற்கு தான் பாதிப்பு. இந்த வியாபார போரை நிறுத்தி அமெரிக்காவுடன் ஒரு பரஸ்பர ஒப்பந்தம் ஒன்றை சீனா செய்யாவிடில், சீனாவின் பொருளாதார வீழ்ச்சி தவிர்க்க முடியாத ஒன்றாகிவிடும் என ஒரு கணிப்பு இருக்கிறது. அத்துடன் இதை தொடர்ந்து அனுமதித்தால் அமெரிக்காவின் (Trade Deficit) வியாபார துண்டு விழும்

தொகை அதிகரிக்கும். ஆக நாம் முற்றும் முழுதாக அமெரிக்க அதிபரின் நடவடிக்கை பிழையென்று கூற முடியாது.

நீங்கள் கேட்கலாம், இதனால் Real Estate (வீடு வியாபார விற்பனை) வியாபாரத்திற்கு என்ன பிரச்சனை என்று. சற்று உற்றுப் பார்த்தால் இந்த வரிகளின் மூலம் அரசுகளிற்கு வருமானம் வந்து சேரும். ஆனால், நாம் வாங்கும் ஒவ்வொரு பொருளிற்கும் அதிக விலை கொடுத்து வாங்க நேரிடும். இதனால் பணவீக்கம் (Inflation) அதிகரிக்கும். இந்த பணவீக்கம் காரணமாக அரசுகள் வட்டி வீதத்தை அதிகரித்து பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதை தவிர வேறு வழியில்லை. இந்த வட்டி வீதம் அதிகரித்தால் வீடு விற்பனைக்கு என்ன நடக்கும் என்பதை நான் உங்களிற்கு கூறத் தேவையில்லை என நினைக்கிறேன்.

இந்த ஸ்திர தன்மை இல்லாத நிலை நீடித்தால் நாடுகளுக்கிடையே நாம் ஒரு உலக பொருளாதார சிதைவை எதிர்நோக்கலாம். சரியான ஒப்பந்தங்களை எதிர்வரும் மாதங்களுக்குள் பரஸ்பரம் ஏற்படுத்தா விட்டால் இந்த பணவீக்கத்தையும் வட்டி வீத அதிகரிப்பையும் தடுக்கவும் முடியாது; தவிர்க்கவும் முடியாது.

ஆகையால், எதிர்வரும் மாதங்களில் வீடு முதலீடுகளில் ஈடுபடும் போது அவதானமாக செயற்படவும். வீடு மட்டுமல்ல, பங்கு சந்தை (Stock Market) கூட பாதிப்படைய வாய்ப்பு உள்ளது. அதற்காக வீடு வாங்க வேண்டாம் என்று கூறவில்லை. ஒன்றை மட்டும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். Real Estate Investment என்பது ஒரு நீண்ட கால முதலீடு. எம்மில் பலர் கடந்த சில ஆண்டுகளாக வீடு வாங்கி விற்று பணம் சம்பாதித்துள்ளோம். ஆனால், எதிர்வரும் 2 அல்லது 3 ஆண்டுகளிற்கு வீட்டு முதலீட்டை ஒரு வியாபாரமாக கருதாமல் (Short term Investment) ஒரு நீண்ட கால வியாபாரமாக (Long Term Investment) கருதி அதில் முதலீடு செய்யவும். ஏனெனில் இந்த Real Estate முதலீடு ஒரு நீண்ட கால முதலீடாகவே பல ஆண்டுகளாக கருதப்பட்டு வந்த ஒரு விடயம். இதை மனதில் வைத்து செயல்படவும்.

**செல்வா செல்வத்துரை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மண் திருவாசகத்தை உயிர்ப்புடன் பேணும் மண் என்றால் மிகைப்படாது. மார்கழியில் திருமுறைக் காப்பிட்டு திருவாகசப் பாக்களை ஓதும் வழக்கமாயினும் சரி, நீத்தார் சடங்குகளில் திருப்பொற்சுண்ணத்தைப் படிக்கும் மரபாயினும் சரி ஆலயங்களில் மற்றும் மடங்களில் திருவாசக முற்றோதலை மேற்கொள்வதானாலும் சரி திருவாசகத்திற்கு முதன்மை வழங்கும் நடைமுறை இன்றும் தொடர்ச்சியுற்றுள்ளது. இந்நிலையில் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அமைத்த திருவாசக அரண்மனை 'திருவாசகம் என்றால் யாழ்ப்பாணம்' என்ற உயர் தகுதிப்பாட்டை எம்மவர்க்கு வழங்கியுள்ளது. எதிர்வரும் 24.06.2018 இதன் திறப்பு விழாவும் மறுநாள் திருக்குடமுழுக்கு விழாவும் இடம்பெறவுள்ளன.

# நாவற்குழியில் திருவாசக அரண்மனை


## ஒரு தெய்வத் திருப்பணி திறப்பு விழா

### பத்துப் பரப்பில் கோவில் வளாகம்

அவுஸ்திரேலியா சிட்னியில் வாழும் இதய வைத்திய நிபுணர் மனமோகன், சிவகௌரி தம்பதியரின் உபயமாகக் கிடைத்த காணியில் அவர்களின் உபயமாக அமைக்கப்பட்ட கோவில் உயர்ந்து நிற்கிறது. கோவிலில் மூலவராகத் தட்சணாமூர்த்தி, அவர் முன்னால் நந்தியெம் பெருமான் அதற்கும் முன்னால் கற்றேர் அதில் சிவலிங்கத்துடன் மணிவாசகர் என அரண்மனை அழகுற அமைக்கப்பட்டுள்ளது. கோவிலின் கிழக்கு மற்றும் மேற்குப் புறங்களில் அறுநூற்று ஐம்பத்தாறு திருவாசகப் பாடல்களும் கருங்கல்லில் மனிதவலுவினால் உளிகொண்டு செதுக்கப்பட்டுள்ளன.

### கோவில் அமைவற்கான கரு

செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் சொற்பொழிவு ஒன்றிற்காக மூன்றாண்டுகளுக்கு முன்னர் திருவண்ணாமலை சென்றபோதே இக்கரு உதயமானது. திருமந்திரமும் திருவாசகமும் என்ற பொருளில் அவர் உரையாற்றியபோது அங்கிருந்த ஒரு சித்தர் திருமுருகனாரை ஆசீர்வதித்து



"திருவாசகத்தை யாழ்ப்பாணத்தில் நீ காப்பாற்றுவாய். காற்று மழை நெருப்பு என எவையும் தீண்டாத வண்ணம் அதைப் பாதுகாக்கக் கூடிய பணியை மேற்கொள்ளக்கடவாய்" என்றாராம்.


டிஜிற்றல் யுகத்தில் திருவாகசத்தைக் காப்பாற்ற இணையம் உள்ளதுதானே எனப்பலரும் நம்பிக்கை கொண்டுள்ள நிலையில் எக்காலத்திலும் அழியாத ஒரு வடிவில் திருவாசகத்தைப் பேணும் முயற்சியாக திருவாசக அரண்மனை அமைக்கும் ஆணை மறைபொருளாக அந்தச் சித்தராலேயே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. பலநற்பணிகளை இன்று எம்மண்ணில் முன்னெடுக்கும் சிவபூமி அறக்கட்டளையின் வாயிலாக இப்பணி நடந்தேறியுள்ளது.

### விமானம் உயர்ந்த கலைக்கோவில் - மூலவராக தட்சணாமூர்த்தி

சோழர் காலக்கட்டடக் கலைக்கு ஒப்பாக தஞ்சைப் பெருங்கோவிலை நினைவுறுத்தும் வகையில் முப்பது அடி உயரத்தில் விமானம் நிமிர்ந்து நிற்கின்றது. அதில் சிவலிங்கங்கள் பதிக்கப்பட்டுள்ளன. மூலவராக தட்சணாமூர்த்தி காணப்படுகின்றார். இலங்கையில் கருவறையில் தட்சணாமூர்த்தி குடிகொள்ளும் முதற்கோவிலும் இதுதான். கருங்கல்லில் நான்கரை அடி உயரமுள்ளவராக இந்த ஞானகாரகன் விளங்குகின்றார்.

விமானத்தில் சிவலிங்கங்கள் அமைக்கப்பட்ட கோவிற்சிறப்பும் இங்குள்ள தனித்துவங்களில் ஒன்று எனலாம். ஊரெழு சண்முகநாதனின் கைவண்ணமும் தென்னிந்தியச் சிற்பக் கலைஞர் புருஷோத்தமனின் கலைவண்ணமும் திருமுருகனாரின் சிந்தனைகளுக்குச் செயல்வடிவம் கொடுத்துள்ளன. இதைவிட நல்லுள்ளம் படைத்த சான்றோர் பலர் நிதி வழங்கி இக்காரியம் செயற்பட உதவியுள்ளனர். ஏறத்தாழ நானூறு இலட்சம் ரூபா மதிப்பில் பணிகள் இடம்பெற்றதாக மதிப்பிட முடிகின்றது.

கோவிலின் உட்பிரகாரத்தில் கிழக்கு மற்றும் மேற்கு சுவர்களில் அறுநூற்று ஐம்பத்தாறு திருவாசகப் பாடல்களும் கருங்கற்களில் கைகளால் செதுக்கப்பட்டுள்ளன. பாரதிபுரத்தைச் சேர்ந்த 29 வயது



இளைஞரான வினோத் என்ற கலைஞர் இந்த வரலாற்றுப் பணியைச் செய்துள்ளார். புகழுடற் சின்னங்களில் தம்கைவினையை வெளிப்படுத்திய தேர்ச்சி மிக்கவர். இன்று பக்திசார்ந்த வரலாற்றுப் பணியை மேற்கொண்டு பெருமை பெற்றுள்ளார். இதைவிடக் கிழக்கு மற்றும் மேற்குப் புற உட்பிரகாரத்தில் 108 சிவலிங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதன் மேல் 108 மணிகளும் காணப்படுகின்றன. அடியவர்கள் தங்கள் விருப்பப்படி அபிஷேகித்து ஆனந்திக்கக் கூடிய வாய்ப்பு ஏற்படுத்தப்படவுள்ளது எனத் தெரியவருகின்றது.



இதைவிட வாயிலில் சிவபுராணத்தை கிரந்தம், சீனம், தங்கோலோ, சிங்களம் முதலிய பன்னிரண்டு மொழிகளில் மொழிபெயர்த்து முப்பது அடி நீளச்சுவரில் அமைத்துள்ளனர். கோவிலில் எவ்வேளையும் திருவாசகம் ஒலித்துக் கொண்டிருக்கும் ஒலிப்பொறிமுறையையும் ஏற்படுத்தியுள்ளனர். அத்துடன் திருவாசக ஆராய்ச்சி நூல் நிலையம், யாத்திரிகர் தங்கும் அறை, பூசகர் அறை, களஞ்சிய சாலை, பாகசாலை எனக் கோவிலுக்குரிய இதர அம்சங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

### பெருங்கனவு நனவாகியது

சைவாபிமானிகளின் பெருங்கனவொன்று நனவாகியிருக்கின்றது. உலக நாடுகளில் பைபிளை வெள்ளைக் கற்களில் பதித்துள்ளனர். திருக்குரானை மகா பாரதத்தை கற்களில் எழுதிப்பதிவு செய்துள்ளதாகக் கூறுகின்றனர். சைவபக்தி இலக்கியமாகிய திருவாசகத்தைக் கற்களில் எழுதிய சாதனை யாழ்ப்பாணத்திலேயே நிகழ்ந்திருக்கின்றது. இதனை எமது இளஞ்சந்ததியினர் அவசியம் பார்வையிட்டுப் பயன்பெற வேண்டும். பாடசாலை அதிபர்கள் மற்றும் பெற்றோர்கள் இத்தெய்வத் திருப்பணியைத் தமது பிள்ளைகளுக்கு உணர வைக்க வேண்டும். எங்களிடம் இருக்கின்ற இந்து அமைப்புக்கள் மற்றும் பஜனைக் குழுவினர் வருடம் முழுவதும் திருவாசக முற்றோதல் மேற்கொள்ளக் கூடிய நியமத்தை ஏற்படுத்த வேண்டும்.


இலங்கை சிவபூமி என்பதை மெய்ப்பிக்கும் காரியம் ஒன்று திருமுருகனார் வாயிலாக நிறைவேறியிருக்கின்றது. தெய்வம் அவருள் நின்று இயக்கியிருக்கின்றது என்றால் மிகைப்படாது. ஒரு தெய்வத் திருப்பணியை நிறைவேற்றிய அவருக்கு நன்றியுரைக்க வார்த்தைகள் இல்லை.

- செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன்,
சிரேஷ்ட விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை
(இக்கட்டுரை ஆனி மாத இந்து சாதனம் இதழில் பிரசுரிக்கப்பட்டதாகும்)

### சிறப்பு மிக்க நாவற்குழி

ஈழத்து இந்து சமய வளர்ச்சியில் நாவற்குழி மண் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் புண்ணிய பூமியாகும். சுவாமி விவேகாநந்தர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தபோது அவரை நாவற்குழியில் இருந்து பெரும் ஊர்வலமாக அழைத்துச் சென்றார்களாம். அவர் அங்கிருந்து குதிரைகள் பூட்டப்பட்ட தேரில் பவனியாக யாழ்ப்பாணம் அழைத்துச் செல்லப்பட்டார் என்கின்றனர். யாழ்ப்பாணத்தவரின் உணவுக்களஞ்சியமும் நாவற்குழியிலேயே அமைந்திருந்தது. போர்ச் சூழலில் இதன் அருமை பலராலும் உணரப்பட்டிருந்தது. இந்த உணவுக் களஞ்சியத்திற்கு முன்பாகவே கோவில் வளாகம் அமைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு டொலரும் சிவத்த உண்டியலும்

## இகுருவி பத்திரிகை ஒரு டொலர் அறிமுகம்

### கருத்துக்களும் புகைப்படங்களும்



கடந்தமாதம் முதல் இகுருவி பத்திரிகை இலவசத்திலிருந்து ஒரு டாலருக்கு மதிப்பேற்றம் செய்யப்பட்டது. இகுருவி பத்திரிகை கிடைக்கும் இடங்களில் இருக்கும் சிவப்புப் பெட்டிகளில் பத்திரிகைக்கான பெறுமதியான ஒரு டொலரை மட்டும் செலுத்துமாறு கேட்டுகொண்டமைக்கு அமைய பெருமளவிலான மக்கள் தமது ஆதரவு தெரிவித்திருந்தார்கள் .

நீங்கள் செலுத்தும்; ஒரு டொலர் என்பது பிரெஞ்சு மானிடவியல் அறிஞர் Claude Levi-Strauss விமர்சித்ததைப்போல் நாம் பேசுவதும் எழுதுவதும் ஆத்மதிருப்திக்காக என்பது கோழைத்தனம். அவற்றிற்கு ஒரு இலக்கு எங்கும் எப்போதும் இருப்பதுண்டு.

அப்படித்தான் இகுருவியும் தன் சிறகு விரித்துக் காட்டும் ஒவ்வொரு எழுத்தும் செயலும் ஆத்மதிருப்தி என்ற கோழைத்தனத்தைத்தாண்டி தனது தாய் தேசமும், உள்ளும் வெளியுமாக பரந்தும் உழன்றும் சுழன்றும் இயங்கிக்கொண்டிருக்கும் அதன் பிள்ளைகளும் இந்த உலகில் சிம்மாசனமிட்டமரவேண்டும் என்ற பேரவாவை உங்களுடன் சேர்ந்து வெளிப்படுத்திச் சிறகடிக்கும் எழுத்திற்கும் உழைப்பிற்கும் நோக்கிற்குமானதாய் இருக்கும்.

**Veluppillai Thangavelu**

கனடாவில் வெளியாகும் செய்தித்தாள்களில் இரண்டொன்று நீங்கலாக மற்றவை வருவாய் தரும் தொழிலாக இல்லை. மிகவும் சிரமப்பட்டு செய்தியேடுகளை அச்சேற்றுகிறார்கள் ஆனால் அதன் மூலம் வருவாய் இல்லை. ஒரு காரணம் அவற்றை இலவசமாகக் கொடுத்துவிடுகிறார்கள். செய்தித் தாள்களின் வெளியீட்டாளர்கள் ஒன்று கூடி செய்தித்தாள்களை இலவசமாக இல்லாமல் ஒரு டொலருக்கு விற்பது என முடிவு எடுக்க வேண்டும். இப்படிச் செய்தால் விளம்பரங்களில் முழுதும் தங்கியிருக்க வேண்டியதில்லை. மேலும் விளம்பரதாரர்களில் பலர் ஒழுங்காகப் பணம் கொடுப்பதில்லை. காசு கொடுத்து வாங்கினால் எல்லோரும் படிப்பார்கள்.

**Ragavan Thanga**

படைப்புகள் எப்போதும் பெறுமதியானவை . நல்ல திட்டம் . எல்லோரும் ஆதரவு கொடுக்கவேண்டும். ஒரு டொலர் என்பது Nothing.ஏனைய பத்திரிகைகளும் இதற்கு ஆதரவு கொடுத்து , அவர்களும் பெறுமதி விலையிடவேண்டும்

**Thana Kanagasaba**

அருமையான திட்டம். இத் திட்டத்தின் மூலம் நமது உறவுகள் பலன் அடைவார்கள். சிறு துளி பெரு வெள்ளம். "ஒன்று பட்டால் உண்டு வாழ்வு"

**Kathir Kathirgamanathan**

ஒன்று படுவோம்! ஒரு டொலரில் ஓராயிரம் செய்வோம்!!. Congratulation E kuruvi.

**Arun Chellappah**

எனது பார்வையில்: "பத்திரிக்கை இலவசம், நன்கொடை ஒரு டொலர்". "முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார்" Good Luck

**Ravi Kandiah**

அந்த உண்டியியலில் சேர்த்த பணம் எல்லாம் அது கனடாவில் நின்று விட்டது, அதைவைத்து அனுபவிப்பர்களும் அதிகம் கனடாவில். இனி வரும் உண்டியல் நாட்டுக்கும் நாடுசார்நத மண்ணுக்கும் மக்களுக்கும் என்பதை நினைத்து சந்தோசமடைகின்றேன். நன்றி பிறதர் ஈகுருவி நவஜீவனக்கும் உங்கள் சார்ந்த குழுவுக்கும்.

**Dunstan Mani**

நம்ம மக்கள் ஒரு டொலருக்கு மூன்று வடை வாங்கி பழகி விட்டார்கள்.

அதனால் இந்த பத்திரிக்கை செய்தி இணையத்தளத்தில் பார்க்கலாம் என வடையை வாங்கி போய் விடுவார்கள். எதோ மனதில் பட்டதை சொன்னேன்.. ஆனாலும் இகுருவியார் சிறந்த சாணக்கியவாதி அவர் எடுத்த முயற்சியில் தோல்வி பெற மாட்டார்.. அவருக்கு எனது உளமார்ந்த வாழ்த்துக்கள்

**Natheesh Parameshvaran**

இது நல்ல ஒரு திட்டம். வெற்றி நிச்சயம் என்பதை உறுதியாகக் கூறமுடியும். வாழ்த்துக்கள்!

**Tacawec Mallavi**

புலத்தில் எங்கள் சமூகம் மீது இருக்கிற புரிதலைப் போல், களத்தில் இருக்கின்ற எங்கள் மக்கள் மீதும் எங்களுக்கு அளப்பரிய கரிசனை உண்டு. போர் என்னும் போட்டியில் துரதிஷ்டவசமாக பலவற்றை இழந்து நிற்கின்ற மக்களை கடை நிலையில் நிறுத்திவிட்டு எங்களால் முன்னேறிச்செல்ல முடியாமல் இருக்கிறது. Always, Navajeevan say true. Whatever he says ,same time he does in our home land Anpudan Yoga Karthigesu.

**Rajethan Makeswaran**

இத இதத்தான் எதிர்பார்க்கிறோம்!

அருமையான வேலைத்திட்டம்! ஒரு டொலர் / ஒரு மாதம்.

ஏற்கனவே ஆரம்பித்து செயல்படுத்தப்படுகின்ற #புதியவெளிச்சம் செயல்திட்டத்துக்காக இந்நிதி பயன்படும் என்பது இன்னும் வலுவானது! எம் இனிய புலம்பெயர் உறவுகள் அனைவரும் இத்திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்குவீர்கள் என்று அன்புடனும், சகோதர உரிமையுடனும் எதிர்பார்க்கிறோம்.

**Guna Thuraisingham**

Great cause.. it's give opportunity every single person reads e-kuruvi to be part of "puthiya Vellichem" project.

Very impressed on your hard work and strategic plans in helping people in home land though many projects and initiative such " nature farming" .

Very happy for you!!!

**Remax ThipanRaj**

பலர் செய்ய முடியாத சாதனைகளை ஒருவன் செய்ய முயல்கின்றான் என்றால் அவனை ஊக்கம் கொடுத்து மக்களை பலன் பெற வைக்கவேண்டும். எல்லோரிடமும் பணம் உண்டு ஆனால் அதை எப்போ, எதற்கு, எச்சந்தர்பத்தில் உதவ வேண்டும் என்பதில் தயக்கமும் தெளிவின்மையும் தான் அதிகம்.

" சிந்திப்பீர் செயல்படுவீர்

**Ken Kirupa**

மறந்து விடாதீர்கள். நீங்கள் வேறு இலவச பத்திரிகையை எடுத்தாலும் சிவத்த உண்டியலில் ஒரு டொலர் போடலாம். (நீங்கள் விரும்பினால்)!

**Senathirajah Srijeyanathan**

Congratulations and my support always be there.

**Venthan Perinpan**

கனடாவில் தமிழையும் தமிழ் பத்திரிகைகளையும் கனடியத் தமிழ் படைப்புகளையும் இலவசமாக கொடுத்து பழக்கிவிட்டார்கள். கனடாவில காசு குடுத்து தமிழ்ப் பேப்பர் வேண்டட்டாமோ?

நல்ல நகைச்சுவை பாருங்கோ!

**Pushpalatha Mathan**

நாட்டில் எம் மக்களுக்கு நீங்கள் ஆற்றிய சேவைகளை நாம் நன்றியுடன் நினைவு கூருவோம். உங்கள் புதிய முயற்சிக்கு எனது வாழ்த்துக்கள்.

**kalyani santhan**

இனிமேல் பத்திரிகைக்கு பெறுமதி இருக்கும், மா அரைப்பதற்கு எடுத்துசெல்லமாட்டார்கள். காசு கொடுத்து வாங்கும் இந்திய பத்திரிகை போன்று இதையும் வாசிப்பார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடன்தொல்லை?

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

**நாங்கள் ஒரு புதிய ஆரம்பத்திற்கு வழிகாட்டுகிறோம், இனி**

- நிம்மதியான தூக்கம்
- மீண்டும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்கலாம்
- ஏக்கத்தை விட்டொழிக்கலாம்
- உங்கள் மேலிருக்கும் அந்தச்சுமையை அகற்றிவிடலாம்
- உங்களைப் பற்றி பெருமையாயும், ஆனந்தமாயும் உணருங்கள்
- இனி கட்டவேமுடியாத Billகளைப்பற்றி கவலையில்லை.
- நண்பர்கள், உறவினர்களிடம் கடன் வாங்கும் சிறுமையும் இனி இல்லை

அனைத்து கடன் பிரச்ச்னைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

## V. SRI

Certified Insolvency Counsellor

**CREDIT SOLUTION CENTRE**

Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்

80 Corporate Drive, Suite 309
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Fax: 416.439.0226
creditsolutioncentre@gmail.com





**அனைத்து விதமான உடல் பிரச்சனைகளுக்கும் பக்க விளைவுகளற்ற முழுமையான தீர்வுக்கும் நமது 5000 வருட பாரம்பரிய மருத்துவ முறையான ஆயுர்வேத மருத்துவமே சிறந்தது என்பது நம் எல்லோருக்கும் தெரியும்**







இதற்காக இனி இந்தியா வரை
செல்ல வேண்டிய அவசியம் இல்லை.
ஸ்காபோரோவில் அமைந்துள்ள
வசிஸ்டா ஆயர்வேதிக் சிகிச்சை மையம்

**Treatments Available For**
PSORIASIS, ECZEMA and all types of skin problems, ARTHRITIS, LOW BACK ACHE, SCIATICA, STROKE, GYNAECOLOGIC PROBLEMS, PCOS, MALE AND FEMALE INFERTILITY, KIDNEYSTONE, PILES, ULCER, HEADACHE, DIABETES, HYPERTENSION, OBESITY, HAIR FALL, DANDRUFF, SPECIAL TREATMENT FOR STRESS RELIEF & ALL KINDS OF MALE SEXUAL PROBLEMS.

இவ்விடத்தில் பாரம்பரிய கேரளா முறைப்படி இங்குள்ள தட்ப வெப்ப நிலைக்கேற்ப சிறந்த முறையில் சிகிச்சையளிக்கப்படுகிறது

கேரளா பாரம்பரிய முறை பஞ்சகர்மா சிகிச்சை, உடலில் உள்ள நச்சுத்தன்மைகளை நீக்கி புத்துணர்வு அளிக்கும் – ஷிரோதாரா சிகிச்சை, நாட்பட்ட தலைவலி, தலைமுடி உதிரல். போன்றவற்றை நீக்கவல்லது.

மற்றும் ஆயுர்வேத தைலங்களால் அனைத்து வித வாத நோய்களுக்கும் மசாஜ் சிகிச்சையளிக்கப்படும்.





VASISHTA
AYURVEDIC

**Vasishta Ayurvedic Wellness Inc**
**2199 Midland Avenue, Unit# 1 Scarborough ON, M1P 3E7**
**For Appointments : (647) 532-1255**
**(416) 291-6730**
**www.vasishta.com**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# #1 Outstanding Agent *for* Outstanding Results.

# FOR SALE



Bedrooms:4/ Washrooms:4
Markham



Bedrooms:1+1 / Washrooms:1
Toronto



Bedrooms:3/ Washrooms:
Richmond Hill



Bedrooms:4+1/ Washrooms:4
Markham



Bedrooms:3/ Washrooms:4
Vaughan



Bedrooms:3/ Washrooms:3
Markham



Bedrooms:3/ Washrooms:3
Whitby



Bedrooms:1/ Washrooms:1
Toronto



Bedrooms:2/ Washrooms:2
Toronto



Bedrooms:2+2/ Washrooms:2
Toronto



Bedrooms:4/ Washrooms:4
Mississauga



Bedrooms:4/ Washrooms:3
Markham



Bedrooms:3/ Washrooms:3
Aurora



Bedrooms:4+1/ Washrooms:5
Vaughan



RE/MAX® Excel Realty Ltd., Brokerage*
Bus: 905.475.4750 Fax: 905.475.4770
50 Acadia Ave. Suite 120, Markham, ON L3R 0B3
*Independenlty Owned And Operated

*Not intended to solicit Sellers or Buyers currently under written contract with another Realtor.*

**Raj Nadarajah**
Sales Representative
**Dir: 416.333.6115**
nanohomes@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org